ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අංක 2109 - 2019 පෙබරවාරි මස 01 වැනි සිකුරාදා - 2019.02.01
*2109 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 236 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 252 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2019, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, பெப்புருவரி மாதம் 08 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

233-B 81490-5,403 (2019/01)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலூவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலூவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லூத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலூவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லூப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலூம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லூமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லூமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லூத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லூத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லூவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லூ விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலூல் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்

## ஆரம்பத் திறனற்ற சேவைப் பிரிவின் உயிர்காப்பு உத்தியோகத்தர் பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்தல் - 2019

விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் ஆரம்ப திறனற்ற சேவைப்பிரிவின் பதவிகளில் காணப்படும் வெற்றிடங்களுக்காக இங்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| பதவி | சம்பளப் பிரிவு | பதவி வெற்றிடங்கள் |
|---|---|---|
| உயிர்காப்பு உத்தியோகத்தர் - III தரத்திற்காக | PL-01-2016 | 07 |

1. **கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் :**

1.1 **கல்வித் தகைமை :**

1.1.1 க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் இரண்டு திறமைச் சித்திகளுடன் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

1.2 **தொழில்சார் தகைமைகள் :**

அங்கீகரிக்கப்பட்ட அரச நிறுவனம் ஒன்றினால் அல்லது உயிர்காப்பு தேசிய சங்கத்தினால் உயிர்காப்பு தொடர்பான வெண்கலப் பதக்க சான்றிதழைப் பெற்றிருத்தல் அல்லது உயிர்காப்பு பயிற்சி தொடர்பில் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றின் மூலம் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

1.3 **அனுபவம் :** உரிய துறையின் சேவை அனுபவம் மேலதிக தகைமையாக கருதப்படும்.

1.4 **உடற்தகைமை :**

1.4.1 சகல விண்ணப்பதாரர்களும் இலங்கையின் எந்தப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும் பதவியில் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதியளவு உடல் மற்றும் மனோநிலை தகைமை கொண்டவர்களாக இருத்தல் வேண்டும்.

1.5 **ஏனைய தகைமைகள் :**

1.5.1 சகல நியமனங்களும் வழங்கப்படுவது இந்நியமனங்கள் பெற்றுக் கொள்பவர்கள் இத்திணைக்களத்தில் சேவையாற்றுவதற்குட்பட்டு அதற்காக உடற்தகைமை கொண்டதாக வைத்தியப் பரிசோதனை மூலம் உறுதிப்படுத்தும் நிபந்தனையின் அடிப்படையிலாகும்.

1.5.2 இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

1.5.3 விண்ணப்பதாரர்கள் நன்னடத்தை கொண்டவர்களாக இருத்தல் வேண்டும்.

1.5.4 பதவிக்கு சேர்த்துக் கொள்வதற்காகத் தேவையான சகல தகைமைகளையும் 2019.01.01 ஆந் திகதியன்று சகல முறைகளிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

2. 1. I. சம்பளக் குறியீடு : (PL-01-2016)

II. சம்பள அளவு : ரூபா 25,250 - 10x250 - 10x270 - 10x300 - 12x330 - ரூபா 36,410

2020.01.01 ஆந் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் பொது நிருவாகச் சுற்றறிக்கை இலக்கம் 3/2016 இற்கமைய

3. **பொது நிபந்தனைகள்**

3.1 **வயதெல்லை :** 2019.01.01 ஆந் திகதியன்று 18 வயதை விடக் குறையாதிருக்க வேண்டியதுடன் 45 வயதை விட மேற்படாதிருக்கவும் வேண்டும்.

3.2 ஆட்சேர்ப்பு ஒழுங்கு விதிமுறை : தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை

(தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையில் தகைமைகள் பரிசோதனைக்குட்படுத்தப்படும்)

| பரிசோதனை செய்து புள்ளி வழங்கும் பிரதான தலைப்புக்கள் | உயர்ந்த பட்ச புள்ளிகள் | தேர்ந்தெடுப்பதற்காக கருத்திற் கொள்ளப் படும் குறைந்தபட்ச புள்ளிகளின் அளவு |
|---|---|---|
| 1. மேலதிக கல்வித் தகைமை | 35 | |
| 2. மேலதிக தொழிற் தகைமை | 20 | |
| 3. உரிய துறைசார்ந்த அனுபவம் | 20 | 40% |
| 4. நீச்சல் மற்றும் முதலுதவி இயலுமை | 20 | |
| 5. நேர்முகப் பரீட்சை சபையில் காண்பிக்கப்படும் தகைமை தலைமைத்துவம், சிந்தனை, ஆளுமை மற்றும் தொடர்பு சாதன திறமை | 05 | |
| மொத்தம் | 100 | |

4. **தேர்ந்தெடுப்பதற்கான ஒழுங்கு விதிமுறைகள்**

4.1 தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையில் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் திறமைத் தொடர் மற்றும் காணப்படும் வெற்றிட எண்ணிக்கைக்கமைய விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் சேவைக்குச் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

5. **விண்ணப்பப்படிவத்தைத் தயாரித்தல்** - விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்தல்

5.1 விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்பட வேண்டியது சேவைக்கு இணைய எதிர்பார்க்கும் மொழி மூலத்தின் ஊடாக மாத்திரமாகும்.

5.2 சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலம் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப்படிவங்களில் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பதவி நாமம் அம்மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

5.3 இவ் அறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கமைய A4 அளவின் கடதாசியில் விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்பட வேண்டும்.

5.4 **உறுதிப்படுத்தல்** - தற்போது அரச சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரரின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட வேண்டியது உரிய திணைக்களப் பொறுப்பாளர் அல்லது அவரினால் அவ்வாறு மேற்கொள்வதற்கு அதிகாரம் கொண்ட உத்தியோகத்தர் மூலமாகும். ஏனைய விண்ணப்பதாரர்களின் கையொப்பம் அவற்றை உறுதிப்படுத்துவதற்கு அதிகாரம் கொண்ட ஒருவரினால் உறுதிப்படுத்த வேண்டும். அதாவது சமாதான நீதவான், சத்திய ஆணையாளர், சட்டத்தரணி, நொத்தாரிசு, அரச பாடசாலை அதிபர், வருடாந்தம் ரூபா 240,360/- அல்லது அதனை விட மேற்பட்ட சம்பளத்தைப் பெறும் அரசாங்கத்தின் நிரந்த உத்தியோகத்தர், பௌத்த விகாரையின் விகாராதிபதி அல்லது தலைமைத் தேரர், ஏனைய சமய வணக்கஸ்தலத்திற்குப் பொறுப்பான அல்லது சமயத் தலைவராக கருதக்கூடிய ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

5.5 அரசாங்கத்தின் திணைக்களம்/ சபைகள்/ நிலையியற் சபை ஆகியவற்றில் தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பப்படிவத்தை தாம் சேவையாற்றும் திணைக்களம் அல்லது நிறுவனத்தின் பொறுப்பாளர் ஊடாக சமர்ப்பிக்க வேண்டும்.

5.6 **போலித் தகவல்களை வழங்குதல்**

இந் நேர்முகப் பரீட்சைக்காக சமர்ப்பிப்பதற்காக எவரேனும் விண்ணப்பதாரி தகைமைற்றவர் எனத் தெரியவரும் பட்சத்தில் அல்லது சமர்ப்பிக்கப்பட்டுள்ள எவையேனும் தகவல் உண்மைக்குப் புறம்பானது என அறிந்தே சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அல்லது ஏதேனும் முக்கியத்துவம் வாய்ந்த விடயத்தை தெரிந்தே மூடி மறைப்பதாக தெரியவரும் பட்சத்தில் நேர்முகப் பரீட்சை நடைபெறும் வேளையில் அல்லது நேர்முகப் பரீட்சைக்குப் பின்னர் அவரின் பரீட்சார்த்தி அந்தஸ்தினை இரத்துச் செய்வதற்கும், சேவைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டதன் பின்னர் அவ்வாறு தெரியவரும் பட்சத்தில சேவையிலிருந்து நீக்கவும் வாய்ப்புள்ளது.

6. **விண்ணப்பப்படிவத்தை அனுப்புதல்.**

6.1 விண்ணப்பதாரியினால் இவ் அறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2019.02.18 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழ்க் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது நேரடியாக கொண்டுவந்து கையளிக்க வேண்டும்.

6.2 கல்வித் தகைமை மற்றும் தொழிற்தகைமை, அனுபவத்தை உறுதிப்படுத்துவதற்கான சான்றிதழ் அல்லது ஆவணங்களின் உறுதிப்படுத்தப்பட்ட போட்டோப் பிரதி விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

6.3 விண்ணப்பப்படிவத்தை அனுப்பும் முகவரி:

பணிப்பாளர் நாயகம்,
விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்,
இலக்கம் 09, பிலிப் குணவர்தன மாவத்தை,
கொழும்பு 07.

6.4 விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "ஆரம்பத் திறனற்ற சேவைப்பிரிவின் உயிர்காப்பு உத்தியோகத்தர் பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்தல் - 2019 (உயிர் காப்பு உத்தியோகத்தர்)" எனத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

6.5 மேலதிக விபரங்களுக்காக www.sportsdev.gov.lk மற்றும் www.sportsmin.gov.lk இணையத் தளத்தைப் பார்க்கவும்.

7. **பரீட்சார்த்தியின் அடையாளங்கள்**

தகைமைப் பரிசீலனையின் போது விண்ணப்பதாரர்கள் தமது அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். இதற்காக கீழ்க் குறிப்பிடப்பட்ட ஆவணங்கள் அங்கீகரிக்கப்படும்.:

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட செல்லுபடியாகும் தேசிய ஆள் அடையாள அட்டை அல்லது;

(ii) செல்லுபடியாகும் வெளிநாட்டுக் கடவுச் சீட்டு.

8. **சேவையில் ஈடுபடுவதற்கான நிபந்தனைகள்**

8.1 இப் பதவி நிரந்தரமானது, ஓய்வூதிய சம்பளம் கொண்டது. (ஓய்வூதிய சம்பள முறை தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை அடிப்படையிலான தீர்மானங்களுக்கு உட்பட வேண்டும்.)

8.2 **சேவை நிபந்தனைகள்**

சகல நியமனங்கள் தொடர்பிலும் அரச சேவை ஆணைக்குழுவின் இலக்கம் 1589/30 மற்றும் 2009.02.20 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ள அரச சேவை ஆணைக்குழுவின் செயற்பாட்டு ஒழுங்கு விதிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் தாபன விதிக்கோவையின் ஒழுங்கு விதிமுறைகளுக்கு உரியதாகும்.

9. தம்மால் தெரிந்தே சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் தகவல்கள் உண்மைக்குப் புறம்பானது எனத் தெரியவரும் பட்சத்தில் அல்லது விண்ணப்பதாரி தெரிந்தே ஏதேனும் ஒரு விடயத்தை மறைத்திருப்பதாக தெரியவரும் பட்சத்தில் இன்றேல் தகைமையற்றவர் என சேவையாற்றும் காலப்பகுதிக்குள் எப்போதேனும் உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் அவர் சேவையிலிருந்து நீக்கப்படுவார்.

தம்மிக்க முதுகல,
பணிப்பாளர் நாயகம்,
விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்,

இலக்கம் 09, பிலிப் குணவர்தன மாவத்தை,
கொழும்பு 07,
2019.02.01.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்**

**ஆரம்பத் திறனற்ற சேவைப் பிரிவின் உயிர்காப்பு உத்தியோகத்தர்களை சேர்த்துக் கொள்ளல் - 2019**

தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக்காகத் தோற்றும் மொழி மூலம்

சிங்களம் - 2
தமிழ் - 3 ☐
(கூட்டினுள் உரிய இலக்கத்தை இடவும்)

01. முழுப் பெயர் :
........................................................................................................................................
........................................................................................................................................

02. முதலெழுத்துக்களுடன் பெயர் : (உ-ம் : GUNAWARDANA, M.G.B.S.K )
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில் நிரப்பவும்.)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |

03. தேசிய ஆளடையாளஅட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

04. பால் : (ஆண்/பெண்) :

ஆண் - 0
பெண் - 1 ☐ (கூட்டினுள் உரிய இலக்கத்தை இடவும்.)

05. நிரந்தர முகவரி :

(அ) நிரந்தரமாக வதியும் மாவட்டம் : ..............................................................................
(ஆ) பிரதேச செயலகப் பிரிவு : ..............................................................................
(இ) தொலைபேசி இலக்கம் : ..............................................................................

06. பிறந்த திகதி :
(அ) ஆண்டு : .................. மாதம் :................ திகதி :...............

(ஆ) 2019.01.01 ஆந் திகதியன்று வயது : வருடங்கள் :............ மாதங்கள் : ............ நாட்கள் :............

07. விவாக நிலை : திருமணமானவர் - 1
திருமணமாகாதவர் - 2 ☐
(கூட்டினுள் உரிய இலக்கத்தை இடவும்.)

08. கல்வித் தகைமை :
(அ) க.பொ.த (சா.த.) பரீட்சை : முதற் தடவை
ஆண்டு :........................
சுட்டெண் :........................

| தொடர் இல. | பாடம் | தரம் |
|---|---|---|
| 01 | | |
| 02 | | |
| 03 | | |
| 04 | | |
| 05 | | |
| 06 | | |
| 07 | | |
| 08 | | |
| 09 | | |
| 10 | | |

க.பொ.த (சா.த.) பரீட்சை : இரண்டாம் தடவை
ஆண்டு :........................
சுட்டெண் :........................

| தொடர் இல. | பாடம் | தரம் |
|---|---|---|
| 01 | | |
| 02 | | |
| 03 | | |
| 04 | | |
| 05 | | |
| 06 | | |
| 07 | | |
| 08 | | |
| 09 | | |
| 10 | | |

(ஆ) க.பொ.த (உ./த.) பரீட்சை :
ஆண்டு :......................
சுட்டெண் :......................

| தொடர் இல. | பாடம் | தரம் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

09. தொழிற் தகைமை : (உரிய சான்றிதழ்கள், உறுதிப்படுத்தப்பட்ட போட்டோப் பிரதியை விண்ணப்பப்படிவத்துடன் சமர்ப்பிக்கவும்.

9.1. உரிய துறைசார்ந்த சேவை அனுபவங்கள் : ..........................

10. மேலதிக கல்வித் தகைமை மற்றும் ஏனைய தகைமைகள் :...............................

11. தாங்கள் ஏதேனும் தவறுக்காக நீதிமன்றத்தினால் தண்டனை அல்லது தற்போது தங்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் நீதிமன்றச் செயற்பாடுகள் காணப்படுகின்றதா ? ஆம் / இல்லை

11.1. ஆம் எனின் விளக்கவும்.
..........................................................................................................................
..........................................................................................................................
..............................................................................

12. விண்ணப்பதாரியின் சான்றிதழ் :

(அ) இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதும் சரியானதும் என்று தெரிவிக்கிறேன்.

(ஆ) என்னால் வழங்கப்பட்டுள்ள இத் தகவல்கள் உண்மைக்குப் புறம்பானது என உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் சேவைக்கு சேர்த்துக் கொள்ளத் தகைமையற்றவர் என்றும் நியமனம் வழங்கியதன் பின்னர் அது உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் சேவையிலிருந்து நீக்கவும் கட்டுப்பட வேண்டும் என்பதை அறிந்துள்ளேன்.

(இ) மேலும் பரீட்சை நடாத்துவது தொடர்பில் விதிக்கப்பட்டுள்ள சட்ட ஒழுங்குகளுக்கு கட்டுப்படுவதாகவும் இத்தால் அறிவிக்கிறேன்.

(ஈ) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் தகவலைப் பின்னர் மாற்றியமைக்கமாட்டேன்.

.......................... ..........................,
திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்.

13. விண்ணப்பதாரியின் கையொப்பதை உறுதிப்படுத்தல்

இவ் விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கும் .......................................பெயர் கொண்டவரை தனிப்பட்ட ரீதியில் அறிந்துள்ளதாகவும் அவர் ...................... ஆந் தினம் என் முன்னிலையில் கையொப்பம் இட்டதாகவும் உறுதிப்படுத்துகிறேன்.

.......................... ..........................,
திகதி உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

14. திணைக்களம் /நிறுவனப் பொறுப்பாளரின் உறுதியுரை :

இவ் விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ................................................ என்பவர் ...................................... அமைச்சில்/ திணைக்களத்தில்/ நிறுவனத்தில் .............................................

.............. என நிரந்தர/ சமயாசமய/ தற்காலிக பதவியில் .................... ஆந் தினம் தொடக்கம் சேவையாற்றுவதுடன், அவருக்கு எதிராக ஒழுக்காற்று குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன/ இல்லை. அவரின் பணி சமுகமளிப்பு மற்றும் செயற்பாடுகள் திருப்திகரமானவை/திருப்தியற்றவை, அவர் இப்பதவிக்காக தேர்ந்தெடுக்கப்படும் பட்சத்தில் இவ் அமைச்சு/ திணைக்களம்/நிறுவன சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது என அறிவிக்கிறேன்.

.........................................
நிறுவனப் பொறுப்பாளரின் கையொப்பம்,
(பதவி முத்திரை).

பதவி : .............................
திகதி :.............................

2-225/1

---

## விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்

## முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பமல்லாத - வகை 2 சேவைப்பிரிவின் உடற்பயிற்சி உதவியாளர் மற்றும் விளையாட்டுத் தள எழுது வினைஞர் பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்தல் - 2019

விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பமல்லாத - வகை 2 சேவைப்பிரிவின் உத்தியோகத்தர் பதவிகளில் காணப்படும் வெற்றிடங்களுக்காக இங்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பப்படிவங்கள் கோரப்படுகின்றன.

| பதவி | சம்பளப் பிரிவு | வேலை வெற்றிடங்கள் |
|---|---|---|
| உடற்பயிற்சி உதவியாளர் - III தரத்திற்காக | MN-01-2016 | 10 |
| விளையாட்டுத் தள எழுது வினைஞர் - III தரத்திற்காக | MN-01-2016 | 06 |

01. **கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் :**

1.1 **கல்வித் தகைமை :**

1.1.1 சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி, கணிதம் மற்றும் மேலும் இரு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் 06 பாடங்களில் கல்விப் பொதுத்தராதர பத்திர (சாதாரண தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

1.1.2 க.பொ.த. (உ.த.) பரீட்சையில் குறைந்தபட்சம் ஒரு பாடமேனும் (01) (சாதாரண பொதுப் பரீட்சையைத் தவிர) சித்தியடைந்திருத்தல்.

1.2 **தொழில்சார் தகைமைகள் :**

1.2.1 துறையில் பெற்றுள்ள தொழில்சார் தகைமைகள் விசேட தகைமையாகக் கருதப்படும்.

உடற்பயிற்சி உதவியாளர் பதவிக்காக உடற்தகைமை தொடர்பாக இரு வாரங்களை விட மேற்பட்ட பயிற்சிப் பாடநெறியினைத் தொடர்ந்திருக்க வேண்டும்.

1.3 **அனுபவம்** : உடற்பயிற்சி உதவியாளர் பதவிக்காக உரிய துறையின் சேவை அனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படுகின்றது.

1.4. **உடற்தகைமை :**

1.4.1 சகல விண்ணப்பதாரர்களும் இலங்கையின் எந்தப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவியில் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதியளவு உடல் மற்றும் மனோநிலை தகைமை கொண்டவர்களாக இருக்க வேண்டும்.

1.5 **ஏனைய தகைமைகள் :**

1.5.1 இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும்.

1.5.2 விண்ணப்பதாரர்கள் சிறந்த நன்னடத்தை கொண்டவர்களாக இருக்க வேண்டும்.

1.5.3 பதவிக்குச் சேர்த்துக் கொள்வதற்காகத் தேவையான சகல தகைமைகளையும் 2019.01.01 ஆந் திகதியன்று சகல முறைகளிலும் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

2. I. சம்பளக் குறியீடு : MN-01-2016

II. சம்பள அளவு : ரூபா 27,140 - 10 × 300 - 11 × 350 - 10 × 495 - 10 × 660 - ரூபா 45,540.00

2020.01.01 ஆந் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் பொது நிருவாகச் சுற்றறிக்கை இலக்கம் 3/2016 இற்கமைய

3. **பொது நிபந்தனைகள் :**

3.1 **வயதெல்லை :** 2019.01.01 ஆந் திகதியன்று 18 வயதை விடக் குறையாதிருக்க வேண்டியதுடன், 30 வயதை விட மேற்படாதிருக்க வேண்டும்.

3.2 **ஆட்சேர்ப்பு முறை :**

| | | |
|---|---|---|
| உடற்பயிற்சி உதவியாளர் | - | தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை மற்றும் பயிற்சி பரீட்சை |
| விளையாட்டுத் தள எழுது வினைஞர் | - | தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை |

3.3. **ஆட்சேர்ப்பு செய்யும் விகிதாசாரம் :**

திறந்த - 100%

மட்டுப்படுத்தப்பட்ட - சம்பந்தப்பட்டதல்ல.

தகைமை - சம்பந்தப்பட்டதல்ல.

(தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையின்போது அடிப்படைத் தகைமை பரிசோதனைக்கு உட்படுத்தப்படும்)

(அ) தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை மற்றும் பிரயோகப் பரீட்சை- உடற்பயிற்சி உதவியாளர்

| பரிசோதனை செய்து புள்ளி வழங்கும் பிரதான தலைப்புக்கள் | உயர்ந்தபட்ச புள்ளிகள் | தேர்ந்தெடுப்பதற்காக கருத்திற் கொள்ளப் படும் குறைந்தபட்ச புள்ளிகளின் அளவு |
|---|---|---|
| 1. மேலதிக கல்வித் தகைமை | 15 | சம்பந்தப்பட்டதல்ல |
| 2. துறைக்குரிய அனுவபம் மற்றும் விளையாட்டு தொடர்பான திறமை | 30 | |
| 3. உடற்தகைமை | 20 | |
| 4. துறைசார் தகைமை | 30 | |
| 5. நேர்முகப் பரீட்சை சபையில் காண்பிக்கப்படும் தகைமை<br>தலைமைத்துவம், சிந்தனை, ஆளுமை மற்றும் தொடர்புசாதனத் திறமை | 05 | |
| மொத்தம் | 100 | |

(ஆ) தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை – விளையாட்டுத் தள எழுது வினைஞர்

| பரிசோதனை செய்து புள்ளி வழங்கும் பிரதான தலைப்புக்கள் | உயர்ந்தபட்ச புள்ளிகள் | தேர்ந்தெடுப்பதற்காக கருத்திற் கொள்ளப்படும் குறைந்தபட்ச புள்ளிகளின் அளவு |
|---|---|---|
| 1. மேலதிக கல்வித் தகைமை | 35 | கூடுதலான புள்ளிகளைப் பெற்றோரில் தகைமைத் தொடருக்கமைய ஆட்சேர்ப்பு இடம்பெறும். |
| 2. துறைசார்ந்த உரிய அனுபவம் | 20 | |
| 3. மொழித் தேர்ச்சி | 20 | |
| 4. கணினி இயலுமை | 20 | |
| 5. நேர்முகப் பரீட்சை சபையில் காண்பிக்கப்படும் தகைமை தலைமைத்துவம், சிந்தனை, ஆளுமை மற்றும் தொடர்பு சாதனத் திறமை | 05 | |
| மொத்தம் | 100 | |

4. **தேர்ந்தெடுப்பதற்கான ஒழுங்கு விதிமுறைகள்**

4.1. தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையின் போது மற்றும் பிரயோகப் பரீட்சையின் போது (உரியவாறு பெற்றுக் கொண்ட புள்ளிகளின் திறமைத் தொடரில் காணப்படும் வெற்றிட எண்ணிக்கைக்கமைய விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் சேவைக்குச் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

5. **விண்ணப்பப்படிவத்தைத் தயாரித்தல் - விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்தல்**

5.1. சேவைக்கு இணைய எதிர்பார்க்கும் மொழிமூலத்தில் மாத்திரமே விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்பட வேண்டும்.

5.2. சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலம் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப்படிவங்களில் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பதவிப்பெயர் அம்மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

5.3. இவ் அறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய A4 அளவின் கடதாசியில் விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்பட வேண்டும்.

5.4. எவரேனும் விண்ணப்பதாரி ஒருவர் 02 பதவிகளுக்காக விண்ணப்பிப்பதாயின் அவ்வவ் பதவிகளுக்காக தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும்.

5.5. **உறுதிப்படுத்தல்** - தற்போது அரச சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரரின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட வேண்டியது உரிய திணைக்களப் பொறுப்பாளர் அல்லது அவரினால் அவ்வாறு மேற்கொள்வதற்கு அதிகாரம் கொண்ட உத்தியோகத்தர் மூலமாகும். ஏனைய விண்ணப்பதாரர்களின் கையொப்பம் அவற்றை உறுதிப்படுத்துவதற்கு அதிகாரம் கொண்ட ஒருவரினால் உறுதிப்படுத்த வேண்டும். அதாவது சமாதான நீதவான், சத்திய ஆணையாளர், சட்டத்தரணி, நொத்தாரிசு, அரச பாடசாலை அதிபர், வருடாந்தம் ரூபா 240,360/- அல்லது அதனை விட மேற்பட்ட சம்பளத்தைப் பெறும் அரசாங்கத்தின் நிரந்த உத்தியோகத்தர், பௌத்த விகாரையின் விகாராதிபதி அல்லது தலைமைத் தேரர், ஏனைய சமய வணக்கஸ்தலத்திற்குப் பொறுப்பான அல்லது சமயத் தலைவராக கருதக்கூடிய ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

5.6. அரசாங்கத்தின் திணைக்களம்/ சபைகள்/ நிலையியற் சபை ஆகியவற்றில் தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பப்படிவத்தை தாம் சேவையாற்றும் திணைக்களம் அல்லது நிறுவனத்தின் பொறுப்பாளர் ஊடாக சமர்ப்பிக்க வேண்டும்.

5.7. **பிழையான தகவல்களை வழங்குதல்**

இந் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எவரேனும் விண்ணப்பதாரி தகைமைற்றவர் எனத் தெரியவரும் பட்சத்தில் அல்லது சமர்ப்பிக்கப்பட்டுள்ள எவையேனும் தகவல் உண்மைக்குப் புறம்பானவை என அறிந்தே சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அல்லது ஏதேனும் முக்கியத்துவம் வாய்ந்த விடயத்தை தெரிந்தே மூடி மறைப்பதாக தெரியவரும் பட்சத்தில் நேர்முகப் பரீட்சை நடைபெறும் வேளையில் அல்லது நேர்முகப் பரீட்சைக்குப் பின்னர் அவரின் பரீட்சார்த்தி அந்தஸ்தினை இரத்துச் செய்வதற்கும், சேவைக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டதன் பின்னர் அவ்வாறு தெரியவரும் பட்சத்தில் சேவையிலிருந்து நீக்கவும் வாய்ப்புள்ளது.

6. **விண்ணப்பப்படிவத்தை அனுப்புதல்:**

6.1. விண்ணப்பதாரியினால் இவ் அறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை 2019.02.18 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழ்க் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

6.2. கல்வித் தகைமை மற்றும் தொழிற்தகைமை, அனுபவத்தை உறுதிப்படுத்துவதற்கான சான்றிதழ் அல்லது ஆவணங்களின் உறுதிப்படுத்தப்பட்ட நிழற்படப் பிரதி விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

6.3. விண்ணப்பப்படிவத்தை அனுப்ப வேண்டிய முகவரி:

பணிப்பாளர் நாயகம்,
விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்,
இலக்கம் 09, பிலிப் குணவர்தன மாவத்தை,
கொழும்பு 07.

6.4. விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "முகாமைத்துவ உதவியாளர்- தொழில்நுட்பமல்லாத - வகை 2 சேவைப்பிரிவிற்குச் சேர்த்துக் கொள்ளல் - 2019" எனத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

மேலதிக விபரங்களுக்காக www.sportsdev.gov.lk மற்றும் www.sportsmin.gov.lk இணையத்தளத்தைப் பார்க்கவும்.

7. **பரீட்சார்த்தியின் அடையாளங்கள் :**

தகைமைப் பரிசீலனையின் போது விண்ணப்பதாரர்கள் தமது அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். இதற்காக கீழ்க் குறிப்பிடப்பட்ட ஆவணங்கள் அங்கீகரிக்கப்படும்;

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தேசிய ஆளடையாள அட்டை அல்லது;

(ii) செல்லுபடியாகும் கடவுச் சீட்டு.

8. **சேவையில் ஈடுபடுவதற்கான நிபந்தனைகள் :**

8.1. இப் பதவி நிரந்தரமானது, ஓய்வூதிய சம்பளம் கொண்டது. ஓய்வூதிய சம்பள முறை தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை அடிப்படையிலான தீர்மானங்களுக்கு உட்பட வேண்டும்.

8.2. **சேவை நிபந்தனைகள் :**

சகல நியமனங்கள் தொடர்பிலும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் இலக்கம் 1589/30 மற்றும் 2009.02.20 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயற்பாட்டு ஒழுங்கு விதிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் தாபன விதிக் கோவையின் ஒழுங்கு விதிமுறைகளுக்கு உரியதாகும்.

9. தம்மால் தெரிந்தே சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் தகவல்கள் உண்மைக்குப் புறம்பானவை எனத் தெரியவரும் பட்சத்தில் அல்லது விண்ணப்பதாரி தெரிந்தே ஏதேனும் ஒரு விடயத்தை மறைத்திருப்பதாக தெரியவரும் பட்சத்தில், இன்றேல் தகைமையற்றவர் என சேவையாற்றும் காலப்பகுதிக்குள் எப்போதேனும் உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் அவர் சேவையிலிருந்து நீக்கப்படுவார்.

தம்மிக்க முதுகல,
பணிப்பாளர் நாயகம்,
விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்,

இலக்கம் 09, பிலிப் குணவர்தன மாவத்தை,
கொழும்பு 07,
2019, பெப்புருவரி 01.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்**

**முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பமல்லாத - வகை 2 சேவைப் பிரிவின் உடற்பயிற்சி உதவியாளர் / விளையாட்டுத் தள எழுது வினைஞரை சேர்த்துக் கொள்ளல் - 2019**

தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை மற்றும் பிரயோக பரீட்சைக்காக தோற்றும் மொழி மூலம்

சிங்களம் - 2
தமிழ் - 3 ☐

(கூட்டினுள் உரிய இலக்கத்தை இடவும்)

விண்ணப்பிக்கும் பதவி உடற்பயிற்சி உதவியாளர் - 1
விளையாட்டுத் தள எழுது வினைஞர் - 2 ☐

(கூட்டினுள் உரிய இலக்கத்தை இடவும்)

01. முழுப்பெயர் : ..........................................................................................................................................................
..........................................................................................................................................................

02. முதலெழுத்துக்களுடன் பெயர் : (உ-ம் : GUNAWARDANA M.G.B.S.K )
(ஆங்கில பெரிய எழுத்துக்களில் நிரப்பவும்)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |

03. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

05. பால் : (ஆண்/பெண்):

ஆண் - 0
பெண் - 1 ☐

(கூட்டினுள் உரிய இலக்கத்தை இடவும்)

05. நிரந்தர முகவரி : ..........................................................................................................................................................
..........................................................................................................................................................

(அ) நிரந்தரமாக வதியும் மாவட்டம் : ..................................................
(ஆ) பிரதேச செயலகப் பிரிவு : ..........................................................
(இ) தொலைபேசி இலக்கம் : ..............................................................

06. பிறந்த திகதி :

(அ) ஆண்டு : .................. மாதம் : ............... திகதி :............

(ஆ) 2019.01.01 ஆந் திகதியன்று வயது : வருடங்கள் : ............ மாதங்கள் : ............ நாட்கள் :..........

07. விவாக நிலை : திருமணமானவர் - 1
திருமணமாகாதவர் - 2 ☐

( கூட்டினுள் உரிய இலக்கத்தை இடவும்)

08. கல்வித் தகைமைகள் :

(அ) க.பொ.த (சா.த.) பரீட்சை :

ஆண்டு : ..............................

பரீட்சை இலக்கம் : ...........................

| தொடர் இல. | பாடம் | தரம் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

(ஆ) க.பொ.த (உ.த.) பரீட்சை :

ஆண்டு : ................................

பரீட்சை இலக்கம் :........................

| தொடர் இல. | பாடம் | தரம் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

09. தொழிற் தகைமை : (உரிய சான்றிதழ்கள், உறுதிப்படுத்தப்பட்ட நிழற்படப் பிரதியை விண்ணப்பப்படிவத்துடன் சமர்ப்பிக்கவும்.

9.1. துறைக்குரிய அனுபவங்கள் : ........................

10. மேலதிக கல்வித் தகைமைகள் மற்றும் ஏனைய தகைமைகள் : .............................

11. தாங்கள் ஏதேனும் தவறுக்காக நீதிமன்றத்தினால் தண்டனை பெற்றுள்ளீர்களா அல்லது தற்போது தங்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் நீதிமன்றச் செயற்பாடுகள் ஏதேனும் காணப்படுகின்றனவா ? ஆம் / இல்லை

11.1. ஆம் எனின் விபரம் தருக.

.................................................................................................................................

.................................................................................................................................

..........................................................................................

12. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

(அ) இவ் விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவையும் சரியானவையும் என்று தெரிவிக்கிறேன்.

(ஆ) என்னால் வழங்கப்பட்டுள்ள இவ் வெளிப்பாடுகள் உண்மைக்குப் புறம்பானவை என உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் சேவைக்கு சேர்த்துக் கொள்ளத் தகைமையற்றவர் என்றும் மற்றும் நியமனம் வழங்கியதன் பின்னர் அது உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் சேவையிலிருந்து நீக்கப்படவும் ஆளாவேன் என்பதை அறிந்துள்ளேன்.

(இ) மேலும் பரீட்சை நடாத்துவது தொடர்பில் விதிக்கப்பட்டுள்ள சட்ட ஒழுங்குகளுக்கு கட்டுப்படுவதாகவும் இத்தால் அறிவிக்கிறேன்.

(ஈ) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் தகவலைப் பின்னர் மாற்றியமைக்கமாட்டேன்.

..................... ...........................

திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்.

13. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இவ் விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கும் ………………………………….. என்பவரை தனிப்பட்ட ரீதியில் அறிந்துள்ளேன் எனவும் அவர் …………………… ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பம் இட்டாரெனவும் உறுதிப்படுத்துகிறேன்.

……………………..
திகதி :………………… உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

14. திணைக்கள /நிறுவனப் பொறுப்பாளரின் உறுதியுரை :

இவ் விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி……………………………….................. என்பவர் ……………………………………அமைச்சில்/திணைக்களத்தில்/நிறுவனத்தில்……………………………………… நிரந்தர/ சமயாசமய/ தற்காலிக பதவியில் ………………… ஆந் திகதி தொடக்கம் சேவையாற்றுவதுடன், அவருக்கு எதிராக ஒழுக்காற்று குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது/ இல்லை. அவரின் பணி சமுகமளிப்பு மற்றும் செயற்பாடுகள் திருப்திகரமானது/திருப்தியற்றது, அவர் இப்பதவிக்காக தேர்ந்தெடுக்கப்படும் பட்சத்தில் இவ் அமைச்சு/ திணைக்களம்/ நிறுவன சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது என அறிவிக்கிறேன்.

……………………………………
நிறுவனப் பொறுப்பாளரின் கையொப்பம்,
(பதவிமுத்திரை).

பதவி : …………………………
திகதி :…………………………

2-225/2

---

## இலங்கைப் பாராளுமன்றம்

வரவேற்பு உத்தியோகத்தர் பதவி

பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாள் தொகுதியில் வெற்றிடம் நிலவுகின்ற வரவேற்பு உத்தியோகத்தர் பதவிக்கு நல்ல தேகாரோக்கியமும் நல்லொழுக்கமும் உடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்த அறிவித்தலின் இறுதியிலுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2019.02.15 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வண்ணம் "பாராளுமன்ற செயலாளர் நாயகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர, கோட்டே" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பத்தை தாங்கிவரும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வரவேற்பு உத்தியோகத்தர் பதவி" என குறிப்பிடுதல் வேண்டும். (இந்த அறிவித்தல் பற்றிய விபரங்களை www.parliament.lk எனும் இணையத் தளத்திலும் பெற்றுக் கொள்ளலாம்).

1. **சம்பள அளவுத்திட்டம்**:-

2016.11.07 ஆந் திகதிய 06/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் I ஆம் அட்டவணைக்கு இணங்க இந்தப் பதவியிற்கு உரித்தான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 30,350-11 × 330/10 × 380 - ரூபா 37,780 ஆகும். ஆகையால், தேர்ந்தெடுக்கப் படும் நபர்களுக்கு நியமனத் திகதியிலிருந்து செயல்வலுப் பெறும் வகையில் மேற்குறித்த சுற்றறிக்கையிலுள்ள II ஆம் அட்டவணையின் பிரகாரம் ரூபா 27,214.00 மாதாந்த சம்பளப் படிநிலையில் அமர்த்தப்பட்டு சம்பளம் செலுத்தப்படும் (சகல மேலதிக கொடுப்பனவுகளும் அடங்கலாக இந்த சம்பள அளவுத்திட்டத்திற்குரிய ஆகக்குறைந்த ஆரம்ப சராசரி மாதாந்த சம்பளம் அண்ணளவாக ரூபா 57,000.00 ஆகும்).

2. **கல்வித் தகைமைகளும் தொழிற்றகைமைகளும்**:

(அ) கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரப்) பரீட்சையில் ஒரே தடவையில் சிங்களம்/தமிழ், கணிதம்/எண் கணிதம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று பாடங்கள் அடங்கலாக ஐந்து திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் (06) சித்தி அடைந்திருத்தல்.

மற்றும்

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தினால் அல்லது அரசாங்க அங்கீகாரம் பெற்ற அத்தகைய ஒரு நிறுவனத்தால் நடப்படும் ஒரு வருடத்திற்கு குறையாத ஆங்கில டிப்ளோமா பாடநெறியை வெற்றிகரமாக பின்பற்றி அதில் சித்தி அடைந்திருத்தல்.

**மேலதிகத் தகைமைகள்:**

(அ) சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் ஆகிய மொழிகளுக்கு மேலதிகமாக வேறேதேனும் அந்நிய மொழிகளில் உரையாடக்கூடிய திறமை விஷேட தகைமையாக கருதப்படும்.

(ஆ) தாய் மொழி சிங்களமாயின், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும், தாய் மொழி தமிழாயின், சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளிலும் தேர்ச்சியுள்ளவர்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படும்.

(இ) கணினி பிரயோகம் மற்றும் சிங்களம்/தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நன்றாக உரையாடக்கூடிய திறன்.

**விதிவிலக்கு:**

10 வருடங்களுக்கு குறையாத திருப்திகரமான சேவைக் காலத்தைக் கொண்டுள்ள பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியில் A, B மற்றும் C ஆகிய சம்பளத் தொகுதியினுள் வரும் உத்தியோகத்தர்கள் மேற்குறித்த 2 (ஆ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்திருக்க வேண்டும் என்ற அவசியமில்லை.

3. **வயதெல்லை:**

2019.02.15 ஆந் திகதி அன்று 18 வயதுக்குக் குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. **ஆட்சேர்ப்புத் திட்டம்:**

எழுத்துமூலப் பரீட்சை/பேச்சு மொழிப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம் ஆட்சேர்த்துக்கொள்ளப்படும்.

5. **சேவையில் அமர்த்துவதற்கான நியதிகளும் நிபந்தனைகளும்:**

(i) இந்தப் பதவி நிரந்தரமானது. இந்தப் பதவிகளுக்குரிய ஓய்வூதிய சம்பள அளவுத் திட்டம் தொடர்பில் அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு விண்ணப்பதாரர்கள் இயைந்தொழுக வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் முதலில் மூன்று (03) வருட தகுதிகாண் கால அடிப்படையில் நியமிக்கப்படுவார்கள். ஏற்கெனவே அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் ஓய்வூதிய உரித்துடைய பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள எவரேனும் நபர் ஒருவர் தெரிவுசெய்யப்பட்டால் அத்தகைய நபர் ஒரு வருட பதில் கடமை கால அடிப்படையில் நியமிக்கப்படுவார்.

(ii) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதிக்கு ஏற்புடைய நிதி மற்றும் திணைக்கள ஒழுங்குவிதிகளுக்கு இயைந்தொழுக வேண்டும்.

(iii) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் அநாதைகள், விதவைகள் / தபுதாரர் ஓய்வூதிய நிதியத்திற்கு அவரது சம்பளத்திலிருந்து அரசாங்கம் தீர்மானிக்கும் விகிதாசாரத்தில் ஒரு பங்களிப்பு தொகையை செலுத்த வேண்டும்.

(iv) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப் படுவார்கள்.

(v) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் நியமிக்கப்படுவதற்கு முன்னர் அவர்கள் தொடர்பான பாதுகாப்பு பற்றிய சான்றறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்படும்.

6. கீழ்காணும் சான்றிதழ்களின் (மூலப்பிரதிகளல்ல) பிரதிகளை விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். சமர்ப்பிக்குமாறு கேட்கப்படும் பட்சத்தில் மாத்திரம் அத்தகைய சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை சமர்ப்பிக்க வேண்டும்.

(அ) பிறப்புச் சான்றிதழ்

(ஆ) கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்

(இ) தொழில்சார் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்

(ஈ) அனுபவத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் :

7. அரசாங்க /மாகாண அரசாங்க சேவையில் /அரசாங்க கூட்டுத்தாபனங்களில் மற்றும் நியதிச்சட்ட சபைகளில் பணியாற்றுகின்ற விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை அந்தந்த திணைக்கள / நிறுவனத் தலைவர் ஊடாக அனுப்பி வைக்க வேண்டும்.

8. ஏதேனும் வழிகளில் செல்வாக்குகளை பிரயோகிப்பது இந்த பதவிக்கான தகமையை இழக்கச் செய்யலாம்.

9. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பின்னர் கிடைக்கப் பெறும் அல்லது மேற்குறித்த சான்றிதழ்களின் பிரதிகளின்றி அனுப்பப்படும் அல்லது திணைக்கள /நிறுவன தலைவர்கள் ஊடாக அனுப்பி வைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப் படும். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி திகதிக்கு பின்னர் திணைக்கள தலைவர் ஊடாக கிடைக்கப் பெறும் விண்ணப்பங்களும் மாதிரிப்படிவத்திற்கு அமையத் தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

டபிள்யூ. பி. டி. தசநாயக்க,
பதில் பாராளுமன்றச் செயலாளர் நாயகம்,

இலங்கைப் பாராளுமன்றம் ,
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே.
2019, பெப்புருவரி 01.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**இலங்கைப் பாராளுமன்றம் - வரவேற்பு உத்தியோகத்தர் பதவி**

01. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர்: (தமிழில்) ..........................................................................................................
..........................................................................................................

(ஆ) முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் (தமிழில்):
..........................................................................................................
..........................................................................................................

(இ) முழுப்பெயர்: (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்) (திரு./திருமதி/செல்வி)
..........................................................................................................
..........................................................................................................

02. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்:..........................................................................................

03. (அ) தனிப்பட்ட முகவரி:- ..........................................................................................................

..........................................................................................................

தொலைபேசி இலக்கம்:-..........................................................................................

(ஆ) அலுவலக முகவரி :-

..........................................................................................................

..........................................................................................................

தொலைபேசி இலக்கம்:-..........................................................................................

(பரீட்சைக்கான அனுமதி அட்டையை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி)

தனிப்பட்ட ☐ அலுவலக ☐

04. (அ) பிறந்த திகதி:..........................................................................................................

(பிறப்புச் சான்றிதழின் பிரதி இணைக்கப்படுதல் வேண்டும்)

(ஆ) 2019.02.15 ஆந் திகதியன்று வயது: வருடங்கள்:......... மாதங்கள் : .......... நாட்கள்: ........

05. விவாகமானவரா /விவாகமாகாதவரா என்ற விபரம்:-......................................................................

06. பால்: ஆண் /பெண்:-..........................................................................................................

07. இலங்கைப் பிரசையா எனும் விபரம்:-...........................................................................................

08. கல்வித் தகைமைகள்: (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)

| பரீட்சை | பாடம் | தரம் | சித்தியடைந்த ஆண்டு |
|---|---|---|---|
| க.பொ.த. (சா/த) | சிங்களம்/தமிழ் | | |
| | கணிதம் | | |
| | ஆங்கிலம் | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

09. தொழில் தகைமைகள் பற்றிய விபரம்: (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

10. அனுபவம்: (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)

..........................................................................................................................................

..........................................................................................................................................

11. தற்போதைய தொழில் பற்றிய விபரம்:

(அ) நிறுவனத்தின் பெயரும் முகவரியும்:-..........................................................................

..........................................................................................................................................

(ஆ) தற்போது வகிக்கும் பதவி:-...............................................................................................

(இ) முதல் நியமன திகதி:-.........................................................................................................

(ஈ) மாதாந்த அடிப்படை சம்பள அளவுத்திட்டம்:-......................................................................

(உ) கொடுப்னவுகள்:-...............................................................................................................

(ஊ) முழுமொத்த சம்பளம்:-.......................................................................................................

12. நீர் ஏதேனும் குற்றச்செயல் தொடர்பில் நீதிமன்றத்தில் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளீரா? அவ்வாறாயின் அது பற்றிய விபரங்களைக் குறிப்பிடுக:-

..........................................................................................................................................

..........................................................................................................................................

13. நீர் இதற்கு முன்னர் அரசாங்க சேவையில் பணியாற்றியுள்ளீரா? எனின் அது பற்றிய விபரங்களைக் குறிப்பிடுக: ..................
.....................................................................................................................................................
.....................................................................................................................................................

விண்ணப்பதாரியின் உறுதியுரை:

என்னால் இந்த விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை மற்றும் சரியானவை என உறுதியளிக்கின்றேன். இதில் தரப்பட்டுள்ள விபரங்கள் பொய்யானவை என நான் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்டால் இப்பதவிற்கு நான் தகுதியற்றவனாவேன் என்பதையும் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் எதுவித நட்டஈடுகளுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நன்கறிவேன்.

.........................................................................................

திகதி :................. விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திணைக்கள /நிறுவனத் தலைவரின் சான்றிதழ்

(அரசாங்க சேவையில் / மாகாண அரசாங்க சேவையில் / அரசாங்கக் கூட்டுத்தாபனங்களில் / நியதிச்சட்ட சபைகளில் பணியாற்றும் விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம்)

பாராளுமன்றச் செயலாளர் நாயகம் அவர்கட்கு,

இந்நிறுவனத்தில் ........................................................................................................................ பதவியை வகிக்கும் திரு./ திருமதி/செல்வி ................................................................................................................... அவர்களின் விண்ணப்பத்தை சிபாரிசு செய்து சமர்ப்பிக்கின்றேன். இவரது வேலையும் மற்றும் நடத்தையும் திருப்திகரமானது எனவும் இவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் ஏதுமில்லை எனவும் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளும் அபிப்பிராயமில்லை எனவும் நான் சான்றுப்படுத்துகின்றேன். இப்பதவிக்கு இவர் தெரிவு செய்யப்பட்டால், சேவையிலிருந்து விடுவிக்கப்படுவார் /விடுவிக்கப்பட மாட்டார்.

திகதி :....................

.........................................................................................
திணைக்கள/நிறுவனத் தலைவரின் கையொப்பம்,
(பதவி முத்திரை).

2-287

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப் பதிவாளர் பதவி - இரத்தினபுரி மாவட்டம்

விண்ணப்பம் கோரலினை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 2104 மற்றும் 2018.12.28 ஆந் திகதிய வர்த்தமானப் பத்திரிகையில் பகுதி I: தொகுதி (IIஅ) இல் என்னால் பிரிசுரிக்கப்பட்ட இரத்தினபுரி மாவட்டத்தில் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம் மேலதிக விவாகப் (கண்டிய/பொது) பதிவாளர் பதவிக்காக விண்ணப்பம் கோரும். (12-741ஆம் அறிவித்தலில் கீழ் குறிப்பிடப்படும் பிரிவில் மாத்திரம் விண்ணப்பம் கோரலினை இரத்துச் செய்கின்றேன்.

என். சீ. விதானகே,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2019, சனவரி 09.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் |
|---|---|---|
| இரத்தினபுரி | இரத்தினபுரி | நவதுன் கோறளை பிரிவின் விவாகப் (கண்டிய/பொது) பதிவாளர் பதவி |

2-64

*அரசாங்க அச்சுத் திணைக்களம்*

## இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் முகாமைத்துவ தொழில்நுட்ப உதவியாளர்கள் வகுதி 03 சேவைக்கு உரித்துடைய ஓப்செட் லிதோ இயந்திரம் இயக்குநர் பதவிக்கு ஆட்சேர்த்தல் (திறந்த அடிப்படையில்)

*பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கும் அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் வெற்றிடங்கள் காணப்படுகின்ற முகாமைத்துவ தொழில்நுட்ப உதவியாளர் வகுதி 03 சேவைக்குரித்தான அச்சக சேவை வகுப்பு* III : *தரம்* III *இல் ஓப்செட் லிதோ இயந்திரம் இயக்குநர் பதவிக்காக தகுதியானவர்களை தேர்ந்தெடுப்பதற்காக 2018.12.21 ஆந் திகதி விண்ணப்பங்கள் கோரப்பட்டன. அந்த அறிவித்தலின்படி விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டிய இறுதித் தினம் 2019.01.21 ஆந் திகதி என குறிப்பிடப்பட்டிருந்த போதும் போதுமான விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறாமையினால் விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டிய இறுதித் திகதி 2019.02.28 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்படுகின்றது.*

*அதற்கேற்றவாறு, விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட மாதிரிக்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2019.02.28 ஆந் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்போ கிடைக்கும்படி பதிவுத் தபாலில் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டெனிஸ்டர் டீ சில்வா மாவத்தை, கொழும்பு 08." என்ற முகவரிக்கு கிடைக்கும்படி பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "ஓப்செட் லிதோ அச்சு இயந்திரம் இயக்குநர் பதவிக்கு ஆட்சேர்ப்பு (திறந்த அடிப்படையில்)" என தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.*

*அதன்படி இந்தப் பதவிக்கு விண்ணப்பிப்பவர்கள் ஓப்செட் லிதோ அச்சு இயந்திரம் இயக்குநர்கள் அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தில் 05 வருடங்கள் அனுபவம் பெற்றிருப்பதுடன், தேசிய தொழிற்தகைமை மட்டம் 04 (*NVQ *4) பெற்றிராத விண்ணப்பதாரிகள் தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையில் தகைமைகளை* RPL *முறையினூடாக பெற்றிருப்பதுடன் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி விண்ணப்பத்துடன் தொடர்புடைய சான்றிதழை இணைத்து அனுப்புமாறு தயவுடன் கேட்டுக் கொள்கிறேன்.*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்,*
*அரசாங்க அச்சுத் திணைக்களம்.*

*2019.01.25.*

*2-409*

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

## தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் நிறைவேற்றுத்தர சேவை வகையின் III ஆம் தரத்திற்கு (புள்ளி விபரவியலாளர் பதவிக்கு) ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2018(2019)

*இந்தத் திணைக்களத்தில் வெற்றிடங்கள் நிலவும் நிறைவேற்றுத் தரச் சேவை வகையின்* III *ஆம் தரத்திற்கு(புள்ளி விபரவியலாளர் பதவிக்கு) பொருத்தமானவர்களைத் தெரிவு செய்யும் போட்டிப் பரீட்சை பொருட்டு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நியமங்களுக்கமைய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

*இந்தத் திணைக்களத்தின் நிறைவேற்றுத்தர சேவை வகை பொருட்டு நடைமுறையிலுள்ள ஆட்சேர்ப்புத் திட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க 30 வெற்றிடங்களை நிரப்பும் முகமாக இந்த ஆட்சேர்ப்பு இடம்பெறுவதுடன், குறித்த வெற்றிடங்கள் அனைத்தையும் அல்லது சிலவற்றை நிரப்புதல் அல்லது நிரப்பாமல் விடுதல் தொடர்பான இறுதித் தீர்மானம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவைச் சார்ந்ததாகும். நியமனம் செயல்வலுப் பெறும் திகதி அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.*

*விண்ணப்பப்படிவங்கள் கோரப்படும் இறுதித் திகதி - 2019.03.01*

*1.* **சம்பள அளவுத் திட்டம்**

*2016.02.25 ஆந் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 03/2016 இன் அட்டவணை 1 இற்கு அமைய* SL-1-2016 *இல் ரூபா 47,615 - 10 × 1,335 - 8 × 1,630 - 17 × 2,170 - ரூபா 110,895 (மாதாந்த) சம்பளத் திட்டம் உரித்துடையதாகும்.*

*2.* **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்**

**I.** *அரசாங்க சேவையின் நியமனங்களை கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் நிறைவேற்றுத்தர சேவை வகையின் பொருட்டான ஆட்சேர்ப்புத் திட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் குறித்த ஆட்சேர்ப்புத் திட்டத்துக்கு*

செய்யப்பட்டுள்ள அல்லது எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள திருத்தங்களுக்கும் தாபனவிதிக்கோவையினதும் நிதி ஒழுங்குவிதிகளினதும் ஏற்பாடுகளுக்கும் 1589/30ஆம் இலக்கம் 2009.02.20 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும் அமைய தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் III ஆம் தரத்திற்கு நியமிக்கப்படுவார்கள்.

II. அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இல. 21/2017 இன்படி இப்பதவி ஓய்வூதிய உரித்தடையதாகும். தங்களுக்குரிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பில் அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கைசார் தீர்மானத்திற்கு தாங்கள் கீழ்ப்படிதல் வேண்டும். மேலும் விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு /தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்பு செய்தல் வேண்டும். அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் விதித்துரைக்கப்படும் விதத்தில் தாங்கள் பங்களிப்புத் தொகையை செலுத்துதல் வேண்டும்.

III. இப்பதவிக்கு நியமனம் செய்யப்படும் உத்தியோகத்தர்கள் மூன்று (03) வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுதல் வேண்டும்.

IV. நிறைவேற்றுத்தர சேவை வகையின் III ஆம் தரத்திற்கு நியமிக்கப்பட்டு மூன்று (03) வருடங்களுக்குள் முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

V. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அதிகாரத்தின் ஏற்பாடுகள் மற்றும் அரசின் மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துதல் தொடர்பில் தற்போது நடைமுறையிலிருக்கும் எதிர்காலத்தில் விதிக்கப்படவுள்ள சட்டதிட்டங்கள் ஆகியவற்றுக்கேற்ப செயலாற்றுதல் வேண்டும். அதற்கமைய, தற்போது நடைமுறையிலுள்ள அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 01/2014 மற்றும் விளைவாந்தன்மையான சுற்றறிக்கைகளின்படி இப்பதவியில் நியமிக்கப்பட்டு ஐந்து(05) வருடங்களுக்குள் உரிய அரசகரும மொழி தொடர்பான தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

VI. தமக்கு வழங்கப்பட்ட பதவியின் கடமைகளை உரிய திகதியில் பொறுப்பேற்பதற்கு தவறும் மற்றும்/அல்லது நியமிக்கப்பட்ட பிரதேசத்தில் கடமைகளை பொறுப்பேற்க மறுக்கும் அல்லது தவிர்க்கும் விண்ணப்பதாரியின் நியமனம் இரத்துச்செய்யப்படலாம்.

**3. கல்வித் தகைமைகள்:**

(அ) புள்ளிவிபரம், கணிதம், பொருளியல், மக்களியல், சனத்தொகைக் கல்வி, கணினி விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம், புவியியல், சமூகவியல் அல்லது படவரைவியல் போன்ற பாடங்களில் குறைந்தபட்சம் ஒரு பாடத்தினைப் பிரதான பாடமாக உள்ளடக்கி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட வகுப்பு சித்தியுடன் கூடிய விசேட பட்டமொன்றை கொண்டிருத்தல்,

அல்லது

(ஆ) புள்ளிவிபரம், கணிதம், பொருளியல், மக்களியல், சனத்தொகைக் கல்வி, கணினி விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம், புவியியல், சமூகவியல் அல்லது படவரைவியல் போன்ற பாடங்களில் குறைந்தபட்சம் ஒரு பாடத்தினைப் பிரதான பாடமாக உள்ளடக்கி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட முதலாம் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு(உயர்) சித்தியுடன்கூடிய சாதாரண பட்டமொன்றை கொண்டிருத்தல்.

**குறிப்பு** :

(i) விசேட பட்டச் சான்றிதழில் சிறப்புப் பாடத்துறை தொடர்பில் தெளிவாக குறிப்பிடப்பட்டிராத சந்தர்ப்பங்களில், சிறப்புப் பாடத்துறையை பின்பற்றிய காலப்பகுதியினுள் ஈட்டப்பட வேண்டிய மொத்த தரமதிப்பு பெறுமானத்தில் 2/3 இற்குச் சமமான அல்லது அதற்கு மேற்பட்ட பெறுமானமுடைய பாடத்துறை அந்த விசேட பட்ட கற்கைநெறியின் பிரதான பாடமாக கருதப்படும்.

(ii) சாதாரண பட்டம் பொருட்டான பாடங்களுக்குரிய மொத்த தரமதிப்பு பெறுமானத்தில் 1/3 இற்குச் சமமான அல்லது அதற்கு மேற்பட்ட பெறுமானமுடைய பாடம் அந்த பட்டத்தின் பிரதான பாடமாக கருதப்படும்.

**4. உடற் தகைமைகள் :**

(i) ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் எப்பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கான எல்லாவித உடல் தகுதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ii) பதவியில் கடமையாற்றுவதற்கு போதுமான உடல்சார் ஆரோக்கியத்தினை பெற்றிருத்தல் வேண்டும்.

5. **வயதெல்லை :**

விண்ணப்பதாரிகள் 21 வயதிற்கும் 35 வயதிற்கும் இடைப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்."அதன்படி 1998.03.01 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் அத்துடன் 1984.03.01 ஆந் திகதி அல்லது அதற்கு பின்னர் பிறந்த தினத்தை கொண்டுள்ளவர்கள் மட்டும் இதற்கு விண்ணப்பிக்க தகுதியுண்டு."

6. **ஏனைய தகைமைகள்:**

I. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;

II. சிறந்த நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்;

III. பதவியில் ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான அனைத்துத் தகைமைகளையும் விண்ணப்பங்களை கோரும் இறுதித் திகதியன்றுஎல்லா விதத்திலும் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

7. **ஆட்சேர்ப்பு முறை:**

7.1 **எழுத்துப் பரீட்சை மற்றும் சாதாரண நேர்முகப் பரீட்சை:**

7.1.1 பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விடயத்தோடு தொடர்புடைய பொது அறிவு மற்றும் நுண்ணறிவு ஆகிய பாடங்களின் கீழ் நடாத்தப்படும் எழுத்துமூலப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகளிலிருந்து அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரிகளின் திறமை ஒழுங்கிற்கேற்ப மற்றும் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு இணங்க, அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படுகின்ற விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கையினர் அவ்வாணைக்குழுவினால் நியமிக்கப்படுகின்ற தகைமைகளை பரீட்சித்துப் பார்க்கும் சாதாரண நேர்முகப் பரீட்சைக் குழுவுக்கு அழைக்கப்படுவதுடன் அங்கு ஆட்சேர்ப்புத் திட்டம் மற்றும் அதற்கு ஏற்புடையவாறு பிரசுரிக்கப்படுகின்ற அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளார்களா என்பதுபற்றியும் உடற் தகைமைகளைப் பரீட்சித்துப் பார்த்ததன் பிற்பாடு அவ்வாறு தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள அத்துடன் உடற் தகுதியைக் கொண்ட விண்ணப்பதாரிகள் அவர்களது எழுத்துமூலப் பரீட்சையின் புள்ளிகளின் திறமை ஒழுங்கிற்கேற்ப இந்த பதவிகள் பொருட்டு ஆட்சேர்க்கப்படுவர்.

சாதாரண நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது. நேர்முகப் பரீட்சைக்கு அழைத்தலானது நியமனம் வழங்குவதற்கான தகைமை ஒன்றாக கருதப்படுதலாகாது.

7.1.2 **பாடத்திட்டம் :**

விடயத்தோடு தொடர்புடைய பொது அறிவு -நேரம் 2 மணித்தியாலங்கள்

(அதிகூடிய புள்ளி 100)(சித்தியடைவதற்கான புள்ளி 40%)

- தேசிய மற்றும் சர்வதேச புள்ளிவிபரங்கள்
- புள்ளிவிபரம் மற்றும் மக்கள் அபிவிருத்தி
- புள்ளிவிபரம் தொடர்பான புதிய முன்னேற்றங்கள்
- சமூகப் பொருளாதாரத் தகவல்கள்
- சுற்றாடலும் சமூகமும்
- புவியியல் விடயங்களும் சமூகமும்
- தகவல் தொழில்நுட்பம்

நுண்ணறிவு -நேரம் 1 மணித்தியாலம் (அதிகூடிய புள்ளி 100)

(சித்தியடைவதற்கான புள்ளி 40%)

- பிரச்சினைகள் மற்றும் அவற்றுக்கான காரணங்களை கண்டறிதல், தீர்மானமெடுத்தல், நபர்களுக்கிடையிலான தொடர்புகளைப் பேணல், தொடர்பாடல் திறன்கள், சுயகட்டுப்பாட்டுக் கொள்கைகள் மற்றும் உபாய மார்க்கங்களை தயாரித்தல் என்றவகையில் விண்ணப்பதாரியிடம் காணப்படும் சிறந்த முகாமைத்துவ திறன்களை செலுத்தக்கூடிய சம்பவங்கள் மற்றும் சந்தர்ப்பங்களுக்கு அமைவாக நிர்ணயம் செய்தல் இதன்மூலம் எதிர்பார்க்கப்படும்.

*7.1.3* ***பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுதல்:***

*பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பதாரர்களுக்கும் தனிப்பட்ட ரீதியில் பெறுபேறுகளை அறிவித்தலானது பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் தபாலில் மேற்கொள்ளப்படும் அல்லது* www.results.exams.gov.lk *எனும் இணையத்தளத்தில் வெளியிடப்படும்.*

*8.* ***பரீட்சை நிபந்தனைகள் :***

I. *இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பதாரி விரும்பிய ஒரு மொழியில் பரீட்சைக்கு தோற்ற முடியும். ஒவ்வொரு வினாப்பத்திரத்துக்கும் ஒரே மொழியில் விடையளிக்க வேண்டும் என்பதுடன் ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இரண்டு வினாப்பத்திரங்களுக்கும் தோற்றுதல்வேண்டும். விண்ணப்பிக்கும் மொழிமூலத்தினை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.*

II. *பரீட்சைக் கட்டணம் ரூ. 1200/- ஆகும். பரீட்சைக்கட்டணத்தினை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இற்கு வரவு வைக்கும் வகையில் நாட்டில் காணப்படும் ஏதாவதொரு தபால் அல்லது உப தபால் அலுவலகத்திற்கு அல்லது மாவட்டச் செயலகத்திற்கு அல்லது பிரதேச செயலகத்திற்கு செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரில் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டின் ஓரத்தை விண்ணப்பப்பத்திரத்தில் உரிய இடத்தில் கழறாத வகையில் ஒட்டவும். இந்தப் பரீட்சைக் கட்டணத்துக்கு மேலதிகமாக எவ்வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது. பரீட்சைக் கட்டணம் பொருட்டு காசுக் கட்டளை அல்லது முத்திரைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்பதுடன் பரீட்சைக்கு செலுத்தப்படும் பணம் எக்காரணத்திற்காகவும் திருப்பிச் செலுத்தப்பட மாட்டாது என்பதுடன் வேறு பரீட்சைக்கு மாற்றப்படவும் மாட்டாது. அப்பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை விண்ணப்பதாரி வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.*

III. *இந்தப் பரீட்சை 2019 மே மாதம் நடாத்தப்படும் என்பதுடன் அது கொழும்பில் மட்டும் நடாத்தப்படும்.*

IV. *இந்த அறிவித்தலின் இறுதியில் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை மேற்குறிப்பிடப்பட்ட திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், பரீட்சைகள் திணைக்களம்,ஒழுங்கமைப்பு(நிறுவனம்சார் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள்) கிளை, பெலவத்த, பத்தரமுல்லை" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் என்பதுடன்,அரசாங்க சேவையில் / மாகாண அரசாங்க சேவையில் / அரச கூட்டுத்தாபனங்களில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் தமது திணைக்கள / நிறுவனத்தின் தலைவர் ஊடாக அனுப்புதலும் வேண்டும். இங்கு தலைப்பிலுள்ள பரீட்சையின் பெயர்"தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் நிறைவேற்றுத்தர சேவை வகையின்* III *ஆம் தரத்திற்கு (புள்ளிவிபரவியலாளர் பதவிக்கு) ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2018(2019)" எனும் பரீட்சையின் பெயர், சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடப்படல் வேண்டும். (*Open Competitive Examination for Recruitment to Grade III of Executive Service category (Post of Statistician) of the Department of Census and Statistics)

V. *முழுமையற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அதுபற்றி விண்ணப்பதாரருக்கு அறிவிக்கப்படும். விண்ணப்பங்கள் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளார்கள் எனும் எடுகோளின் பேரில் உரியவாறு பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் சரியாக பூர்த்தி செய்து விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதி அட்டைகள் அனுப்பப்படும்.*

VI. *விண்ணப்பப்படிவத்திலும் பரீட்சைக்கான அனுமதி அட்டையிலும் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப் படுத்தப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன், கையொப்பத்தினை உறுதிப்படுத்திய அனுமதி அட்டையினை பரீட்சைக்குத் தோற்றிய முதல் தினத்திலேயே பரீட்சை மேற்பார்வையாளரிடம் ஒப்படைக்க வேண்டும்.*

VII. *அரசாங்க சேவையில்,மாகாண அரசாங்க சேவையில்,அரச கூட்டுத்தாபனங்களில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பத்தினை தமது நிறுவனத்தின் தலைவரினூடாக உறுதிப்படுத்திக் கொள்ளல் கட்டாயமானதாகும். அவ்வாறில்லாத விண்ணப்பதாரிகள் தமது கையொப்பத்தினை பாடசாலை அதிபர்/ ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்/ பிரிவின் கிராம அலுவலர் / சமாதான நீதவான் / சத்திய ஆணையாளர்/ சட்டத்தரணி/ நொத்தாரிசு/ முப்படைகளில்*

*அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர்அல்லது அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவி நிலை தரத்திலுள்ள உத்தியோகத்தர் அல்லது பௌத்த விகாரைகளின் விகாராதிபதி அல்லது தலைமை மதகுரு அல்லது ஏனைய சமயங்களின் அதிகாரத்திலுள்ள மதகுருக்கள் மூலம் உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும்.*

VIII. *விண்ணப்பதாரிக்கு பரீட்சை அனுமதி அட்டையினை விநியோகிப்பதை, அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்குரிய தகைமையினைப் பூர்த்தி செய்துள்ளார் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதலாகாது. மேலும், இந்த அறிவித்தலின் 3 ஆம் பந்தியின்*(i)/ (ii) *குறிப்புக்களிலுள்ள தேவைப்பாடுகளை பூர்த்தி செய்திராதவிடத்து, அறிவித்தலின் 7.1.2 ஆம் உபபந்தியில் காட்டப்பட்டுள்ள சித்திப்புள்ளிகளை பரீட்சையில் பெற்றிருப்பினும் இப்பதவிக்கு நியமிக்கப்படுவதற்கு தகுதியற்றவராவார்.*

IX. *விண்ணப்பப்படிவம் 22* X *29 செ.மீ. அளவிலான ஏ4 கடதாசியில் தயாரிக்க வேண்டியதுடன் 01-06 வரையான தலைப்புக்கள் முதலாம் பக்கத்திலும்,07-13 வரையான தலைப்புக்கள் இரண்டாம் பக்கத்திலும், எஞ்சியவை மூன்றாம் பக்கத்திலும் அமையும்வண்ணம் தயாரிக்கப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவம் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள், எவ்வித அறவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவானதா என்பது பற்றியும்,எல்லா தகவல்களையும் உள்ளடக்கி விண்ணப்பப்படிவம் சரியாக நிரப்பப்பட்டுள்ளதா என்பதுபற்றியும், உரிய பரீட்சைக் கட்டணத்தினை செலுத்தி அதன் விபரங்களை விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்டு பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதா என்பது பற்றியும் பரீட்சித்துப்பார்த்தல் வேண்டியதுடன், அவ்வாறில்லை எனின் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும் என்பதை மேலும் தெரிவிக்கிறேன். (பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியை விண்ணப்பதாரி கைவசம் வைத்திருப்பது பயனுடையதாகும்.)*

**பொய்யான தகவலுக்கான தண்டனைகள் :-** *விண்ணப்பப்படிவத்தை நிரப்பும்போது மிகவும் கவனமாக சரியான தகவல்களை வழங்க வேண்டும். இப்பரீட்சையின் சட்டதிட்டங்களுக்கு இணங்க எவரேனும் விண்ணப்பதாரர் தகுதியற்றவர் எனக் கண்டுபிடிக்கப்பட்டால் பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும்போது அல்லது பரீட்சையின் பின் எச்சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்தத்தன்மை இரத்துச்செய்யப்படலாம்.*

X. *வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளார்கள் எனும் எடுகோளின் பேரில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட வயதெல்லையினுள், விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக்கட்டணத்தை செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் சரியாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்படும்.அனுமதி அட்டையினை விநியோகித்தவுடன் அதுபற்றிக் குறிப்பிட்டு பரீட்சைத் திணைக்களத்தினால் அறிவித்தலொன்று செய்தித்தாள்களிலும் எமது திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலும் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் வெளியாகி 2 அல்லது 3 நாட்களுக்குப் பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கப் பெற வில்லை எனின் அறிவித்தலில் குறிப்பிட்டவாறு, அது பற்றி இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு (நிறுவனம்சார் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள்) கிளையிடம் விசாரிக்க வேண்டும். அவ்வாறு விசாரிக்கும்போது விண்ணப்பதாரி தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி என்பனவற்றை சரியாக குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியே வசிப்பவராயின், மேற்குறித்த விபரங்களுடன் தொலைநகல்மூலம் அனுமதி அட்டையின் பிரதியொன்றை விரைவாக பெற்றுக்கொள்வதற்கு ஏற்றவகையில் தொலைநகல் இலக்கத்தைக் குறிப்பிட்டு வேண்டுகோள் கடிதம் ஒன்றை அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்புவதன் மூலம் விசாரித்தல் மிகவும் பயனுள்ளதாகும். அவ்வாறு விசாரிக்கையில் பரீட்சைத் திணைக்களத்தினால் வினவும் ஏதேனும் தகவல்களை உறுதிப்படுத்துவதற்காக தம்வசம் வைத்திருந்த விண்ணப்பப்படிவத்தினது பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டினது பிரதி மற்றும் விண்ணப்பத்தை பதிவுசெய்த பற்றுச்சீட்டு ஆகியவற்றை தயார்படுத்திக்கொள்ளல் பயனுள்ளதாக இருக்கும்.*

XI. *அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் பேரில் பரீட்சையினைப் பிற்போடுவதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கான அதிகாரம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அவர்களைச் சார்ந்ததாகும்.*

XII. *பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். குறித்த சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கும் ஆளாக நேரிடும்.*

XIII. **விண்ணப்பதாரியின் ஆளடையாளம்**:- பரீட்சை மேற்பார்வையாளர் திருப்தியடையும் வகையில் ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பரீட்சை மண்டபத்தினுள் தமது ஆளடையாளத்தினை நிரூபித்தல் வேண்டும். கீழே குறிப்பிடப்படும் ஆவணங்களில் ஏதாவதொன்று மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும்:-

I. தேசிய ஆளடையாள அட்டை;
II. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு;
III. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

**கவனிக்க வேண்டியது** :-

(அ) பணம் செலுத்திய பற்றுச்சீட்டு தவிர்ந்த வேறு எவ்வித ஆவணங்களையோ அல்லது பிரதிகளையோ விண்ணப்பப்படிவத்திற்கு இணைத்தனுப்புதல் கூடாது.

(ஆ) கேட்கப்படும் சந்தர்ப்பத்தில் ஆவணங்களைச் சமர்ப்பிப்பதற்குத் தவறும் விண்ணப்பதாரிகளின் விண்ணப்பப்படிவங்கள் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

XIV. எழுத்துப் பரீட்சையில் தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சையின்போது கீழ்க் குறிப்பிடப்படும் ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்:

(a) பிறப்புச் சான்றிதழ்;

(b) தேசிய ஆள் அடையாள அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு;

(c) பட்டம் (பட்டச் சான்றிதழ் மற்றும் விபரமான பட்டச் சான்றிதழ்) மற்றும் ஏனைய கல்விச் சான்றிதழ்கள்;

(d) 02 நன்னடத்தைச் சான்றிதழ்கள் (இவற்றுள் ஒன்று கிராம அலுவலரினால் வழங்கப்பட்ட 06 மாதங்களுக்கு மேற்படாத சான்றிதழாக இருக்க வேண்டும்.);

(e) தாங்கள் பயன்படுத்தும் பெயர், பிறப்புச் சான்றிதழிலும் ஏனைய சான்றிதழ்களிலும் உள்ள பெயர்களில் மாற்றம் ஏதுமிருப்பின் அத்தகைய மாற்றத்தை தெளிவுபடுத்தும் முகமாக முறையான படிவத்திலான சத்தியக் கடதாசி (இயைபான சான்றிதழ்களின் பெயர்களை வெவ்வேறாகக் குறிப்பிட்டு அப்பெயர்களினால் குறிக்கப்படுவது ஒரே ஆள் எனக் குறிப்பிட்டு ரூ. 50.00 செல்லுபடியற்றதாக்கப்படாத முத்திரையின் மேல் தங்களது கையொப்பத்தை இட்டு சமாதான நீதவான் அல்லது சத்தியப்பிரமாண ஆணையாளர் ஒருவரினால் சான்றுப்படுத்தப்படல் வேண்டும்.) ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும்;

(f) தொழில்சார் தகைமைகள் தொடர்பான சான்றிதழ்கள் (இருப்பின்);

(g) சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் சித்தியடைந்த உயர் பரீட்சை தொடர்பான சான்றிதழ்.

XV. விண்ணப்பதாரி தகுதியற்றவர் எனக் கண்டுபிடிக்கப்பட்டால் பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும்போது அல்லது பரீட்சையின் பின் எச்சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்தத்தன்மை இரத்துச் செய்யப்படலாம். சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனும் விடயம் பொய்யானது என பதவிக்கு தெரிவு செய்யப்பட்டதன் பின் கண்டுபிடிக்கப்பட்டால் அல்லது ஏதேனும் முக்கிய விடயத்தை வேண்டுமென்றே மறைத்திருப்பின் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாகக்கூடும்.

XVI. இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத விடயங்கள் தொடர்பிலான இறுதித் தீர்மானம், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தலுக்கமைய தொகைமதிப்பு புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகத்தினால் எடுக்கப்படும்.

9. சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும் இவ்வறிவித்தலின் மொழி வசனங்களுக்கிடையே ஏதேனும் பொருந்தாமை காணப்படின், சிங்கள மொழி அறிவித்தலே வலுவானதாக அமையும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

செயலாளர்,
பொருளாதார மறுசீரமைப்பு மற்றும்
பொது வழங்கல்கள் அமைச்சு.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் நிறைவேற்றுத்தர சேவை வகையின் III ஆம் தரத்திற்கு (புள்ளிவிபரவியலாளர் பதவிக்கு) ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2018(2019)**

**Open Competitive Examination for Recruitment to Grade III of Executive Service category (Post of Statistician) of the Department of Census and Statistics – 2018(2019)**

பரீட்சை சுட்டெண் : [ ]
(அலுவலக உபயோகத்திற்காக)

பரீட்சைக்குத் தோற்ற எதிர்பார்க்கும் மொழி மூலம் : [ ]
(சிங்களம் - 2, தமிழ் - 3, ஆங்கிலம் - 4)
(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதுக.)

01. 1.1 முழுப் பெயர் : ....................................................................................................
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

1.2 முதலெழுத்துக்களை இறுதியிலிட்டு முதலெழுத்துக்களுடன் பெயர்: ........................................................
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)உதாரணம்: SUNIL, A.B.

1.3 முழுப் பெயர்: ....................................................................................................
(தமிழில் /சிங்களத்தில்)

02. நிரந்தர முகவரி :-
2.1 (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ....................................................................................

2.2 (தமிழில் /சிங்களத்தில்) : ............................................................................................

2.3 அனுமதி அட்டை அனுப்பவேண்டிய முகவரி:
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)............................................................................................

2.4 தொலைபேசி இலக்கம்: -

கையடக்க தொலைபேசி : [ | | | | | | | | | ]

நிலையான தொலைபேசி : [ | | | | | | | | | ]

03. பால்:
ஆண் - 0
பெண் - 1 [ ]
(உரிய இலக்கத்தை கூட்டில் எழுதுக.)

04. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் [ | | | | | | | | | | | ]

05. பிறந்த திகதி:
ஆண்டு [ | | | ] மாதம் [ | ] திகதி [ | ]

06. இனத் தொகுதி (உரிய கூட்டினுள் ✓ அடையாளம் இடுக.)

| | | | |
|---|---|---|---|
| சிங்களவர் | | இந்தியத் தமிழர் | |
| இலங்கைத் தமிழர் | | மலாயர் | |
| முஸ்லிம் | | வேறு | |

07. வசிக்கும் மாவட்டம் : ........................................................................................
பிரதேச செயலாளர் பிரிவு : ............................................................................

08. செலுத்திய பரீட்சைக் கட்டணம் (பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை விண்ணப்பதாரி வைத்திருப்பது நன்று.)

பணம் செலுத்திய திகதி : .....................................

பணத்தொகை : .................................

தபால் /உப தபால் அலுவலகம் : ...........................................

பற்றுச் சீட்டு இலக்கம் : ...............................................

| பற்றுச் சீட்டை கழறாதவாறு அதன் ஓரத்தை இங்கே ஒட்டவும். |
|---|

09. ஒவ்வொரு பாடத்திலும் பெற்றுள்ள உயர் சித்திகள் :- (பரீட்சையின் பெயரைக் குறிப்பிடவும்)

சிங்களம் : ..............................

தமிழ் : ..............................

ஆங்கிலம் : ..............................

10. கல்வித் தகைமைகள் :
பட்டம் தொடர்பான விபரங்கள் :

| பட்டம் | நிறுவனம் | சித்தி | பிரதான பாடங்கள் (விசேட பட்டம் பொருட்டு) அல்லது பாடங்கள் (சாதாரண பட்டம் பொருட்டு) | செல்லுபடியாகும் திகதி |
|---|---|---|---|---|
| | | | | |

வேறு கல்வித் தகைமைகள் :

| கற்கைநெறி | நிறுவனம் | பாட விபரங்கள் |
|---|---|---|
| | | |

11. வேறு தகைமைகள் : ...................................................................

12. தற்போது மற்றும் இதற்கு முன்னர் செய்த தொழில்கள் :

| நிறுவனம் | பதவி | தொடக்கம் | வரை | சம்பளம் (மாதம்) |
|---|---|---|---|---|
| | | | | |

13. நீங்கள் ஏதாவது குற்றவியல் தவறுக்காக நீதிமன்றத்தில் குற்றம் சாட்டப்பட்டவரா? ஆம் எனின் விபரம் தருக?
..................................................................................................................................................................................
..................................................................................................................................................................................

விண்ணப்பதாரியின் உறுதியுரை:

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் உறுதிப்படுத்துகிறேன். இதில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்களில் ஏதாவது பொய்யானவை அல்லது பிழையானவை என நான் தேர்ந்தெடுக்கப்பட முன்னர் கண்டு பிடிக்கப்பட்டால் நான் தகுதியற்றவனாக்கப் படுவேன் எனவும் தேர்ந்தெடுககப்பட்ட பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் எனக்கு எந்தவிதமான நட்டஈடும் வழங்கப்படாமல் சேவையிலிருந்து நீக்கப்படுவேன் எனவும் நன்கறிவேன். மேலும் பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர்

நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட திட்டங்களுக்கும் பெறுபேறுகள் வெளியிடும்போது எடுக்கப்படும் தீர்மானங்களுக்கும் நான் கட்டுப்படுவேன் எனவும் உறுதிகூறுகிறேன்.

..........................................

திகதி : .......................... விண்ணப்பதாரியின் கையொப்பம்.

விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தல்

இவ்விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ................................................................ அவர்களை நான் தனிப்பட்ட ரீதியில் நன்கறிவேன் எனவும், பணம் செலுத்திய பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதெனவும் என் முன்னிலையில் அவர் கையொப்பமிட்டார் எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

................................................,
கையொப்பம் மற்றும் பதவிமுத்திரை.

பெயர் : ........................................................................................
பதவிப் பெயர் : ........................................................................................
முகவரி : ........................................................................................
திகதி : ........................................................................................

<u>விண்ணப்பதாரி அரசாங்க திணைக்களமொன்றில் / நிறுவனமொன்றில் சேவையாற்றுவதாயின் பின்வரும் சான்றிதழுடன் தமது திணைக்கள அல்லது நிறுவனத் தலைவரினூடாக தமது விண்ணப்பத்தை அனுப்புதல் வேண்டும்.</u>

திணைக்களத் தலைவரின் சான்றிதழ்

திரு./திருமதி/செல்வி ........................................................... அவர்கள் தற்போது இத்திணைக்களத்தில் ............................... .......................... ஆக நிரந்தர/ தற்காலிக/ அமய ஊழியராகக் கடமையாற்றுகிறார். அவர் (எச்சரிக்கை செய்யப்பட்டதைத் தவிர) வேறெந்த ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் உட்படுத்தப்படவில்லை எனவும் அந்த விண்ணப்பப்படிவத்தில் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை எனவும் உறுதிப்படுத்துகிறேன். அவரின் ஒழுக்கம் மற்றும் கடமைகள் திருப்திகரமானவை எனவும், உரிய வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் அவர் இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் எனவும், உரிய பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்தியுள்ளார் எனவும், அதன் பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறேன். அவர் தெரிவு செய்யப்பட்டால் சேவையிலிருந்து விடுவிக்க முடியும் / முடியாது.

--------------------------------------------,
திணைக்கள/நிறுவனத் தலைவரின் கையொப்பமும்
பதவிமுத்திரையும்.

பெயர் : ........................................................................................
பதவிப் பெயர் : ........................................................................................
முகவரி : ........................................................................................
திகதி : ........................................................................................

*2-273*

---

**அரசாங்க சேவைகள் ஆணைக்குழு**

*அரசாங்க நிர்வாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு*

**சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு**

**சுதேச வைத்தியப் பிரிவு, ஆயுர்வேதத் திணைக்களம்**

**பண்டாரநாயக்க ஞாபகார்த்த ஆயுர்வேத ஆராய்ச்சி நிலையத்தில் இலங்கை விஞ்ஞான சேவையின் தரம் III பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை - 2018 (2019)**

ஆயுர்வேதத் திணைக்களத்தின் பண்டாரநாயக்க ஞாபகார்த்த ஆயுர்வேத ஆராய்ச்சி நிலையத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட இலங்கை விஞ்ஞான சேவையின் III ஆம் தரத்துடைய கீழுள்ள 8 பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடாத்தப்படவுள்ள ஆட்சேர்ப்புப் போட்டிப் பரீட்சைக்காக முதற் தடவையில் மாத்திரம் ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு வெளியே பண்டாரநாயக்க ஞாபகார்த்த ஆயுர்வேத

ஆராய்ச்சி நிலையத்தில் பணியாற்றும் ஆராய்ச்சி உதவியாளர் மற்றும் அபிவிருத்தி உதவியாளர் (விவசாயம்) ஆகியோரிடமிருந்து விண்ணப்பப்படிவங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலின் இறுதியில் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தினைப் பூர்த்தி செய்து, கீழே குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், தபால் பெட்டி இல. 1503, கொழும்பு" என்னும் முகவரியினை அடையக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட வேண்டும். **"ஆயுர்வேதத் திணைக்களத்தின் பண்டாரநாயக்க ஞாபகார்த்த ஆராய்ச்சி நிலையத்தின் இலங்கை விஞ்ஞான சேவையின் III ஆம் தரத்தின் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கான போட்டிப் பரீட்சை"** என விண்ணப்பம் இணைக்கப்பட்டுள்ள கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாகக் குறிக்கப்பட வேண்டும். மேலும் பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் இடுதல் வேண்டும்.

| தொடர் இல. | பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | குறியீட்டு இலக்கம் |
|---|---|---|---|
| 1 | விஞ்ஞான அலுவலர் - (தரச் சான்றிதழ்) | 01 | 01 |
| 2 | விஞ்ஞான அலுவலர் - (மருத்துவ மூலிக இயல்) | 01 | 02 |
| 3 | விஞ்ஞான அலுவலர் - (விவசாயம்) | 01 | 03 |
| 4 | விஞ்ஞான அலுவலர் - (தாவர இனப்பெருக்கம்) | 01 | 04 |
| 5 | விஞ்ஞான அலுவலர் - (மருந்தாக்கல் விருத்தி) | 01 | 05 |
| 6 | விஞ்ஞான அலுவலர் - (நுண்ணுயிரியல்) | 01 | 06 |
| 7 | விஞ்ஞான அலுவலர் - (இரசாயனம்) | 02 | 07 |

(அ ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2019.03.05 ஆகும்.

**குறிப்பு**.- விண்ணப்பப்பத்திரம் ஒன்று அல்லது அது தொடர்பான கடிதம் அஞ்சலில் காணாமற் போனதாக அல்லது தாமதம் தொடர்பாக விடுக்கப்படும் முறைப்பாடுகள் தொடர்பாக கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.இறுதித் திகதி வரை விண்ணப்பப் படிவங்களைத் தாமதப்படுத்துவதனால் ஏற்படும் இழப்புக்களை விண்ணப்பதாரிகளே பொறுப்பேற்க வேண்டும்.

யாராவது விண்ணப்பதாரியொருவர் மேற்குறிப்பிட்ட ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்கும்போது ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியாக விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிக்கக் கூடாது. அந்தப் பதவிகளுக்கான தமது விருப்பு ஒழுங்கினை ஒரே விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட வேண்டும். மேலும் அந்த விருப்பு ஒழுங்கினைப் பின்னர் மாற்றுவதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்படமாட்டாது.

1. **சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் முறைமை**.- எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகளின் அதிகூடிய புள்ளிகளின் ஒழுங்கு வரிசை மற்றும் விருப்புத் தெரிவு ஒழுங்கிலும் ஆட்சேர்ப்புச் செய்யப்படும். நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படும் எண்ணிக்கை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும் என்பதோடு விண்ணப்பதாரிகளின் தகைமை அரச சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் நேர்முகப் பரீட்சைச் சபையொன்றினால் பரீட்சிக்கப்படும். நேர்முகப் பரீட்சைக்குப் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

2. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் :**

(i) இப்பதவி நிரந்தரமானதாகும். ஓய்வூதிய உரித்துடையதாகும். நீங்கள் விதவைகள், அநாதைகள்/தபுதாரர் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புத் தொகையைச் செலுத்துதல் வேண்டும் ;

(ii) இந்தப் பதவிக்கு நியமனம் பெறும் அலுவலர்கள் ஒரு வருட பதில் கடமைக் காலத்திற்கு உட்படுத்தப்படுவர்;

(iii) 05 வருடங்களினுள்' 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் மற்றும் தொடர்புடைய சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளுக்கமைவாக மற்றைய அரச கரும மொழியில் தேர்ச்சி மட்டத்தினை அடைந்து கொள்ளல் வேண்டும். அரச கரும மொழி அல்லாத மொழி மூலம் ஒன்றினால் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்ட அலுவலர்கள் 03 வருடங்களினுள் ஒரு அரச கரும மொழி தொடர்பான தேர்ச்சியினைப் பெற்றிருக்க வேண்டும் என்பதோடு, மற்றைய அரச கரும மொழி தொடர்பான தேர்ச்சியினை 05 வருடங்களினுள் பெற்றுக்கொள்ளல் வேண்டும் ;

(iv) பதவியில் நியமனம் பெற்று 02 வருடங்கள் கழிவதற்கு முன்பு 1 ஆவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(v) இந்த நியமனம் அரச சேவைகள் ஆணைக்குழு நடைமுறை ஒழுங்கு விதிகளுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவைக்கும் அரச நிதிப் பிரமாணங்களுக்கும் ஆணைக்குழுவின் ஏனைய பணிப்புரைகளுக்கும் அரசினால் அவ்வப்போது வெளியிடப்படும் சுற்றறிக்கை விதிமுறைகளுக்கும் உட்பட்டதாகும்.

3. **சம்பள அளவுத்திட்டம்.**- இப்பதவி உரித்தான சம்பள அளவுத்திட்டம் 03/ 2016 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சம்பள சுற்றறிக்கைக்கு ஏற்ப SL-1-2016 ரூபா 47,615 - 10 x 1,335 - 8 x 1,630 - 17 x 2,170 - ரூபா 1,10,895 ஆகும். (2016.02.25 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 03/ 2016 இன் ஏற்பாடுகளுக்கு ஏற்ப அதன் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்ட வகையிலேயே உங்களுக்கு சம்பளம் வழங்கப்படும்.

4. **கல்வித் தகைமைகள் :**

| அங்கீகரிக்கப்பட்ட பதவிப் பெயர் | கல்வித் தகைமைகள் |
|---|---|
| விஞ்ஞான அலுவலர் (தரச் சான்றிதழ்) | இரசாயனவியலைப் பாடமொன்றாகக் கொண்ட வகுப்புச் சித்தியுடன் கூடிய விஞ்ஞானமானி சிறப்புப் பட்டம்<br>அல்லது<br>இரசாயனவியலைப் பாடமொன்றாகக் கொண்ட வகுப்புச் சித்தியுடன் கூடிய விஞ்ஞானமானி பொதுப் பட்டம்<br>அல்லது<br>இரசாயனவியலைப் பாடமொன்றாகக் கொண்ட வகுப்புச் சித்தியுடன் கூடிய விஞ்ஞானமானி பொதுப் பட்டத்துடன் பட்டப் பின் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் |
| விஞ்ஞான அலுவலர் (மருத்துவ மூலிக இயல்) | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் வகுப்புச் சித்தியுடன் கூடிய தாவரவியல் சிறப்புப் பட்டம் (இரசாயனவியல் மேலதிக பாடமாக)<br>அல்லது<br>தாவரவியல் இரசாயனவியலுடன் உயிரியல் பட்டம் வகுப்புச் சித்தியுடன் விஞ்ஞானமானி பொதுப் பட்டத்தில் சித்தியடைந்திருத்தல்<br>அல்லது<br>தாவரவியல் இரசாயனவியல் கொண்ட உயிரியல் பட்டம் மற்றும் மருந்து மூலிகைகள் தொடர்பான விஞ்ஞானமானி பொதுப் பட்டத்துடன் பட்டப்பின் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் |
| விஞ்ஞான அலுவலர் (விவசாயம்) | விவசாய அறிவியல் பட்டம் வகுப்புச் சித்தியுடன விஞ்ஞானமானி சிறப்புப் பட்டத்தைப் பெற்றிருத்தல்<br>அல்லது<br>தாவரவியல் அல்லது வனவியல் வகுப்புச் சித்தியுடன் விஞ்ஞானமானி பொதுப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்<br>அல்லது<br>தாவரவியல் அல்லது வனவியல் பாடங்களைக் கொண்ட விஞ்ஞானமானி பொதுப் பட்டத்துடன் பட்டப் பின் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் |
| விஞ்ஞான அலுவலர் (தாவர இனப்பெருக்கம்) | வகுப்புச் சித்தியுடன் விவசாய அறிவியல் பட்டத்தில் சித்தியடைந்திருத்தல்<br>அல்லது<br>தாவரவியல் அல்லது வனவியல் பாடங்களைக் கொண்ட வகுப்புச் சித்தியுடன் விஞ்ஞானமானி பொதுப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்<br>அல்லது<br>தாவரவியல் அல்லது வனவியல் பாடங்களைக் கொண்ட விஞ்ஞானமானி பொதுப் பட்டத்துடன் பட்டப் பின் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் |

| அங்கீகரிக்கப்பட்ட பதவிப் பெயர் | கல்வித் தகைமைகள் |
|---|---|
| விஞ்ஞான அலுவலர் (மருந்தாக்கல் விருத்தி) | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் வகுப்புச் சித்தியுடன் கூடிய தாவரவியல் விஞ்ஞானமானி சிறப்புப் பட்டத்தைப் பெற்றிருத்தல் (இரசாயனவியல் மேலதிக பாடமாக)<br>அல்லது<br>தாவரவியல் இரசாயனவியலுடன் உயிரியல் பட்டம் வகுப்புச் சித்தியுடன் விஞ்ஞானமானி பொதுப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்<br>அல்லது<br>தாவரவியல் இரசாயனவியல் உயிரியல் பட்டம் மற்றும் மருந்து மூலிகைகள் தொடர்பான விஞ்ஞானமானி பொதுப் பட்டத்துடன் பட்டப் பின் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் |
| விஞ்ஞான அலுவலர் (நுண்ணுயிர்) | வகுப்புச் சித்தியுடன் நுண்ணுயிரியல் பாடத்தைக் கொண்டதாக நுண்ணுயிரியல் சிறப்புப் பட்டத்தில் அல்லது தாவரவியல் சிறப்புப் பட்டத்தில் சித்தியடைந்திருத்தல்<br>அல்லது<br>நுண்ணுயிரியல் உயர் வேதியியல் பாடங்களைக் கொண்டதாக வகுப்புச் சித்தியுடன் விஞ்ஞானமானி பொதுப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் அல்லது விஞ்ஞானமானி பொதுப் பட்டத்துடன் உயிர் வேதியியல் பட்டப் பின் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் |
| விஞ்ஞான அலுவலர் (இரசாயனம்) | இரசாயனவியல் சிறப்புப் பட்டத்தில் வகுப்புச் சித்தியுடன் சித்தியடைந்திருத்தல்<br>அல்லது<br>இரசாயனவியலைப் பாடமொன்றைக் கொண்ட வகுப்புச் சித்தியுடன் கூடிய விஞ்ஞானமானி பொதுப் பட்டத்தில் சித்தியடைந்திருத்தல்<br>அல்லது<br>இரசாயனவியலைப் பாடமொன்றாகக் கொண்ட விஞ்ஞானமானி பொதுப் பட்டத்துடன் பட்டப் பின் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் |

5. **உடலியல் தகைமைகள்**.- அனைத்துப் பரீட்சார்த்திகளும் இலங்கையின் எந்தப் பாகத்திலும் சேவையாற்றுவதற்கும் பதவியின் கடமைகளை சிறப்பாக ஆற்றுவதற்கும் போதிய உடல் மற்றும் உள ரீதியான தகுதியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

6. **ஏனைய தகைமைகள் :**

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ii) நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும் ;

(iii) ஏதேனும் சமயப் பிரிவில் பதவியில் அமர்த்தப்பட்ட ஒருவராக இருத்தல் கூடாது ;

(iv) விண்ணப்பங்களைக் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதியில் இப்பதவிக்கான ஆட்சேர்ப்புக்குத் தேவையான சகல தகைமைகளையும் சகல வழிகளிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

7.

7.1 **எழுத்துமூலப் பரீட்சை :**

7.1.1 இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும்.

| வினாத்தாள் | காலம் | மொத்தப் புள்ளி | சித்தியடைவதற்கான புள்ளி |
|---|---|---|---|
| 1. விவேகப் பரீட்சை | 01 மணித்தியாலம் | 100 | 40 |
| 2. பொது வினாப்பத்திரம் | 03 மணித்தியாலம் | 100 | 40 |

7.1.2 பாடத்திட்டம் :

| வினாத்தாள் | பாடத்திட்டம் |
|---|---|
| 1. விவேகப் பரீட்சை | பரீட்சார்த்தியின் தர்க்க ரீதியான ஆற்றல், பொது விவேகம் மற்றும் தீர்மானங்கள் எடுக்கும் திறன் போன்ற விடயங்களைக் கண்டறிவதற்காகத் தயாரிக்கப்பட்ட இவ்வினாப்பத்திரம் பல்தேர்வு மற்றும் சுருக்க விடை வழங்கும் வினாக்கள் 50 இனைக் கொண்டுள்ளது. அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். |
| 2. பொது வினாப்பத்திரம் | இலங்கையின் அரசியல், சமூக, கலாசார மற்றும் பொருளாதார சூழல் தொடர்புபட்ட விடயங்கள், தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திலான முக்கியமான நவீன விடயங்கள் தேசிய மற்றும் சர்வதேச விஞ்ஞான மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி தொடர்பாக காணப்படும் அறிவினைப் பரீட்சிப்பதற்காகத் தயாரிக்கப்பட்ட பொது அறிவினை அளவிடும் வினாப்பத்திரம் ஆகும். இவ் வினாப்பத்திரமானது இரு பகுதிகளைக் கொண்டிருக்கும் முதலாவது பகுதியானது சுருக்க விடைகளுக்கான வினாக்களைக் கொண்டிருக்கும் இதற்கான 25 புள்ளிகள் வழங்கப்படும். இரண்டாவது பகுதியானது பகுதியளவு கட்டமைக்கப்பட்ட வினாக்களைக் கொண்டிருக்கும். 8 வினாக்களில் 5 இற்கு விடையளிக்க வேண்டும். புள்ளிகளின் எண்ணிக்கை 75 ஆகும். |

7.2 **பரீட்சைப் பெறுபேறுகள்**.- எழுத்து மூலப் பரீட்சையில் தகைமை பெற்ற பரீட்சார்த்திகளின் பெயர்களை உள்ளடக்கிய பெறுபேற்று ஆவணச் செயலாளர் - அரச சேவைகள் ஆணைக்குழுவிடம் வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பதாரிகளுக்கும் பெறுபேறுகள் அஞ்சல் மூலம் அல்லது www.result.exams.gov.lk என்ற இணையத்தளத்தின் மூலம் அறியத்தரப்படும்.

8. **பரீட்சை நிபந்தனைகள்** :

(i) பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் நடாத்தப்படும். பரீட்சார்த்தி தான் விரும்பிய ஒரு மொழியில் பரீட்சைக்குத் தோற்ற முடியும். பரீட்சார்த்திகள் சகல வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழியில் விடையளித்தல் வேண்டும். பரீட்சார்த்தி ஒருவருக்கு ஆரம்பத்தில் குறிப்பிட்ட பரீட்சை மொழி மூலத்தினைப் பின்னர் மாற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது. சகல பரீட்சார்த்திகளும் வினாப்பத்திரங்கள் அனைத்திற்கும் விடையளித்தல் வேண்டும் ;

(ii) பரீட்சைக் கட்டணம் 600 ரூபாவாகும். இப்பரீட்சைக் கட்டணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இற்கு வரவு வைக்கப்படும் வகையில் நாட்டில் எந்தவொரு அஞ்சல் நிலையத்தில் / உப அஞ்சல் நிலையத்தில் மாவட்ட/பிரதேச செயலகத்தில் செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரில் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தின் உரிய கூட்டில் கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும். மேலும், பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை பரீட்சார்த்தி தன்வசம் வைத்திருத்தல் பயனுள்ளதாக அமையும்.

(iii) பரீட்சைக்காக செலுத்தப்பட்ட பணம் எக்காரணம் கொண்டும் மீளச் செலுத்தப்படவோ அல்லது இன்னொரு பரீட்சைக்கு மாற்றப்படவோ மாட்டாது. பரீட்சைக் கட்டணமாக முத்திரை அல்லது காசுக் கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(iv) விண்ணப்பப்படிவம் செ. மீ 22 × 29 அளவிலான A4 தாளில் தயாரிக்கப்படல் வேண்டும் என்பதோடு, தலைப்பு இலக்கம் 01-3.11 வரையான தலைப்புக்கள் முதலாம் பக்கத்தில் காணப்படும் விதத்தில் தயாரிக்கப்படல் வேண்டும் என்பதோடு அதற்கு உரித்தான தகவல்களை தனது கையெழுத்தினால் தெளிவாக எழுதுதல் வேண்டும். இதனுடன் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்தினை ஒத்திராத விண்ணப்பப்படிவங்கள் மற்றும் சகல அம்சங்களும் முழுமையில்லாத விண்ணப்பங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். உரிய விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதி ஒன்றை பரீட்சார்த்தி தன்வசம் வைத்திருத்தல் பயனுடையதாக அமையும். மேலும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஒத்ததாக உள்ளதாக என விண்ணப்பதாரி பரீட்சித்துப் பார்த்தல் வேண்டும் என்பதோடு அவ்வாறில்லாதுவிடின் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும் என்பதை மேலும் அறியத் தருகின்றேன்.

**குறிப்பு**.- உங்களது வசதிக்காக சரியாகத் தயாரிக்கப்பட்ட பரீட்சை விண்ணப்பப்படிவம் அரசாங்க நிர்வாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத் தளத்தில் (www.pubad.gov.lk) பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

**போலியான தகவல்களுக்கான தண்டனை**.- விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்தி செய்யும் போது மிகவும் கவனமாக சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். இந்தப் பரீட்சையின் சட்ட திட்டங்களுக்கு அமைவாக யாராவது விண்ணப்பதாரி பொருத்தமற்றவர் என வெளிப்படின் பரீட்சைக்கு முன்பு அல்லது பரீட்சை இடம்பெறும் போது அல்லது பரீட்சையின் பின்பு, எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது தகுதி நிலையினை இரத்துச் செய்ய முடியும்.

(v) விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதாக அறியத்தரப்பட மாட்டாது. வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் என்ற முன் அனுமானத்துடன் சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படும். பரீட்சைக்காக விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டவுடன் அது தொடர்பாக குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தலொன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் கழிந்த பின்பும் தமக்கு அனுமதி அட்டை கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரிகள் இருப்பின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு, (நிறுவன மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள்) கிளையில் விசாரிக்க வேண்டும். அவ்வாறு விசாரிக்கும்போது உங்களிடம் வைத்திருந்த விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பதிவு செய்த பற்றுச்சீட்டு கொழும்புக்கு வெளியே வசிப்பவராயின் அனுமதி அட்டையை அனுப்புவதற்கான பெக்ஸ் இலக்கத்தைக் குறிப்பிட்ட உங்களது கோரிக்கைக் கடிதமொன்றை பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிப்பது பயனுடையதாக அமையும்.

**குறிப்பு** .- அனுமதி அட்டையின்றி பரீட்சை மண்டபத்தினுள் நுழைவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. பரீட்சை ஆரம்பிக்கப்படும் திகதியில் தனது கையொப்பத்தினை சான்றுப்படுத்திய அனுமதிப்பத்திரத்தினை மாத்திரமே பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(vi) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் பேரில் பரீட்சையினை பிற்போடுவதற்கோ அல்லது இரத்துச்செய்வதற்கோ பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அதிகாரம் உண்டு.

(vii) பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்தி உட்படுவார். அவ்விதிகளை மீறும் சந்தர்ப்பத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர்கள் உட்படுவார்கள்.

(viii) பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்தியடையும் வகையில் ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தில் தனது ஆளடையாளத்தினை நிரூபித்தல் வேண்டும். இதற்காக, பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் தேசிய ஆள் அடையாள அட்டை ;

(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ;

(iii) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

**கவனிக்க வேண்டியவை :**

(அ) விண்ணப்பத்துடன் எந்தவொரு ஆவணத்தினையோ அல்லது அதன் நிழற்படப் பிரதியையோ இணைத்தல் கூடாது ;

(ஆ) ஆவணங்களினைச் சமர்ப்பிக்குமாறு கோரப்படும் சந்தரப்பங்களில் ஆவணங்களை சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் தொடர்பாக கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

9. அனைத்து பரீட்சார்த்திகளும் தமது திணைக்கள/ நிறுவனத் தலைவர் ஊடாக விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண்டும். பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முன்பு தனது கையொப்பத்தை தான் பணியாற்றும் நிறுவனத் தலைவர் மூலம் அத்தாட்சிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

10. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படுகின்ற இந்த அறிவித்தலில் மொழிகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை அல்லது ஏற்புடையதாகாமை உள்ளமை பற்றி தெரியவருமிடத்து இவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி அறிவித்தலுக்கமைய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

ஜே. ஜே. ரத்னசிறி,
செயலாளர்,
அரசாங்க நிர்வாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு.

அரசாங்க நிர்வாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு,
2019, சனவரி 17.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு**

**சுதேச வைத்தியப் பிரிவு, ஆயுர்வேதத் திணைக்களம்**

**பண்டாரநாயக்க ஞாபகார்த்த ஆயுர்வேத ஆராய்ச்சி நிலையத்தில் இலங்கை விஞ்ஞான சேவையின் தரம் III இல் வெற்றிடமாகவுள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை - 2018 (2019)**

Competitive Examination for Recruitment to Grade III Posts of Sri Lanka Scientific Service - 2018 (2019)

(அலுவலக உபயோகத்திற்காக)

1. பரீட்சைக்குத் தோற்றுகின்ற மொழி மூலம் :
சிங்களம் - 2 தமிழ் - 3 ஆங்கிலம் - 4 (உரிய இலக்கத்தைக் கூட்டினுள் குறிப்பிடவும்)

(பரீட்சைக்குத் தோற்றும் மொழியிலேயே விண்ணப்பப்படிவத்தினைப் பூர்த்திசெய்தல் வேண்டும்.)

2. விண்ணப்பிக்கும் பதவிக்கு திறன் மற்றும் விருப்பத்தின் பேரில் ஒழுங்கு முறையில் இடுங்கள் :
(வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள குறியீடுகளின் இலக்கங்களைத் தெளிவாக இடுக.)

| விருப்பு இலக்கம் | பதவிப் பெயர் | குறியீட்டு இலக்கம் |
|---|---|---|
| | | |

3. தனிப்பட்ட தகவல்கள் :

3.1 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ..........................................................................................................
(உதாரணம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

3.2 இறுதியில் வரும் பெயரை முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்களை பின்னர் வரும் வகையில் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ..........................................................................................................
(உதாரணம் : GUNAWARDHANA, H. M. S. K.)

3.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) : ..........................................................................................................

3.4 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :-
..........................................................................................................
..........................................................................................................
(இம்முகவரிக்கு அனுமதி அட்டை அஞ்சலிடப்படும்)

3.5 நிரந்தர முகவரி: (சிங்களத்தில்/தமிழில்) : ..........................................................................................................

3.6 தபால் நகரம் :----.

3.7 தேசிய ஆள் அடையாள அட்டை இல. :

3.8 பால் :
ஆண்-0, பெண்-1 (உரிய இலக்கத்தைக் கூட்டினுள் குறிப்பிடவும்)

3.9 தொலைபேசி இலக்கம் : கையடக்க :
வீடு :

3.10 பிறந்த திகதி :

ஆண்டு : மாதம் : திகதி :

3.11 விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது :

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

3.12 தேசிய இனம் :
சிங்களவர்-1, இலங்கைத் தமிழர்-2, இந்தியத் தமிழர்-3, முஸ்லிம்-4, ஏனையோர்-5 ☐
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் குறிப்பிடவும்)

3.13 விவாகமானவர்/விவாகமாகாதவர் :
விவாகமானவர்-1, விவாகமாகாதவர்-2 ☐
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் குறிப்பிடவும்)

3.14 மின்னஞ்சல் முகவரி :----.

4. **தகைமைகள் :**

4.1 பட்டம் பெற்ற திகதி :----.
(தயவுசெய்து இத்தகைமைகள் உண்டா என்பதனைப் பார்ப்பதற்கு அறிவித்தலின் 4 ஆம் பிரிவினை நன்றாக வாசித்துப் பார்க்கவும்) :

| பரீட்சை/பட்டம் | வகுப்பு | வருடம் | பாடங்கள் | பல்கலைக்கழகம்/ நிறுவனம் |
|---|---|---|---|---|
| | | | | |

5. பண்டாரநாயக்கா ஞாபகார்த்த ஆயுர்வேத ஆராய்ச்சி நிலையத்தில் :

5.1 தற்போது வகிக்கும் பதவி : ........................................................

5.2 தரம் : ..................................................

5.3 நியமனத் திகதி : .....................................

5.4 நியமனம் நிரந்தரமாக்கப்பட்ட திகதி : ...................

6. பற்றுச்சீட்டினைக் கழறாதவாறு ஒட்டவும் :

> பற்றுச்சீட்டின் பிரதியொன்றினைத் தம்வசம் வைத்துக்கொள்வது பிரயோசனமானதாக அமையும்.

பற்றுச்சீட்டின் இலக்கம் :----.

செலுத்திய தபாலகம் :----.

திகதி :----.

7. ஏதேனும் குற்றச் செயலொன்றுக்கு எப்போதாவது நீதிமன்றத்தில் குற்றவாளியாக இருந்திருப்பின், அக்குற்றம் மற்றும் கிடைக்கப்பெற்ற தண்டனை தொடர்பாக விளக்கமாகக் குறிப்பிடவும் :----------------------------------.

8. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

இங்கு விண்ணப்பத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் உறுதிப்படுத்துகின்றேன். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் விடயமொன்று பொய்யானது அல்லது பிழையானது என நியமனம் வழங்கப்படுவதற்கு முன்னர் அறியப்படுமிடத்து நான் இந்தப் பதவிக்குத் தகுதியற்றவனாவேன் என்றும், நியமனத்தின் பின்னர் தெரியவருமிடத்து எவ்வித இழப்பீட்டுத் தொகையும் வழங்காது நியமனத்தை இரத்துச் செய்ய முடியும் என்றும், அனைத்து சட்ட திட்டங்களுக்கும் நான் கட்டுப்பட்டு நடப்பேன் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

9. திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கின்ற திரு./ திருமதி/ செல்வி ..............................., .......................... ஆந் திகதிக்கு முழுமையான ஐந்து வருட காலப் பகுதிக்குரிய அவரின் வேதனம் அனைத்தையும் பெற்றுள்ளார் எனவும், அக்காலப்

பகுதியில் செய்த தவறுக்கு எந்த ஒரு அடிப்படையிலும் ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் அவர் உட்படவில்லை எனவும், இந்த விண்ணபப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் அவரின் சுயவிபரக் கோவையின் அடிப்படையில் உண்மையானவை எனவும் வர்த்தமானப் பத்திரிகையின் அடிப்படையில் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை கொண்டுள்ளார் எனவும், பரீட்சைக்கான கட்டணத்தை செலுத்தி பற்றுச்சீட்டினை ஒட்டியுள்ளார் எனவும் இப் பதவிக்காக தேர்ந்தெடுக்கப்படுமாயின் தற்போது ஆற்றும் சேவையில் இருந்து விடுவிப்பதற்கு அவசியப்படும் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் எனவும் சான்றுப்படுத்துகின்றேன்.

----,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
திகதி :----.
(பதவி முத்திரை) :

2-126

---

## அரசாங்க மொழி பெயர்ப்பாளர் சேவையின் I ஆம் வகுப்பைச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை - 2014 (2018)

2019.01.18 ஆந் திகதிய 2107 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அரசாங்க மொழிபெயர்ப்பாளர் சேவையின் I ஆம் வகுப்பைச் சேர்ந்த அலுவலர்களுக்காக வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை - 2014 (2018) பரீட்சை அறிவித்தலில் ஆங்கிலப் பரீட்சை அறிவித்தலின் முதலாவது பந்தி மற்றும் தமிழ் பரீட்சை அறிவித்தலின் முதலாவது பந்தி கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தப்பட வேண்டும் என தயவுடன் அறியத் தருகின்றேன்.

01. An Efficiency Bar Examination for Officers in Class I of the Translators' Service, as provided for in paragraph 08 of the Translators' Service Minute published in the Government *Gazette* No. 829/7 dated 26.07.1994, shall be held in Colombo by the Commissioner General of Examinations in the month of April 2019 and candidates may appear for the examination either in Sinhala, Tamil or English media. Language medium shall not be allowed to change subsequently. Only the officers, who belong to Combined Service of Public Service, shall apply for the relevant Efficiency Bar Examination as per this notification.

01. 1994.07.26 ஆம் தேதிய 829/7 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ள மொழிபெயர்ப்பாளர் சேவை தொடர்பான பிரமாணக் குறிப்பில் பந்தி 08 இன் கீழ் மேற்கொண்டுள்ள ஏற்பாடுகளின் படி மொழிபெயர்ப்பாளர் சேவை வகுப்பு I இன் அலுவலர்களுக்கான வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சை ஒன்று பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2019, ஏப்பிறல் மாதம் கொழும்பில் நடாத்தப்படும். இப் பரீட்சைக்கு சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தோற்றலாம். பரீட்சைக்கு விண்ணபித்த மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது. இவ் அறிவித்தலுக்கு அமைய குறித்த வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை தொடர்பாக அரசாங்க சேவையின் இணைந்த சேவைக்கு உரிய அலுவலர்கள் மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.

**குறிப்பு**.- இத்திருத்தத்தினால் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி நீடிக்கப்படமாட்டாது.

கே. வீ. பீ. எம். ஜே. கமகே,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
பொது நிருவாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு.

பொது நிர்வாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.
2019, சனவரி 23.

2-298

## நகர திட்டமிடல், தேசிய நீர்வழங்கல், உயர்கல்வி அமைச்சு

இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகம்

### உயர் தொழில்நுட்பவியல் நிறுவகங்களுக்கு மாணவர்களை அனுமதித்தல் - கல்வி ஆண்டு 2019

2018 ஆம் ஆண்டில் அல்லது அதற்கு முன்னர் க. பொ. த. (உ. த.) பரீட்சையை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துள்ளோரிடமிருந்து இலங்கை தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகத்தால் (SLIATE) நடாத்தப்படுகின்ற உயர் தேசிய டிப்ளோமா பாடநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**விண்ணப்பிக்கும் முறை**.- கீழ் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்டு, ஆங்கிலத்தில் முறையாகப் பூர்த்திசெய்யப்பட்டுள்ள விண்ணப்பங்கள், இலங்கை உயர் தொழில்நுட்ப கணக்கு இல. 025-2-001-1-3397613 இல் மக்கள் வங்கி, ஹைட்பார்க் கிளை, கொழும்பு அல்லது வேறேதேனும் மக்கள் வங்கியில் 500 ரூபா (ஐநூறு) பற்று வைத்துப் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டுடன் பதிவுத்தபாலில், பிரிவு "ஆ" இல் குறிப்பிடப்பட்டுள்ள உரிய உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம்/பிரிவிற்கு நேரடியாக அனுப்பப்படல் வேண்டும். "விண்ணப்பிக்கும் பாடநெறியை" கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.

ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நிறுவகங்களுக்கு விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரர்கள், விண்ணப்பிக்கப்படும் ஒவ்வொரு விண்ணப்பமும் ரூபா 500 பெறுமதியான தனித்தனி பற்றுச்சீட்டை இணைத்து தனித்தனி விண்ணப்பப்படிவத்தில் சமர்ப்பித்தல் வேண்டும். மேலே குறிப்பிடப்பட்ட கணக்கு இலக்கத்தை தவிர்ந்த ஏனைய கணக்கு இலக்கங்களுக்கு பற்று வைக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.

பிரிவு 'ஆ' இல் நடாத்தப்படும் பாடநெறிகள் போன்றே உயர் தொழில்நுட்பவியல் நிறுவகங்கள்/உ. தொ. நி. பிரிவுகளின் முகவரிகள் தரப்பட்டுள்ளன. தங்கள் தகைமைகளுக்கேற்ப பிரிவு "அ" வில் தரப்பட்டுள்ள பட்டியலிலிருந்து தங்கள் கல்வி நிகழ்ச்சித்திட்ட பாடநெறிகளை தெரிவுசெய்தல் வேண்டும்.

**விரிவுரைகளின் வகை :**

| | | |
|---|---|---|
| பகல்/முழுநேர பாடநெறிகள் | : | வேலை நாட்கள், பகல் நேரம் |
| பகுதி நேர பாடநெறிகள் | : | வார இறுதி நாட்கள், பகல் நேரம் |
| மொழிமூலம் | : | ஆங்கிலம் |

உரிய துறையில் கடமையாற்றுவோருக்கே பகுதி நேர பாடநெறிகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

**பாடநெறிக்கான கட்டணங்கள்**.- முழுநேர பாடநெறிகளுக்கு எவ்வித பாடநெறிக் கட்டணமும் அறவிடப்பட மாட்டாது. பகுதி நேர பாடநெறிகளுக்கான தவணைக் கட்டணங்கள் (semester) பின்வருமாறு :

கணக்கியல் உயர் தேசிய டிப்ளோமா (HNDA) ரூபா 5,000.00.
ஆங்கிலம் உயர் தேசிய டிப்ளோமா (HND in English) ரூபா 8,000.00.
தகவல் தொழில்நுட்பவியல் உயர் தேசிய டிப்ளோமா (HNDIT) ரூபா 12,000.00.

**பதிவு செய்தல்**.- தகைமைக்கேற்ப தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் பதிவு செய்வதற்கு தேவையான ஆவணங்களின் மூலப் பிரதிகளையும் சான்றுப்படுத்தப்பட்ட நிழற்படப் பிரதிகளையும் சமர்ப்பிக்க வேண்டும்.

**தங்குமிட வசதிகள்**.- பெண்களுக்கான வரையறை செய்யப்பட்ட தங்குமிட வசதிகள் உயர் தொழில்நுட்பவியல் நிறுவகங்களான தெஹிவளை பகுதியிலும் ஆண்/பெண் இருபாலாருக்குமான தங்குமிட வசதிகள், ஹார்டி உ. தொ. நி. ஆகிய பகுதிகளிலும் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வசதி முழுநேர பாடநெறி மாணவர்களுக்கு மாத்திரமேயாகும்.

**பகுதி - "அ"**

ஒவ்வொரு பாடநெறி அனுமதிக்கும் அவசியமான தகைமைகள் :

*1.* **கணக்கியல் உயர் தேசிய டிப்ளோமா** - (HNDA)

*1.1* முழுநேரம் - நான்கு (4) வருடங்கள்.

விண்ணப்பதாரர் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(i) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் பொருளியல் மற்றும் கணக்கியல் பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் சகல பாடங்களிலும் சித்திபெற்றிருத்தல்.

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் கணிதப் பாடத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல், க. பொ. த. (உ. த.) பரீட்சையில் பொருளியல் அல்லது கணக்கியல் பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருப்பதாக கருதப்படும்.

அத்துடன்

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கிலத்தில் சாதாரண சித்தி பெற்றிருத்தல்.

*1.2* பகுதி நேரம் - நான்கு (4) வருடங்கள்

விண்ணப்பதாரர் பின்வரும் தகைமைகளில் ஏதேனும் ஒன்றையாவது பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் :

(i) க.பொ.த. (உ.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் சகல பாடங்களிலும் சித்தி பெற்றிருத்தல் ;

(ii) தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தினால் நடாத்தப்படும் -

(அ) கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் தேசிய சான்றிதழைப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

(ஆ) வியாபாரக் கல்வி தேசிய சான்றிதழைப் பூர்த்திசெய்திருத்தல்.

அல்லது

(இ) கணக்கியல் பற்றிய தேசிய சான்றிதழைப் பெற்றிருத்தல்

மற்றும்

க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆங்கில பாடத்தில் சாதாரண சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

விண்ணப்பதாரர் உரிய துறையில் அரச நிறுவனம்/ சபை / அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் அல்லது சுயதொழில் ஒன்றில் கடமையாற்றுதல் வேண்டும்.

கணக்கியலில் உயர் தேசிய டிப்ளோமா பகுதி நேர பாடநெறிக்கான விண்ணப்பதாரர் பின்வரும் தகைமைகளுள் ஒன்றையேனும் பூர்த்தி செய்திருப்பின் முதலாம் ஆண்டில் விலக்களிக்கப்படுவர் அத்துடன் இடம் மற்றும் ஏனைய அனுமதி தேவைப்பாடுகளின் அடிப்படையில் இரண்டாம் ஆண்டிற்கு அனுமதிக்கப்படுவர் :-

(i) இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகத்தால் நடாத்தப்படுகின்ற வியாபார நிறுவகம்/ வியாபார நிதி/ முகாமைத்துவ உயர் தேசிய டிப்ளோமா சான்றிதழைப் பூர்த்தி செய்திருத்தல்;

(ii) இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகம் அல்லது தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தால் நடாத்தப்படும் வர்த்தக உயர் தேசிய டிப்ளோமா சான்றிதழ் இரண்டாம் ஆண்டைப் பூர்த்திசெய்திருத்தல்.

(iii) இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகம் அல்லது தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தால் நடாத்தப்படும் வியாபாரக் கல்வி தேசிய டிப்ளோமாவை பூர்த்தி செய்திருத்தல் ;

(iv) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உரிய துறையில் பல்கலைக்கழக பட்டம் பெற்றிருத்தல் (கணக்கியல்/வியாபார நிருவகம்/சந்தைப்படுத்தல் முகாமைத்துவம்/மனிதவள முகாமைத்துவம்/ வியாபார நிதி/வியாபார பொருளியல்);

(v) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் சான்றிதழ் இரண்டாம் மட்டம் அல்லது நடுத்தர மட்டம் அல்லது கணக்காளர் மற்றும் வியாபார சம்பந்தமான சான்றிதழ் இரண்டாம் கட்டம் அல்லது அனுமதிக்கப்பட்ட கட்டங்களை பூர்த்தி செய்திருத்தல் ;

(vi) பட்டய முகாமைத்துவ கணக்காளர் நிறுவகத்தின் (CIMA - UK), I அல்லது II பரீட்சையை பூர்த்தி செய்திருத்தல்;

(vii) இலங்கைக் கணக்கியல் தொழில்நுட்பவியல் நிறுவகத்தின் (AAT) III ஆம் கட்ட பரீட்சையை பூர்த்தி செய்திருத்தல்;

(viii) சான்றுப்படுத்தப்பட்ட முகாமைத்துவ கணக்காளர்/ நிறுவகத்தில் (CMA - இலங்கை) இறுதிப் பரீட்சையை (ACMA) பூர்த்தி செய்திருத்தல்.

**குறிப்பு**.- உயர் தேசிய கணக்காளர் டிப்ளோமா - முழுநேரப் /பகுதி நேரம்

பொது நிருவாக சுற்றறிக்கை இல. 46/90 இற்கிணங்க ஆட்சேர்ப்பு முறையின் போது உயர் தேசிய கணக்காளர் டிப்ளோமாவானது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் வர்த்தமானி சாதாரண பட்டமொன்றுக்கு மாற்றீடான கல்வித் தகைமையாக ஏற்றுக்கொள்ளப்படும்.

02. **உயர் தேசிய கட்டிட சேவைகள் பொறியியல் டிப்ளோமா (HNDBSE) - முழு நேரம்** - 3 1/2 வருடங்கள்

விண்ணப்பதாரர் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் :

(i) க. பொ. த. (உ. த.) பௌதீக விஞ்ஞானத் துறையின் (Physical Science) கீழ் (இரசாயனவியல், பௌதீகவியல், இணைந்த கணிதம் ஆகிய பாடங்கள் உட்பட) சகல பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்திபெற்றிருத்தல் ;

மற்றும்

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கிலத்தில் சாதாரண சித்தியொன்றை பெற்றிருத்தல்.

03. **உயர் தேசிய கட்டிட சேவைகள் பொறியியல் டிப்ளோமா (HNDBA) - முழு நேரம்** - 2 1/2 வருடங்கள்

விண்ணப்பதாரர் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் :

(i) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் வர்த்தகப் பிரிவில் ஒரே அமர்வில் சகல பாடங்களிலும் சித்திபெற்றிருத்தல் ;

அத்துடன்

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்தில் சாதாரண சித்தியொன்றை பெற்றிருத்தல்.

04. **உயர் தேசிய வியாபார நிதி டிப்ளோமா (HNDBF)** - முழு நேரம் - 2 1/2 வருடங்கள்.

விண்ணப்பதாரர் பின்வரும் தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் :

(i) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் வர்த்தகப் பிரிவில் ஒரே அமர்வில் சகல பாடங்களிலும் சித்திபெற்றிருத்தல் ;

அத்துடன்

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் கணிதம் மற்றும் ஆங்கிலத்தில் சாதாரண சித்தியொன்றை பெற்றிருத்தல்.

05. **உயர் தேசிய வாடிக்கையாளர் விஞ்ஞானம் மற்றும் உற்பத்தி தொழில்நுட்ப டிப்ளோமா (HNDCSPT)** - முழு நேரம் - 3 வருடங்கள்.

விண்ணப்பதாரர் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் :

(i) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் மனைப்பொருளியல் பாடம் உட்பட ஏதேனும் பிரிவில் சகல பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்திபெற்றிருத்தல் ;

மற்றும்

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்தில் சாதாரண சித்தியொன்றை பெற்றிருத்தல்.

06. **உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா (**HNDE-CIVIL) - முழு நேரம் 3 1/2 வருடங்கள்

விண்ணப்பதாரர் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் :

(i) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் பௌதீக விஞ்ஞானத் துறையின் கீழ் (இரசாயனவியல், பௌதீகவியல், இணைந்த கணிதம் உட்பட) சகல பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்திபெற்றிருத்தல் ;

அத்துடன்

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கிலத்தில் சாதாரண சித்தி பெற்றிருத்தல்.

07. **உயர் தேசிய வியாபார நிதி டிப்ளோமா (**HNDE - Electrical & Electronic) - முழு நேரம் : 3 1/2 வருடங்கள்.

விண்ணப்பதாரர் பின்வரும் தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் :

(i) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் பௌதீக விஞ்ஞானத் துறையின் கீழ் (இரசாயனவியல், பௌதீகவியல், இணைந்த கணிதம் உட்பட) சகல பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்திபெற்றிருத்தல் ;

அத்துடன்

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கிலத்தில் சாதாரண சித்தி பெற்றிருத்தல்.

08. **உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா (**HNDE - Machanical) - முழு நேரம் : 3 1/2 வருடங்கள்.

விண்ணப்பதாரர் பின்வரும் தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் :

(i) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் பௌதீக விஞ்ஞானத்துறையின் கீழ் (இரசாயனவியல், பௌதீகவியல், இணைந்த கணிதம் உட்பட) சகல பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்திபெற்றிருத்தல் ;

அத்துடன்

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கிலத்தில் சாதாரண சித்தி பெற்றிருத்தல்.

09. **உயர் தேசிய ஆங்கில டிப்ளோமா (**HND**)** - ஆங்கிலம்

09.1 முழுநேரம் - 2 1/2 வருடங்கள்

விண்ணப்பதாரர் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் :

(i) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஏதேனும் துறையில் ஒரே அமர்வில் சகல பாடங்களிலும் சித்திபெற்றிருத்தல் ;

மற்றும்

(ii) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கில இலக்கியத்தில் சாதாரண சித்தியொன்றை அல்லது ஆங்கிலப் பாடத்தில் திறமைச் சித்தியொன்றை பெற்றிருத்தல்.

அல்லது

கல்வியியல் கல்லூரியினால் வழங்கப்பட்ட டிப்ளோமா அல்லது ஆங்கில நிபுணத்துவ ஆசிரியர் பயிற்சி சான்றிதழ் இருத்தல் அல்லது ஆங்கில நிபுணத்துவ ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் இருத்தல்.

9.2 பகுதி நேரம் - 2 1/2 வருடங்கள்

9.1 இல் குறிப்பிட்ட தகைமைகளுக்கு மேலதிகமாக விண்ணப்பதாரர் குறித்த துறையில் அரச சேவை அல்லது ஏதேனும் நிரந்தர சேவையில் செயலாற்றுதல் வேண்டும்.

10. **உயர் தேசிய உணவுத் தொழில்நுட்பவியல் டிப்ளோமா (**HNDFT) - முழு நேரம் : 2 1/2 வருடங்கள்.

விண்ணப்பதாரர் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :

(i) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானம் அல்லது பௌதீக விஞ்ஞானப் பிரிவில் ஒரே அமர்வில் சகல பாடங்களிலும் சித்திபெற்றிருத்தல் ;

அத்துடன்

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணித பாடத்தில் சாதாரண சித்தி பெற்றிருத்தல்.

11. **தகவல் தொழில்நுட்பவியல் உயர் தேசிய டிப்ளோமா (**HNDIT) -

11.1 முழு நேரம் : 2 1/2 வருடங்கள்.

விண்ணப்பதாரர் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் :

(i) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஏதேனும் துறையில் ஒரே அமர்வில் சகல பாடங்களிலும் சித்திபெற்றிருத்தல் (உயிரியல் விஞ்ஞானம், பௌதீக விஞ்ஞானம், வர்த்தகம், தொழில்நுட்பவியல் மற்றும் கலைப் பிரிவு (ICT ஐ பாடமாகக் கொண்ட) க்கு முன்னுரிமை வழங்கப்படும் ;

அத்துடன்

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்தில் சாதாரண சித்தி பெற்றிருத்தல்.

11.2 பகுதி நேரம் - 2 1/2 வருடங்கள்.

11.1 இல் குறிப்பிட்ட தகைமைகளுக்கு மேலதிகமாக விண்ணப்பதாரர் குறித்த துறையில் அரச சேவை அல்லது ஏதேனும் நிரந்தர சேவையில் செயலாற்றுதல் வேண்டும்.

12. **முகாமைத்துவ உயர் தேசிய டிப்ளோமா (**HNDM**)** - முழு நேரம் : 3 வருடங்கள்.

விண்ணப்பதாரர் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் :

(i) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஏதேனும் துறையில் ஒரே அமர்வில் சகல பாடங்களிலும் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்;

அல்லது

(ii) தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தால் நடாத்தப்படும் கணக்கீட்டு தொழில்நுட்பவியல் தேசிய சான்றிதழை அல்லது வியாபாரக் கல்வி (பொது நிர்வாகம்/சந்தைப்படுத்தல்) தேசிய சான்றிதழை பூர்த்தி செய்திருத்தல்.

அத்துடன்

(iii) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதப் பாடத்தில் சாதாரண சித்தியைப் பெற்றிருத்தல்.

13. **திட்ட முகாமைத்துவ உயர் தேசிய டிப்ளோமா (**HNDPM**)** - முழு நேரம் : 2 1/2 வருடங்கள்.

விண்ணப்பதாரர் பின்வரும் தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் :

(i) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஏதேனும் துறையில் ஒரே அமர்வில் சகல பாடங்களிலும் சித்திபெற்றிருத்தல் ;

மற்றும்

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணித பாடத்தில் சாதாரண சித்தியைப் பெற்றிருத்தல்.

14. **பரிமாண நில அளவை உயர் தேசிய டிப்ளோமா (**HNDQS**)** - முழு நேரம் : 2 1/2 வருடங்கள்.

விண்ணப்பதாரர் பின்வரும் தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் :

(i) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் பௌதீக விஞ்ஞானத் துறையின் கீழ் (இரசாயனவியல், பௌதீகவியல், இணைந்த கணிதம் உட்பட) சகல பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்;

அத்துடன்

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கில பாடத்தில் சாதாரண சித்தி பெற்றிருத்தல்.

15. **தொழில்நுட்பவியல் உயர் தேசிய டிப்ளோமா** - விவசாயம் (HNDT - Agriculture) - முழு நேரம் : 3 வருடங்கள்.

விண்ணப்பதாரர் பின்வரும் தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் :

(i) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானத் துறையில் (உயிரியல், இரசாயனவியல், பௌதீகவியல், பௌதீகவியல் அல்லது விவசாயம்) ஏதேனும் மூன்று பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்;

அத்துடன்

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதப் பாடத்தில் சாதாரண சித்தி பெற்றிருத்தல்.

16. **உல்லாச மற்றும் உபசரணை முகாமைத்துவ உயர் தேசிய டிப்ளோமா (HNDTHM)** - முழு நேரம் : 3 வருடங்கள்.

விண்ணப்பதாரர் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் :

(i) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஏதேனும் துறையில் ஒரே அமர்வில் சகல பாடங்களிலும் சித்திபெற்றிருத்தல் ;

அத்துடன்

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதப் பாடத்தில் சாதாரண சித்தி பெற்றிருத்தல்.

**குறிப்பு** :

* பகுதி நேர விண்ணப்பதாரர் உரிய துறைக்கான தொழில் அல்லது வியாபார பதிவுச் சான்றிதழைக் கொண்டிருத்தல் வேண்டும் ;
* முழு நேர பாடநெறிகளுக்கு குறைந்தபட்சம் ஆறு மாத (6) கால கைத்தொழில் பயிற்சி (Inplant) உள்ளடங்கும்;
* பகுதி நேர பாடநெறிகளுக்கு குறைந்தபட்சம் ஆறு மாத கால (6) செயற்திட்டம் உள்ளடங்கும்.

**குறிப்பு** :

1. க. பொ. த. (உ. த.) புதிய பாடத்திட்டத்தில் உயர் தேசிய டிப்ளோமா முழு நேர பாடநெறிக்கு தகைமை பெற்ற விண்ணப்பதாரிகள் பொது வினாப்பத்திரத்தில் கட்டாயம் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் உயர் கல்விக்கான தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

2. எச்என்டி ஆங்கிலம், எச்எனடிஐரி, எச்எனடிரிஎச்எம், எச்என்டிடிஎம், எச்எனடிபிஎம், எச்எனடிஎப்ரி, எச்என்டிசீஎஸ்பிரி தவிர்ந்த ஏனைய பாடநெறி தேர்விற்கான தேர்வுப் பிரமாணமாக, க. பொ. த. (உ. த.) வின் Z புள்ளிகள் கருத்திற் கொள்ளப்படும்.

3. எச்என்டிசீஎஸ்பிரி, எச்என்டி ஆங்கிலம், எச்என்டிஐரி, எச்எனடிஎவ்ரி, எச்எனடிபிஎப், எச்என்டிபிஎம் மற்றும் எச்என்டிரிஎச்எம் ஆகியவற்றிற்கான தெரிவுப் பரீட்சை நிறுவன மட்டத்தில் நடைபெறும். ஒவ்வொரு பாடநெறிக்கும் வெவ்வேறு நாட்களில் சகல நிறுவனங்களிலும் ஒரே தினத்தில் ஒரே நேரத்தில் நடைபெறும்.

4. 23 வயதிற்கு குறைந்தோருக்கு முழு நேர பாடநெறிக்கான முன்னுரிமை வழங்கப்படும்.

5. உயர் தொழில்நுட்ப நிறுவகம்/நிறுவக பிரிவொன்றினால் நடாத்தப்படும் பாடநெறி ஒன்றிற்கு குறைந்த பட்சம் 50 விண்ணப்பதாரிகள் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

6. சகல முழு நேர பாடநெறி மாணவர்களும் வார நாட்களில் போன்றே தேவையேற்படின் வார இறுதியிலும் பாடநெறியில் கலந்து கொள்ள வேண்டி வரும்.

7. பகுதி நேர பாடநெறிகள் வார இறுதியில் நடைபெறும்.

8. கணக்காளர் உயர் தேசிய டிப்ளோமா முழு நேர பாடநெறிக்கான விரிவுரை முதலாம் மற்றும் இரண்டாம் வருடத்தில் வார நாட்களில் மாத்திரமும் மூன்றாம் மற்றும் நான்காம் வருடங்களில் வார இறுதியிலும் நடைபெறும்.

9. முகாமைத்துவ உயர் தேசிய டிப்ளோமா முழு நேரப் பாடநெறிக்கான விரிவுரை முதலாம் மற்றும் இரண்டாம் வருடத்தில் வார நாட்களிலும் மூன்றாம் வருடம் வார இறுதியிலும் நடைபெறும்.

10. வியாபார நிருவாக உயர் தேசிய பாடநெறி மற்றும் வியாபார நிதி உயர் தேசிய டிப்ளோமா பாடநெறிக்கான விரிவுரை முதலாம், இரண்டாம் வருடம் வார நாட்களில் நடைபெறுவதுடன் மூன்றாம் வருட முதல் தவணையில் வார இறுதியில் நடைபெறும்.

11. குறிப்பிட்ட உயர் தொழில்நுட்ப நிறுவகம் அல்லது உயர் தொழில்நுட்ப பிரிவுகளில் முழு நேர பாடநெறிக்கு தெரிவு செய்யப்பட்ட பின்னர் அம்மாணவர்கள் எவ்வித காரணம் கொண்டும் வேறேதேனும் உயர் தொழில்நுட்ப நிறுவகத்திற்கு மாற்றப்பட மாட்டார்கள்.

12. உயர் தொழில்நுட்பவியல் நிறுவகத்தில் பதிவு செய்யும் மாணவர் ஒருவருக்கு, பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கும் பொருட்டு தமது பதிவினை விண்ணப்ப முடிவுத் திகதியிலிருந்து 60 நாட்களுக்குள் இரத்துச் செய்துகொள்ள இந்நிறுவகம் இடமளிக்கும்.

13. பாடநெறிக்காக தெரிவு செய்யும் பரீட்சையில் கலந்துகொண்ட உயர் தொழில்நுட்ப நிறுவகம்/பிரிவில் மாத்திரமே பதிவினை மேற்கொள்ளல் வேண்டும்.

14. பகுதி நேர/முழு நேர மாணவர்களுக்கு வார நாட்களிலும் வார இறுதி நாட்களிலும் பரீட்சைகள் நடைபெறும்.

15. இலங்கை உயர் தொழில்நுட்ப நிறுவகத்தில் கல்விசார் குழுவின் மூலம் பரிந்துரை செய்யப்படுகின்ற மற்றும் நிருவாக சபையினால் அங்கீகாரம் பெற்ற ஏனைய பாடநெறி அனுமதிக்கான தகைமைகள் கருத்திற் கொள்ளப்படும்.

2019 ஆம் கல்வி ஆண்டுக்கான ஆட்சேர்ப்பு சம்பந்தமாக இறுதித் தீர்மானம் உயர் தொழில்நுட்பவியல் நிறுவக பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானம் என்பதை கவனத்திற் கொள்க.

மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள www.sliate.ac.lk என்ற இணையத்தளத்தை நாடவும்.

விண்ணப்பங்கள் ஏற்றுகொள்ளும் இறுதித் திகதி 2019.03.01.

**பிரிவு 'ஆ'**

உயர் தொழில்நுட்ப நிறுவகங்கள்/ உயர் தொழில்நுட்ப நிறுவக பிரிவுகளின் முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள் மற்றும் நடைபெறும் பாடநெறிகள்.

| நிறுவகத்தின் பெயர் | முகவரி | தொலைபேசி இல. | பாடநெறிகள் |
|---|---|---|---|
| 01. ஹார்டி உயர் தொழில் நுட்பவியல் நிறுவகம், அம்பாறை | பேராசிரியர் ஈவன் ஏ ஹார்டி மாவத்தை, அம்பாறை | 063-2222056, 063-2223035 | எச்என்டிஏ (மு. நே.), எச்என்டிஏ(ப. நே.), எச்என்டிஎம், எச்என்டிஐரி (மு. நே.) எச்என்டிரி (விவசாயம்), எச்என்டி ஆங்கிலம் (மு. நே.) எச்என்டி ஆங்கிலம் (ப. நே.), எச்என்டிரிஎச்எம், |
| 02. உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம், அநுராதபுரம் | ஏக்கர் 111, அநுலா மாவத்தை, பந்துலகம அநுராதபுரம் | 025-2234417 | எச்என்டிஏ(மு. நே.), எச்என்டிஏ (ப. நே.), எச்என்டி ஆங்கிலம் (மு. நே.), எச்என்டி ஆங்கிலம் (ப. நே.), எச்என்டிஐரி (மு. நே.), எச்என்டிஐரி (ப. நே.), எச்என்டிரிஎச்எம் |
| 03. உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம், பதுளை | கிறீன்லண்ட் டிரைவ், பதுளை | 055-2230218, 055-2223818 | எச்என்டிஏ (மு. நே.), எச்என்டிஏ (ப. நே.), எச்என்டிஎம், எச்என்டிஐரி (மு. நே.), எச்என்டிஐரி (ப. நே.), எச்என்டி ஆங்கிலம் (மு. நே.), எச்என்டி ஆங்கிலம் (ப. நே.), எச்என்டிரீஎச்எம் |

| நிறுவகத்தின் பெயர் | முகவரி | தொலைபேசி இல. | பாடநெறிகள் |
|---|---|---|---|
| 04. உயர் தொழில்நுட்பவியல் நிறுவகப் பிரிவு, மட்டக்களப்பு | பிரதான வீதி, கோவில் குளம் கிழக்கு, ஆரயம்பதி, மட்டக்களப்பு | 065-2247519<br>065-2247470 | எச்என்டிஏ(மு. நே.),<br>எச்என்டிஏ (ப. நே.),<br>எச்என்டி ஆங்கிலம் (மு. நே.),<br>எச்என்டி ஆங்கிலம் (ப. நே.),<br>எச்என்டிஐரி (மு. நே.),<br>எச்என்டிஐரி (ப. நே.),<br>எச்என்டிரிஎச்எம் |
| 05. உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம், கொழும்பு | இல. 42, ரொற்றிகோ இடம், கொழும்பு 15 | 011-2521152<br>011-2521282 | எச்என்டிஈ (சிவில்),<br>எச்என்டிஈ (இயந்திரவியல்),<br>எச்என்டிஈ (மின் இலத்திரனியல்),<br>எச்என்டிகியுஎஸ், எச்என்டிபீஎஸ்ஈ |
| 06. உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம், தெஹிவளை | இல. 51, வைத்தியா வீதி, தெஹிவளை | 011-2738349 | எச்என்டிஏ (மு. நே.),<br>எச்என்டிஏ (ப. நே.),<br>எச்என்டிஎம், எச்என்டிபீஏ,<br>எச்என்டிஐரி (மு.நே.),<br>எச்என்டி ஆங்கிலம் (மு.நே.)<br>எச்என்டி ஆங்கிலம் (ப.நே.)<br>எச்என்டிடீஎப், எச்என்டிரிஎச்எம் |
| 07. உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம், காலி | ஸ்ரீ தம்ம மாவத்தை, லபுதூவ, அக்மீமன, காலி | 091-2246179 | எச்என்டிஈ (சிவில்),<br>எச்என்டிஈ (இயந்திரவியல்),<br>எச்என்டிஈ மின் இலத்திரனியல்),<br>எச்என்டிஏ (மு.நே.),<br>எச்என்டிஏ (ப.நே.),<br>எச்என்டிஎம், எச்என்டிரிஎச்எம்,<br>எச்என்டிபீஏ,<br>எச்என்டிஐரி (மு.நே.)<br>எச்என்டிஐரி (ப.நே.),<br>எச்என்டிரி (விவசாயம்),<br>எச்என்டி(மு.நே.), எச்என்டிகியூஎஸ் |
| 08. உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம், கம்பஹா | நைவல, எசல்ல, வெயாங்கொடை | 033-2287519,<br>033-2292544 | எச்என்டிஏ (மு. நே.),<br>எச்என்டிஏ (ப. நே.),<br>எச்என்டிஐரி (மு. நே.),<br>எச்என்டிஐரி (ப. நே.),<br>எச்என்டிரி (விவசாயம்),<br>எச்என்டிஎவ்ரி, எச்என்டிசீஎஸ்பிரி |
| 09. உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம், யாழ்ப்பாணம் | இல. 665/2, கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம் | 021-2222595<br>021-2229803 | எச்என்டிஈ (சிவில்),<br>எச்என்டிஈ (மின் இலத்திரனியல்),<br>எச்என்டிஏ (மு. நே.),<br>எச்என்டிஏ (ப. நே.), எச்என்டிஎம்,<br>எச்என்டிஐரி (மு. நே.),<br>எச்என்டிஐரி (ப. நே.),<br>எச்என்டி ஆங்கிலம் (ப. நே.),<br>எச்என்டி ஆங்கிலம் (மு.நே.),<br>எச்என்டிரிஎச்எம், எச்என்டிகியுஎஸ் |
| 10. உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம், கண்டி | இல. 16, கெப்பெட்டிபொல மாவத்தை, கண்டி | 081-2232097 | எச்என்டிஏ (மு. நே.),<br>எச்என்டிஏ (ப. நே.),<br>எச்என்டிஎம், எச்என்டிபீஏ,<br>எச்என்டிஐரி (மு. நே.),<br>எச்என்டி ஆங்கிலம், (மு.நே.),<br>எச்என்டி ஆங்கிலம் (ப.நே.),<br>எச்என்டிரிஎச்எம் (மு. நே.). |

| நிறுவகத்தின் பெயர் | முகவரி | தொலைபேசி இல. | பாடநெறிகள் |
|---|---|---|---|
| 11. உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம், கேகாலை | பண்டாரநாயக்க மாவத்தை, கேகாலை | 035-2221297<br>035-2221713 | எச்என்டிஏ (மு. நே.),<br>எச்என்டிஏ (ப. நே.),<br>எச்என்டிஐரி (மு. நே.),<br>எச்என்டி ஆங்கிலம் (மு. நே.),<br>எச்என்டி ஆங்கிலம் (ப. நே.),<br>எச்என்டிபிஎம் |
| 12. உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம், குருநாகல் | இல. 22/1, வில்கொட வீதி, குருநாகல் | 037-2229583<br>037-2224911 | எச்என்டிஏ (மு. நே.),<br>எச்என்டிஏ (ப. நே.),<br>எச்என்டிஎம் (மு. நே.),<br>எச்என்டிஐரி (மு. நே.),<br>எச்என்டிஐரி (ப. நே.),<br>எச்என்டி ஆங்கிலம் (மு. நே.),<br>எச்என்டி ஆங்கிலம் (ப. நே.),<br>எச்என்டிரீஎச்எம் |
| 13. உயர் தொழில்நுட்பவியல் நிறுவகப் பிரிவு, மன்னார் | இல. 201, மாகாண ஆங்கில உதவி மத்திய நிலையம் (PESC), தலைமன்னார் வீதி, மன்னார் | 023-3122555 | எச்என்டி ஆங்கிலம் (மு. நே.),<br>எச்என்டிரிஎச்எம்,<br>எச்என்டிஐரி (மு. நே.) |
| 14. உயர் தொழில்நுட்பவியல் நிறுவகப் பிரிவு, நாவலப்பிட்டி | பழைய நகரசபை கட்டிடம், நாவலப்பிட்டி | 054-2050634 | எச்என்டிரிஎச்எம்,<br>எச்என்டி ஆங்கிலம் (மு. நே.),<br>எச்என்டி ஆங்கிலம் (ப. நே.)<br>எச்என்டிஎம் |
| 15. உயர் தொழில்நுட்பவியல் நிறுவகப் பிரிவு, இரத்தினபுரி | புதிய நகரம், இரத்தினபுரி | 045-2231492<br>045-2231493 | எச்என்டிஏ (மு. நே.),<br>எச்என்டிஏ(ப. நே.),<br>எச்என்டிஐரி (ப. நே.),<br>எச்என்டிஐரி (ப. நே.),<br>எச்என்டி ஆங்கிலம் (மு. நே.),<br>எச்என்டி ஆங்கிலம் (ப. நே.) |
| 16. உயர் தொழில்நுட்பவியல் நிறுவகப் பிரிவு, சம்மாந்துறை | ஏரிஜ எவனியூ, சம்மாந்துறை | 067-2261304 | எச்என்டிஏ (மு. நே.),<br>எச்என்டிஏ (ப. நே.),<br>எச்என்டி ஆங்கிலம் (மு. நே.),<br>எச்என்டி ஆங்கிலம் (ப. நே.),<br>எச்என்டிஐரி (மு.நே.) |
| 17 உயர் தொழில்நுட்பவியல் நிறுவகப் பிரிவு, தங்காலை | யாயவத்தை, நெடொல்பிட்டிய, தங்காலை | 047-2241845,<br>047-2241846 | எச்என்டிஏ (மு. நே.),<br>எச்என்டிஏ (ப. நே.),<br>எச்என்டிஐரி (மு. நே.),<br>எச்என்டி ஆங்கிலம் (மு. நே.),<br>எச்என்டி ஆங்கிலம் (ப. நே.) |
| 18. உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம், திருகோணமலை | கிண்ணியா வீதி, வரோதயா நகர், திருகோணமலை | 026-2223232<br>026-2050617 | எச்என்டிஏ (மு. நே.),<br>எச்என்டிஏ (ப. நே.),<br>எச்என்டிஐரி (மு. நே.),<br>எச்என்டிஐரி (ப. நே.),<br>எச்என்டி ஆங்கிலம் (மு. நே.),<br>எச்என்டி ஆங்கிலம் (ப. நே.),<br>எச்என்டிரிஎச்எம் |
| 19. உயர் தொழில்நுட்பவியல் நிறுவகப் பிரிவு வவுனியா | பழைய ஏ9 வீதி, வேப்பங்குளம், ஓமந்தை, வவுனியா | 024-2052733 | எச்என்டிஏ (மு. நே.),<br>எச்என்டிஏ (ப. நே.),<br>எச்என்டி ஆங்கிலம் (மு. நே.),<br>எச்என்டி ஆங்கிலம் (ப. நே.),<br>எச்என்டிஐரி (மு. நே.) |

என். எம். கே. கே. நவரத்ன,
பணிப்பாளர் நாயகம்,
இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகம்.

*Office use only –* *Course Number …………*

***SPECIMEN APPLICATION FORM***

**SRI LANKA INSTITUTE OF ADVANCED TECHNOLOGICAL EDUCATION**

**Application Form for Admission to Higher National Diploma Courses in Year 2019**

**Name the Courses in the order of preference**

1. ………...…..........................…………...
2. ………...…..........................…………...
3. ………...…..........................…………...

1. Name with Initials :——————.
2. Name/Names denoted by Initials :——————.
3. Postal address :——————.
4. Date of Birth : Year :————— Month :———— Day :————.

   Age (as at 01.03.2019) : Years :———— Months :———— Days :—————.
5. National Identity Card No. :——————.
6. Email Address :——————.
7. Gender :——————.
8. Administrative District :——————.

   Contact Phone Number :——————.
9. (i) Results of G.C.E. Advanced Level Examination :

   Year:——————. Index No. :——————. Medium :——————.

| *Subjects* | *Grade* |
|---|---|
| 1. ……………………. | ……………. |
| 2. ……………………. | ……………. |
| 3. ……………………. | ……………. |
| 4. ……………………. | ……………. |

Common General Paper : (Pass/Fail)

Aggregate/Z-Score of the above Examination :——————.

(ii) Results of G.C.E. Ordinary Level Examination :-

Year:———————.  Index No. :———————.  Medium :———————.

| | *Subjects* | *Grade* | | *Subjects* | *Grade* |
|---|---|---|---|---|---|
| 1. | ............................ | .................. | 6. | ............................ | .................. |
| 2. | ............................ | .................. | 7. | ............................ | .................. |
| 3. | ............................ | .................. | 8. | ............................ | .................. |
| 4. | ............................ | .................. | 9. | ............................ | .................. |
| 5. | ............................ | .................. | 10. | ............................ | .................. |

10. Highest Qualification for English in G. C. E. Ordinary Level Examination :–
Year :———————.  Index No. :———————.  Grade :———————.

11. Only for part time Courses :
Details of Present Employment/Self-mployment :——.
Post :———————.
E.P.F. Number :———————.
Place of Work and Address :———————.
Date of Appointment :———————.
Business Registration Number (BRN) :———————.
Date of (BRN) :———————.

I do hereby declare that I am not following any other full time course of study in any other state institution. I am aware that my registration will be cancelled at any time during the period of study if it is found that I concurrently follow a full time course at any other state institution or provide false or incorrect information. I do hereby certify that the information furnished here is true and accurate to the best of my knowledge.

———————,
Signature of Applicant.

Date :———————.

(The bank receipt for Rs. 500 : payable to SLIATE should be affixed below.)

**Affix the Bank Slip for the amount of**
**Rs. 500 credited to the SLIATE account in the People's Bank**

| | | |
|---|---|---|
| Name of the Bank | : | People's Bank |
| Branch | : | Hyde Park Corner Branch, Colombo 02 |
| Account No. | : | 025-2-001-1-3397613 |

02-68

## தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் புள்ளிவிபர உத்தியோகத்தர் தரம் II இற்கான முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை 2013 (2019)

## First Efficiency Bar Examination for Grade II Statistical Officers in the Department of Census and Statistics - 2013 (2019)

*01. தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் புள்ளி விபரத் உத்தியோகத்தர் பதவிக்குரிய அலுவலர்கள் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் புள்ளிவிபர உத்தியோகத்தர் தரம் II பதவிக்கான முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் 2019, மே மாதத்தில் நடாத்தப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகிறது.*

*2.* (i) *இப்பரீட்சை இலங்கைப் பரீட்சைகள் திணைகளத்தின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுவதுடன் பரீட்சையை நடாத்துதல், பெறுபேறுகளை வெளியிடுதல் சம்பந்தமாக அவரால் விதிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும். பரீட்சை நடத்துதல் மற்றும் பெறுபேறு வெளியிடல் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.*

(ii) *பரீட்சார்த்திகளுக்கான விதிமுறைகள், வர்த்தமானியில் பிரத்தியேகமாக அச்சிடப்பட்டுள்ளது. இவ்விதிமுறைகளை மீறுமிடத்து, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும்.*

*3.* ***பரீட்சைக் கட்டணம்:***

*பரீட்சைக்குரிய பாடங்கள் பொருட்டு ஒரே தடவையில் அல்லது தனித்தனியாக தோற்ற முடியும். முழுமையாக அல்லது ஒரு பாடத்திற்கு முதல் தடவையாக தோற்றும் பரீட்சார்த்திகளிடமிருந்து பரீட்சைக் கட்டணம் அறவிடப்படமாட்டாது. அதன் பின்னர் தோற்றும் ஒவ்வொரு தடவையும் ஒரு பாடத்துக்கு ரூபா 250 உம், மொத்தப் பாடங்கள் பொருட்டு ரூபா 500 உம், பரீட்சைக் கட்டணமாக அறவிடப்படும். இப்பரீட்சைக் கட்டணம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இற்கு வரவு வைக்கும் வகையில் நாட்டின் எந்த ஒரு தபால்/உப தபால் அலுவலகத்திற்கு அல்லது மாவட்டச் செயலகத்திற்கு அல்லது பிரதேசச் செயலகத்திற்கு செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் உரிய பகுதியில் கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும். இந்தப் பரீட்சைக் கட்டணத்துக்கு மேலதிகமாக எவ்வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது. (பற்றுச்சீட்டின் பிரதியை வைத்திருத்தல் பயனுள்ளதாகும்) பரீட்சைக் கட்டணத்தின் பொருட்டு காசுக் கட்டளையோ அல்லது முத்திரையோ ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் செலுத்தப்பட்ட பணம் எந்தவொரு காரணத்திற்காகவும் மீளச் செலுத்தப்படவோ அல்லது வேறு பரீட்சையின் பொருட்டு மாற்றப்படவோ மாட்டாது.*

*4.* ***விண்ணப்பப்படிவம் அனுப்ப வேண்டிய முறை:***

*விண்ணப்பப்படிவம் இங்கு இணைக்கப்பட்டுள்ள மாதிரிக்கு அமைய தயாரிக்கப்படுதல் வேண்டும். இவ்விண்ணப்பப்படிவம் A4 தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தித் தயாரிக்கப்படுவதுடன் தலைப்பு இல. 01 இலிருந்து 05 வரை முதலாம் பக்கத்திலும் ஏனையவை இரண்டாம் பக்கத்திலும் அமையும் வண்ணம் தயாரிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பம் தயாரிக்கும் போது தலைப்பில் குறிப்பிட்ட பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பதாரிகள் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் பரீட்சார்த்திகள் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பப்படிவம் தட்டச்சிடப்பட்டு தயாரிக்கப்பட இயலுமாயினும் அதனை சரியாகவும் தெளிவாகவும் விண்ணப்பதாரியின் கையெழுத்தால் பூரணப்படுத்துதல் வேண்டும். அவ்வாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் விண்ணப்பதாரிகளால் திணைக்கள தலைவர் ஊடாக, 2019, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்குமாறு "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்புக் (நிறுவனம் சார் மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள்) கிளை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் த. பெ. இல. 1503, கொழும்பு" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவம் வைத்தனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். பூரணமற்ற தகவல்களைக் கொண்ட விண்ணப்பங்களும் கையேற்கும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும். மேலும் பூர்த்தி செய்த விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும் விண்ணப்பதாரிகள் சரிபார்த்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பம் நிராகரிக்கப்படும். (பூர்த்தி செய்த விண்ணப்பப்படிவத்தின் பிரதியை வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.)*

**05. பரீட்சார்த்தியின் ஆளடையாளம் :**

பரீட்சார்த்திகள் பரீட்சை நிலையத்தில் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின்போதும் பரீட்சை நிலையப் பொறுப்பாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதன் பொருட்டு பின்வரும் ஆவணங்களில் ஒன்று ஏற்றுக் கொள்ளப்படும்.

I. தேசிய ஆளடையாள அட்டை;

II. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு;

III. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

மேற்குறிப்பிட்ட ஆவணமொன்றை சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி சம்பந்தமான பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

06. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளார்கள் எனும் எடுகோளின் பேரில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட வயதெல்லையினுள், விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் சரியாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை நேர அட்டவணை பிரதியுடன் அனுமதி அட்டையும் வழங்கப்படும். பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டை வழங்கப்பட்டவுடன் அதுபற்றிய அறிவித்தல் செய்தித்தாள்களிலும் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலும் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 02 அல்லது 03 தினங்களின் பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காவிடின் அதுபற்றி அறிவித்தலில் குறிப்பிட்ட தொலைபேசி இலக்கங்கள் மூலம் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். அதன்போது விண்ணப்பதாரரின் முழுப்பெயர், முகவரி, தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் மற்றும் பரீட்சையின் பெயர் என்பவற்றை குறிப்பிடுதல் வேண்டும். என்பதுடன் அவ்வாறு விசாரிக்கும் போது விண்ணப்பதாரர் தம் வசம் வைத்திருந்த விண்ணப்பப்படிவத்தின் பிரதியையும், பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதியையும், தபால் கந்தோரில் பதிவு செய்த பற்றுச்சீட்டையும் கைவசம் வைத்திருத்தல் முக்கியமானதாகும். கொழும்புக்கு வெளியேயுள்ள பிரதேசமாயின் அனுமதி அட்டையின் பிரதியொன்றை அனுப்புவதற்காக தொலைநகல் இலக்கத்துடன் மேற்குறிப்பிட்ட தகவல்களையும் குறிப்பிட்டு தங்களின் வேண்டுகோள் கடிதத்தை தொலைநகல் மூலம் பரீட்சைகள் திணைக்களத்துக்கு அனுப்பி விசாரித்தலும் மிகப் பொருத்தமானதாகும்.

6.1 பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்போது காணப்படட விண்ணப்பதாரியின் பதவி, சேவை நிலையம் என்பன பரீட்சை சம்பந்தமான சகல நடவடிக்கைகளுக்கும் ஏற்புடையன என்பதுடன் விண்ணப்பம் அனுப்பப்பட்டதன் பின்னர் அது தொடர்பில் இடம் பெறும் மாற்றங்கள் எதுவும் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

6.2 பரீட்சைக்கான அனுமதி அட்டையில் பரீட்சாரத்தியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். பரீட்சார்த்தி அனுமதி அட்டையில் தமது கையொப்பத்தை நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரைக் கொண்டு உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

6.3 பரீட்சைக்குத் தோற்றும் முதல் தினத்திலேயே தனது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொண்ட அனுமதி அட்டையை பரீட்சை நிலையப் பொறுப்பாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

7. இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் வழங்கப்பட்ட அனுமதி அட்டையுடன் முதல் முறையாக பரீட்சைக்குத் தோற்றும் உத்தியோகத்தர்களுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஏற்ற வகையில் திணைக்களத் தலைவரினால் கடமை லீவு வழங்கப்படுதல் வேண்டும். பிரயாணக் கட்டணம் வழங்கப்பட மாட்டாது.

8. இப்பரீட்சை தமிழ், சிங்களம், ஆங்கில மொழி மூலங்களில் மாத்திரம் நடாத்தப்படும். விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலமாக, போட்டிப் பரீட்சை ஒன்றின் ஊடாக சேவையில் இணைந்தவராயின் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றிய மொழியையும் போட்டிப் பரீட்சையின்றி அரச சேவையில் இணைந்தவராயின் அரச சேவையில் இணைவதற்கு ஏற்புடைய பரீட்சைக்குத் தோற்றிய மொழியையும் மொழி மூலமாகத் தெரிவு செய்தல் வேண்டும். பரீட்சைக்குரிய சகல பாடங்களுக்கும் ஒரே மொழிமூலத்தைப் பயன்படுத்துதல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பித்த மொழிமூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

9. இப்பரீட்சை கொழும்பில் மாத்திரம் நடைபெறும்.

10. பரீட்சைப் பாடத்திட்டம் :

மேற்படி பதவிக்கு உரிய பரீட்சை கீழ்க் குறிப்பிட்ட பாடங்களை உள்ளடக்கும்.

| வினாப்பத்திரம் | நேரம் | மொத்தப் புள்ளிகள் | சித்தி பெற வேண்டிய புள்ளிகள் |
|---|---|---|---|
| 1. அடிப்படைப் புள்ளிவிபர முறைகள் | 02 மணி | 100 | 40% |
| 2. அலுவலக நிர்வாகமும் தாபன விதிக்கோவையும் | 02 மணி | 100 | 40% |
| 3. நிதி ஒழுங்கு விதிகள் | 02 மணி | 100 | 40% |

| | வினாப்பத்திரம் | பாடத்திட்டம் |
|---|---|---|
| 1. | அடிப்படைப் புள்ளி விபர முறைகள் | தரவு சேகரித்தல், சமர்ப்பித்தல், t பரம்பல் , சாதாரண பரம்பல், t கருதுகோட் சோதனை கோட்பாடுகளும் $x^2$ சோதனையும் இழைவரையம் மற்றும் மீடிறன் வளையி, மத்திய சார்பும், பிரிகை அளவுகளும் (ஆகாரம், இடையம், இடை) மாறற்றிறன், காலணை, நியம விலகல், மாதிரியெடு நுட்ப தத்துவங்கள், மாதிரியெடு அளவீடு, மாதிரியெடுப்பு வழு, மாதிரியெடுப்பல்லா வழு, சுட்டெண்கள், எளிய இணைபு, ஏகபரிமாணம் பிற்செலவு, அடிப்படைப் புள்ளிவிபர அறிவு<br><br>வினாப்பத்திரத்தின் கட்டமைப்பு:<br>a) வினாப்பத்திரம் கட்டுரை வடிவிலான 04 வினாக்களைக் கொண்டுள்ளது.<br>b) எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். |
| 2. | அலுவலக நிர்வாகமும் தாபன விதிக்கோவையும் | இதன் பொருட்டு தாபன விதிக்கோவையின் II, III, IV, V, VIII, XII, XIII, XIV, XIX ஆகிய அதிகாரங்களையும் அவ்வதிகாரங்கள் மீதும் திருத்தஞ் செய்யப்பட்ட சுற்றறிக்கைகள் மீதும் கவனம் செலுத்தவும்.<br><br>வினாப்பத்திரத்தின் கட்டமைப்பு:<br>a) வினாப்பத்திரம் கட்டுரை வடிவிலான 05 வினாக்களைக் கொண்டுள்ளது.<br>b) எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். |
| 3. | நிதி ஒழுங்கு விதிகள் | இது நிதி ஒழுங்குவிதிகளின் கீழ்க் குறிப்பிடப்பட்ட அதிகாரங்களை உள்ளடக்கும்:<br><br>➢ II ஆம் அதிகாரம் - வருமான செலவின மதிப்பீடு, திரட்டிய நிதியம், வருடாந்த மதிப்பீடு, வருடாந்த மதிப்பீட்டை மாற்றுதல் (நி. ஒ. 1 - 68 வரை)<br><br>➢ III ஆம் அதிகாரம் - நிதி முகாமையும் பொறுப்புடைமையும் பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர்கள், கணக்கீட்டு உத்தியோகத்தர்கள், வருமானக் கணக்கு, உத்தியோகத்தர்களின் கொடுப்பனவுகளுக்கு அதிகாரம் வழங்குதல், அங்கீகாரமளித்தல், சான்றுப்படுத்தல், வேலைகளைக் குறித்தொதுக்குதல் (நி. ஒ. 124 - 147 வரை)<br><br>வினாப்பத்திரத்தின் கட்டமைப்பு:<br><br>a) வினாப்பத்திரம் கட்டுரை வடிவிலான 05 வினாக்களைக் கொண்டுள்ளது.<br>b) எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். |

**குறிப்பு -**

- மேற்படி பாடங்களுக்கு தனித்தனியாகவும் தோற்ற முடியும்.
- குறித்த காலத்தில் பரீட்சையில் சித்தியடையாமை அதன் பின்னரான வேதன ஆண்டேற்றத்தை பிற்போடுவதற்கு ஏதுவாகலாம்.

11. பரீட்சார்த்திக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படுதலானது, அவர் பரீட்சைக்குத் தோற்ற தகைமையுள்ளவர் எனக் கருதுதலாகாது.

12. பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டத் திட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். குறித்த சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு ஆளாக அவருக்கு நேரிடும்.

13. பரீட்சையில் சித்தியடையும் பொருட்டு ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் பெற வேண்டிய ஆகக் குறைந்த புள்ளி அளவு 40% ஆகும். பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பதாரிகளின் புள்ளிகள் அடங்கிய ஆவணமொன்று பணிப்பாளர் நாயகம், தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்திற்கு இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் வழங்கப்படும். பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், பெறுபேறுகளை பரீட்சைக்குத் தோற்றிய விண்ணப்பதாரிகளுக்கு தனிப்பட்ட ரீதியில் அறிவிக்கமாட்டார். பரீட்சைக்குரிய பாடங்களை ஒரே தடவையில் அல்லது சில தடவைகளில் பூர்த்தி செய்வதற்கு விண்ணப்பதாரிகளுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

14. இவ் வர்த்தமானி அறிவித்தலில் கூறப்பட்ட ஏற்பாடுகள் தவிர்ந்த வேறு ஏதேனும் விடயம் தொடர்பில் தொகை மதிப்பு புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

15. இவ்வறிவித்தலின் சிங்கள, தமிழ், ஆங்கிலப் பதிப்புகளில் ஏதேனும் குறைபாடுகள் இருப்பின் சிங்களப் பதிப்பில் குறிப்பிட்ட விடயங்களே உத்தியோகபூர்வமானவையாகும்.

பணிப்பாளர் நாயகம்,
தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்.

"சங்கியான மந்திரய",
இல. 306/71, பொல்தூவ வீதி,
பத்தரமுல்லை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் புள்ளிவிபர உத்தியோகத்தர் தரம் II இற்கான முதலாவது வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சை - 2013 (2019)

**FIRST EFFICIENCY BAR EXAMINATION FOR GRADE II STATISTICAL OFFICERS IN THE DEPARTMENT OF CENSUS AND STATISTICS - 2013 (2019)**

[ ]
(அலுவலக உபயோகத்திற்காக)

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3 [ ]
ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதுக.)

01. 1.1 முழுப் பெயர் : ..................................................................................................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) (உதாரணம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMAR GUNAWARDHANA)

1.2 இறுதிப் பெயரை முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்களை இறுதியிலும் இட்டு பெயர்: .................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) உதாரணம்: GUNAWARDHANA, H. M. S. K.
..........................................................................................................................

1.3 முழுப் பெயர்: ..................................................................................................
(தமிழில் /சிங்களத்தில்)

02. 2.1 அலுவலகத்தின்/திணைக்களத்தின்/நிறுவனத்தின் பெயரும் முகவரியும் : ..................................................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)
(அனுமதி அட்டை இந்த முகவரிக்கு தபாலில் அனுப்பப்படும்.)

2.2 அலுவலகத்தின்/திணைக்களத்தின்/நிறுவனத்தின் பெயரும் முகவரியும்:
(தமிழில் /சிங்களத்தில்) ................................................................................................

2.3 தனிப்பட்ட முகவரி :
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)................................................................................

2.4 தொலைபேசி இலக்கம்:

கையடக்க தொலைபேசி | | | | | | | | | | |

நிலையான தொலைபேசி | | | | | | | | | | |

03. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | | | |

04. பால் :

பெண் - 1

ஆண் - 0 | |

(உரிய இலக்கத்தை கூட்டில் எழுதுக.)

05. நீங்கள் இம்முறை தோற்றவுள்ள பாடம்/பாடங்கள்:

| தொடரிலக்கம் | பாடம் | பாட இலக்கம் |
|---|---|---|
| 01. | | |
| 02. | | |
| 03. | | |

06. பிறந்த திகதி :
வருடம் | | | | | மாதம் | | | திகதி | | |

07. தற்போது வகிக்கும் பதவி :

7.1 பதவி : ............................................

7.2 நியமனக் கடித இலக்கம் :.......................................

08. 8.1 நீங்கள் பரீட்சைக்கு முதற் தடவையாகவா தோற்றுகிறீர்கள்? :....................

8.2 முதற் தடவையல்லாவிடின் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் :..................

8.3 பற்றுச்சீட்டு இல. : ..................

8.4 திகதி : ..........................

பற்றுச்சீட்டை இங்கு ஒட்டவும். (ஏற்புடையதாயின் மட்டும்.)
(பற்றுச்சீட்டின் பிரதியை வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.)

09. விண்ணப்பதாரரின் வெளிப்படுத்துகை:

மேற் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை என்றும் மேற்குறிப்பிட்ட மொழிமூலத்தில் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியுடையவனாவேனென்றும் பரீட்சைக் கட்டணமாக ரூபா ............ செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டு இங்கு ஒட்டப்பட்டுள்ளதென்றும் தெரிவித்துக் கொள்வதுடன் இப் பரீட்சையை நடத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் சம்பந்தமாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு ஏற்ப அமைந்தொழுக உடன்படுகின்றேன் என்றும் வெளிப்படுத்துகின்றேன்.

....................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :..............................

**குறிப்பு**.- தமது திணைக்களத் தலைவர் அல்லது திணைக்களத் தலைவர் சார்பாக கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் முன்னிலையில் விண்ணப்பதாரி கையொப்பமிடுதல் வேண்டும்.

10. கையொப்பத்தை உறுதிப்படுத்தல்

திரு./திருமதி/செல்வி ...................................... எனது திணைக்களத்தில் சேவையாற்றுகிறார் என்றும் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும் ................................ ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் உறுதிப்படுத்துகிறேன்.

.............................
கையொப்பத்தை உறுதிப்படுத்தும் அலுவலரின் கையொப்பம்.

பெயர் : ---------------------------------------------
பதவி : ---------------------------------------------
முகவரி : ---------------------------------------------
திகதி : ---------------------------------------------

(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தவும்).

11. திணைக்களத் தலைவரின் சான்றுரை:

1. மேலே வழங்கப்பட்ட விபரங்கள் சரி பார்க்கப்பட்டதென்றும்;
2. உத்தியோகத்தர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியுடையவர் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

------------------------------------
திணைக்களத் தலைவரின் கையொப்பமும் பதவி முத்திரையும்.

பெயர் : ---------------------------------
பதவி : ---------------------------------
முகவரி : ---------------------------------
திகதி : ---------------------------------

2-274/1

---

## விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியை மாற்றுதல்/நீடித்தல்

### ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்திற்கு, பயிலிளவல்களை (Cadets) பட்டப்படிப்புக்கு அனுமதித்தல்

2019.01.18 ஆந் திகதிய 2017 ஆம் இலக்க வர்த்தமானி அறிக்கையில் 1-765 ஆம் இலக்கத்தில் வெளியான பயிலிளவல் அனுமதி சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் சேர்க்கப்படுகின்றன.-

இலங்கை பொலிஸ்படை சார்பாக ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்திற்கு மருத்துவ மாணவர்களை அனுமதித்தல்.-

1. பொலிஸ் உப அதிகாரி எனும் நிலையின் கீழ் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தால் 2019.01.18 ஆந் திகதி முதல் 2019.02.08 ஆந் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. உப - பொலிஸ் அதிகாரிக்குரிய( மருத்துவ மாணவர்) மருத்துவ பட்ட பாடநெறி இரத்மலானையிலுள்ள ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தில் நடைபெறும்.

2.1 மருத்துவ சத்திரசிகிச்சையியல் ( MBBS) பட்டப்பாட நெறி காலம் ஐந்து ( 05) ஆண்டுகள் .

2.2 பொலிஸ் இலாகாவின் சேவையிலிருந்து உப- பொலிஸ் அதிகாரியாக மருத்துவத் துறைக்குத் தேவையான வெற்றிடங்கள் மற்றும் தெரிவுக்கான நேர்முகப் பரீட்சையில் அவர்கள் பெறும் மதிப்பெண்களின் அடிப்படையில் அனுமதிக்கப்படுவர். இப்பட்டத்தைப் பூர்த்தி செய்த பின்னர் இலங்கையின் இடத்துக்கு பொலிஸ் சேவையின் ஒரு பிரிவாகிய பொலிஸ் உதவி அத்தியட்சகர் ( மருத்துவம்) எனும் பதவியிலமர்த்தப்படுவர்.

2.3 அனைத்துப் பட்ட பாடநெறிகளும் ஆங்கிலத்தில் மாத்திரமே நடைபெறும்.

2.4 தேருநர்கள் பின்வரும் பட்டப் பாடநெறிகளுக்கு அவர்களது தகைமைகளின் அடிப்படையில் அனுமதிக்கப்படுவர்.

(i) மருத்துவம் மற்றும் சத்திர சிகிச்சையியல் (MBBS) பாடநெறியின் காலம் ஐந்து ஆண்டுகள் (5 ஆண்டுகள்);

(ii) க.பொ.த. (உ./ த.) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் (உயிரியல், இரசாயனவியல் மற்றும் பௌதிகவியல்) கற்று 2018 ஆம் ஆண்டில் குறைந்தபட்சம் மூன்று சாதாரண (S) சித்திகளுடன் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கக்கூடிய தகைமையை உடையவர்கள் இப் பட்டப்பாடநெறிக்கு தகுதியுடையவர்கள்;

3. உப - பொலிஸ் அதிகாரி ( மருத்துவ மாணவர்) கொண்டிருக்க வேண்டிய ஏனைய தகைமைகள்.-

A. இலங்கைப் பிரசையொருவராக இருத்தல் வேண்டும்.

B. வயது 18 இற்குக் குறையாமலும் 22 இற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

C. **கல்வித் தகைமைகள்:**

i. க.பொ.த. (உ./ த.) பரீட்சையில் பொருத்தமான பாடப்பிரிவில் குறைந்தபட்சம் மூன்று சாதாரண (**S**) சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கக்கூடிய தகைமையை உடையவர்களே பல்கலைக்கழக அனுமதிக்குரிய அவசியமான தகைமைகளைப் பெற்றவராவர்;

அத்துடன்,

ii. கல்விப் பொது தராதரப் பத்திர சாதாரண தரத்தில் சித்தி;

iii. கல்விப் பொது தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கில பாடத்தில் திறமைச் (C) சித்தி;

iv. கல்விப் பொது தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கிலம், கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ் ஆகிய பாடங்களில் திறமைச் சித்திகள் உள்ளடங்கலாக மொத்தம் ஆறு (6) பாடங்களில் திறமைச் சித்தி ;

v. ஆகக் குறைந்தளவு பின்வரும் உடற் பருமனளவுகளைக் கொண்டிருத்தல் -

| | பொலிஸ் | |
|---|---|---|
| | ஆண் | பெண் |
| உயரம் | 5' 6" | 5'4" |
| மார்பு | 32' | - |

| கண்பார்வை | | | |
|---|---|---|---|
| இடம் | வலம் | இடம் | வலம் |
| 6/12 | 6/6 | - | - |
| கண்ணாடி /வில்லை இல்லாமல் | | கண்ணாடி /வில்லையுடன் | |

4. விண்ணப்பங்கள்.- இதற்குரிய விண்ணப்பப்படிவத்தை இப்பல்கலைக்கழகத்தின் இணையத்தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்ய முடியும். இணையத்தளம் : www.kdu.ac.lk

5. சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை அனுப்பும்போது "உப வேந்தர், ஜெனரல் சேர். ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம்" சார்பில் இலங்கை வங்கி மொரட்டுவை - இடம கிளையில் நடைமுறைக் கணக்கு இலக்கம் "9405831" இற்கு வரவு வைக்கப்படுவதற்காக இலங்கை வங்கியின் ஏதாவது ஒரு கிளைக்கு ரூபா 1,000 ( ஆயிரம் ரூபா) தொகையினை செலுத்துவதன் மூலம் தங்களுக்கு வழங்கப்படும் பற்றுச்சீட்டு விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். அடிப்படைத் தகைமையற்ற விண்ணப்பங்கள் மற்றும் சரிவர நிரப்பப்படாத அல்லது இத்தகவலின் நிபந்தனைகளின் பிரகாரம் அமையாததுமான விண்ணப்பங்கள் அறிவித்தலேதுமின்றி நிராகரிக்கப்படுவதுடன், அவ்விண்ணப்பக் கட்டணங்கள் மீளளிப்புச் செய்யப்படவும் மாட்டாது. உப வேந்தர்களால் நியமனம் செய்யப்படும் தெரிவுக் குழுவினால் தீர்மானிக்கப்படும் நியதிகளுக்கு இணங்க , மேலே குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளிடையேயிருந்து பூர்வாங்க தெரிவுகள் இடம்பெறுவதுடன் அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்திகள் ஆரம்ப நேர்முகப்பரீட்சைக்காக அழைக்கப்படுவர்.

6. சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் "பதிவாளர், ஜெனரல் சேர். ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம், இரத்மலானை" எனும் முகவரிக்கு 2019.02.08 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

7. விண்ணப்பத்துடன் பிறப்புப் பதிவுச் சான்றிதழ், க.பொ.த. (சா./த.) மற்றும் க.பொ.த. (உ./த.) பெறுபேற்றுத் தாள்கள் மற்றும் பல்கலைக்கழக அனுமதி தகுதிக்கான பெறுபேற்றுத்தாள் ஆகிய ஆவணங்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை மாத்திரமே இணைத்து அனுப்பிவைத்தல் வேண்டும்.

8. வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலின் தமிழ் மொழிக்கும் சிங்கள மொழிக்கும் இடையே ஏதேனும் பரஸ்பர வேறுபாடுகள் ஏற்படின், சிங்கள மொழி மூலமான வர்த்தமான அறிவித்தலைப் பின்பற்றுமாறு இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

ஹேமசிறி பெர்னாண்டோ,
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு மற்றும் முகாமைத்துவ சபையின் தலைவர்,
ஜெனரல் சேர். ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம்.

2-434

---

### நீதிச் சேவை ஆணைக்குழு

## அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவைக்குரிய இலங்கை நீதிமன்றப் பதிவாளர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை (எழுத்து) – 2018 (2019)

இலங்கை நீதிமன்ற பதிவாளர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்காக தகைமையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. இப்பரீட்சை மூலம் இலங்கை நீதிமன்றப் பதிவாளர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்த்துக் கொள்ளப்படும்.

எழுத்துப் பரீட்சை : இப்பரீட்சையானது நான்கு (04) வினாப்பத்திரங்களைக் கொண்டதாகும்.

| | வினாப்பத்திரம் | நேரம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடைய பெற வேண்டிய புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 01. | தாபனவிதிக் கோவை மற்றும் நிதிப்பிரமாணங்கள் | 02 மணித்தியாலம் | 100 | 40 |
| 02. | நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் | 01 மணித்தியாலம் | 100 | 40 |
| 03. | ஆங்கில மொழித் தேர்ச்சி | 1 ½ மணித்தியாலம் | 100 | 40 |
| 04. | இலங்கையின் பொருண்மை மற்றும் நடவடிக்கைமுறைச் சட்டங்கள். | 01 மணித்தியாலம் | 100 | 40 |

**நேர்முகப் பரீட்சை :-**

பரீட்சையில் சகல பாடங்களிலும் சித்தி பெற்ற பரீட்சார்த்திகள் பெற்றுக் கொண்ட உயர் புள்ளிகளை கீழ் நோக்கிய ஒழுங்கினை பின்பற்றி, தகைமைகளை பரீட்சிக்கும் நேர்முகப்பரீட்சையின் பின்னர் அப்பரீட்சைக்காக ஒதுக்கப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு சமமான விண்ணப்பதாரிகள் நியமிக்கப்படுவார்கள். எவ்வாறாயினும் குறித்த வெற்றிடங்களை நிரப்பாமலிருப்பதற்கான தீர்மானத்தை நீதிச்சேவை ஆணைக்குழு எடுக்க முடியும்.

**02. சேவை நிபந்தனைகள்:**

2.1 பகிரங்க சேவையின் நியமனத்தை கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2088/26 ஆம் இலக்க மற்றும் 11.09.2018 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அட்டவணைப்படுத்தப்பட்ட அரச தொடர்பிலான பிரமாணக் குறிப்பில் விதிக்கப்பட்டுள்ள நியமங்கள்

மற்றும் நிபந்தனைகளுக்கும், அப்பிரமாணக்குறிப்பிற்கு செய்யப்பட்டுள்ள அல்லது எதிர்காலத்தில் செய்யப்படவுள்ள திருத்தங்களுக்கும், தாபன விதிக்கோவை நிதிப்பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் நீதிமன்றப் பதிவாளர் சேவையின் தரம் III இற்கு நியமிக்கப்படுவார்கள்.

2.2 இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியத்திற்குரியது. அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவைக்குரிய உத்தியோகத்தர்களின் பதவிகள் ஓய்வூதியத்துடனானவை என மேலே குறிப்பிடப்பட்டிருந்தாலும் எதிர்காலத்தில் இலங்கை நீதிமன்ற பதிவாளர் சேவையின் தரம் III இற்கு நியமனம் பெறும் உத்தியோகத்தர்களுக்குரிய ஓய்வூதிய முறைமையானது அரசாங்கத்தினால் மற்றும் / அல்லது நீதிச்சேவை ஆணைக்குழுவினால் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு அமைய நிர்ணயிக்கப்படும்.

2.3 இந்நியமனமானது ஒரு வருட பதிற்கடமையாற்றும் காலத்தைக் கொண்டதாகும். இலங்கை நீதிமன்ற பதிவாளர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்க்கப்பட்டு 06 வருடங்களுக்குள் பிரமாணக்குறிப்பின் 8.13 இல் குறிப்பிடப்பட்டுள்ளதற்கமைய வினைத்திறன் காண் தடைத்தாண்டல் பரீட்சையில் சித்தி பெறல் வேண்டும்.

2.4 பொது நிர்வாகச் சுற்று நிருபம் 01/2014, அதற்கு மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கு அமைவாக நீதிச் சேவை ஆணைக்குழுவின் 396 ஆம் இலக்க சுற்றுநிருபம் மற்றும் அதற்கு மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கு அமைவாக இலங்கை நீதிமன்ற பதிவாளர் சேவையின் தரம் III இன் உரிய நிலைக்கு ஏற்ப பதவிக்கு ஆட்சேர்க்கப்பட்டு 05 வருடங்களுக்குள் உரிய அரச கரும மொழித் தேர்ச்சியினை பெற்றுக்கொள்ள வேண்டும்.

2.5 நீதிச்சேவை ஆணைக்குழுவின் கட்டளைக்கு அமைவாக, தமக்கு வழங்கப்பட்ட பதவியின் கடமைகளை உரிய திகதியில் பொறுப்பேற்பதற்கு தவறும் மற்றும் / அல்லது நியமனம் பெற்ற பதவியில் அல்லது நியமனம் வழங்கப்பட்ட பிரதேசத்தில் கடமைகளைப் பொறுப்பேற்க மறுக்கும் அல்லது புறக்கணிக்கும் விண்ணப்பதாரிகளின் நியமனத்தை செல்லுபடியற்றதாக்குவதற்கான ' அதிகாரம் உள்ளது.

03. மாதாந்த சம்பள அளவு : 03/2016 மற்றும் அதற்கமைவாக நீதிச் சேவை ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட 2016.06.24 திகதிய நீதிச் சேவை ஆணைக்குழுவின் 386ஆம் இலக்க சுற்றுநிருபத்திற்கு அமைவாக அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவைக்குரிய இலங்கை நீதிமன்ற பதிவாளர் சேவையின் தரம் III இற்குரிய மாதாந்த சம்பள அளவு (MN 7-2016) 41,580 – 11 x 755 – 18 x 1,030 – ரூபா 68,425 (ஆரம்ப சம்பளப் படிநிலை 03 - ரூபா 43,090) ஆவதுடன் அச்சம்பளம் 2020.01.01 ஆந் திகதி தொடக்கம் உங்களுக்கு உரித்தாகும். மேற்குறிப்பிட்ட சுற்றுநிருபத்தின் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் படி நியமனம் நடைமுறைக்கு வரும் திகதியிலிருந்து சம்பளம் வழங்கப்படும்.

04. **ஆட்சேர்ப்பு தகைமைகள் :**

அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற பதிவாளர் தரம் III இற்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்காக கீழ்வரும் தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(அ) i. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

ii. விண்ணப்பதாரி சிறந்த நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.

iii. அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவைக்கு ஆட்சேர்த்துக் கொள்ளப்படும் சகல விண்ணப்பதாரிகளும் நாட்டின் அனைத்து பாகங்களிலும் கடமையாற்றுவதற்கும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் உடல், உள ரீதியான ஆரோக்கியம் உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

(ஆ) நீதிமன்ற முகாமைத்துவ உதவியாளர் சேவைக்குரிய சேவையொன்றில் 10 வருடங்கள் உயிர்ப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்துள்ள சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள உத்தியோகத்தராக இருத்தல்.

அல்லது

(இ) நீதிமன்ற முகாமைத்துவ உதவியாளர் சேவைக்குரிய சேவையொன்றில் ஐந்து வருடங்கள் (05) உயிர்ப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்துள்ள மற்றும் அச்சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள உத்தியோகத்தராக இருத்தல் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள பல்கலைக்கழகத்தினால் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பட்டம் வழங்கக்கூடிய நிறுவனம் என ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நிறுவனத்தினால் வழங்கப்படும் பட்டம் ஒன்றை பெற்றிருத்தல் அல்லது அதற்கு சமமான தகைமையாக நீதிச்சேவை ஆணைக்குழு ஏற்றுக் கொள்ளும் தகைமையினை பெற்றிருத்தல் அல்லது சட்டத்தரணியாக உயர் நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் மேற்கொண்டிருத்தல்.

அல்லது

(ஈ) நீதிமன்றங்களில் பௌதீக ரீதியான (Physically) முறையில் தொடர்ந்து ஐந்து வருடங்கள் (05) உயிர்ப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்துள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்குரிய (நிகழ்ச்சித்திட்ட உதவியாளர், கணக்கீட்டு உதவியாளர் உட்பட) சேவை ஒன்றின் கீழ் தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள, விண்ணப்பங்கள் கோரப்படும் சந்தர்ப்பத்தில் நீதிமன்றமொன்றில் பௌதீக ரீதியாக (Physically) சேவையாற்றுகின்ற, அச்சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள உத்தியோகத்தராக இருத்தல் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள பல்கலைக்கழகத்தினால் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பட்டம் வழங்கக்கூடிய நிறுவனம் என ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நிறுவனத்தினால் வழங்கப்பட்ட பட்டமொன்றினை பெற்றிருத்தல் அல்லது அதற்கு சமமான தகைமையாக நீதிச்சேவை ஆணைக்குழு ஏற்றுக் கொள்ளும் தகைமையினை பெற்றிருத்தல் அல்லது சட்டத்தரணியாக உயர் நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் மேற்கொண்டிருத்தல்.

அல்லது

(உ) நீதிமன்ற குடும்ப ஆலோசனை சேவையில் மூன்று (03) வருடங்கள் உயிர்ப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்துள்ள சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள உத்தியோகத்தராக இருத்தல்.

05. **பரீட்சைக் கட்டணம்** - பரீட்சைக் கட்டணம் ரூ.600 ஆகும். இக்கட்டணத்தை "நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர்" பெயரில் மக்கள் வங்கி, டாம் வீதிக் கிளையில் பேணிச் செல்லப்படும் 297 100 199 025 039 கணக்கில் வைப்பிலிட்டு பெற்றுக் கொண்ட வைப்புச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் உரிய கூட்டினுள் அகற்ற முடியாத வகையில் ஒட்டுதல் வேண்டும். (வைப்புச்சீட்டின் நிழற்படப்பிரதி ஒன்றை உங்கள் வசம் வைத்துக் கொள்ளவும்.) எக்காரணத்திற்காகவும் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்படாததுடன் காசுக்கட்டளைகள் மற்றும் முத்திரைகள் பொறுப்பேற்கப்படமாட்டாது.

5.1 பரீட்சைத் திகதி – இப்பரீட்சையானது 2019 மே மாதத்தில் கொழும்பில் நடைபெறும். இப்பரீட்சையினை ஒத்தி வைக்கும் அல்லது செல்லுபடியற்றதாக்கும் அதிகாரம் நீதிச்சேவை ஆணைக்குழுவின் ஆலோசனைக்கு அமைய நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு உள்ளது.

**கவனிக்க** – சகல விண்ணப்பதாரிகளும் பதவிக்குரிய சகல தகைமைகளையும் வர்த்தமானப் பத்திரிகையின் திகதியாகிய 2019, பெப்புருவரி மாதம் 01 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

பரீட்சைக்காக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை பதிவுத் தபாலில் 2019.03.05 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் " செயலாளர், நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம், கொழும்பு 12" என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

விண்ணப்பப்படிவத்தை கொண்ட கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் "**அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவைக்குரிய நீதிமன்ற பதிவாளர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்காக நடத்தப்படும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை – 2018 (2019)**" என்பதனை தெளிவாக எழுத வேண்டும். இத்திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் பொறுப்பேற்கப்பட மாட்டாது.

06. **விண்ணப்பிக்கும் முறை** :

(அ) விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலில் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட வேண்டியதுடன், 8 1/2 " x 12" (A4) அளவுடைய கடதாசியின் இரு பக்கங்களையும் உபயோகித்து விண்ணப்பதாரியின் கையெழுத்தினால் விண்ணப்பப்படிவம் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். இதற்காக கணினியினால் தயாரிக்கப்பட்ட அல்லது தட்டெழுத்து செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை பயன்படுத்தலாம்.

மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்படாத விண்ணப்பப்படிவங்கள் மற்றும் முழுமையான தகவல்களைக் கொண்டிராத விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். (விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதியொன்றினை உங்கள் வசம் வைத்துக் கொள்ளவும்.) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் இப்பரீட்சை அறிவித்தலில் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளமையினை உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். அவ்வாறில்லாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

(ஆ) விண்ணப்பப்படிவம் விண்ணப்பதாரி பரீட்சைக்கு தோற்ற விரும்பும் மொழி மூலமே தயாரிக்கப்படல் வேண்டும்.

(இ) விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் நீதிமன்ற பதிவாளர் மற்றும் திணைக்களத் தலைவரினால் சான்றுப்படுத்தப்படல் வேண்டும்.

(ஈ) எல்லா விதத்திலும் முழுமையற்ற விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். தபாலிடப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் தொலைநகல் மற்றும் தாமதமாக கிடைக்கப்பெறல் என்பது தொடர்பாக கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

(உ) விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கப்பெற்றமை தொடர்பில் அறிவிக்கப்படமாட்டாது. விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டை அனுப்பப்பட்டதும் அது தொடர்பிலான அறிவித்தலொன்று இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் பத்திரிகைகளில் மற்றும் திணைக்களத்தின் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு இரண்டு அல்லது மூன்று நாட்கள் கடந்த பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கப் பெறாவிடின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பில் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். அவ்வாறு அறிவிக்கும்போது விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், முகவரி தேசிய அடையாள அட்டை இலக்கம் என்பவற்றை குறிப்பிடல் வேண்டும். கொழும்பிற்கு வெளியே வதியும் விண்ணப்பதாரி எனின் இவ்விபரங்களுடன் தொலைநகல் ஊடாக அனுமதி அட்டையின் பிரதி ஒன்றை பெறுவதற்கு ஏற்ற வகையில் விண்ணப்பதாரியின் தொலை நகல் இலக்கங்களையும் குறிப்பிட்டு கோரிக்கை கடிதமொன்றை **0112784232** என்ற தொலைநகல் இலக்கங்கள் ஊடாக இலங்கை பரீட்சைகள் திணைக்களத்திற்கு அனுப்புவதுடன் அது தொடர்பில் விசாரித்தலும் பயன்மிக்கதாக இருக்கும். மேலும் பரீட்சைகள் திணைக்களத்தினால் கேட்கப்படும் தகவல் ஒன்றை உறுதிப்படுத்துவதற்காக விண்ணப்பதாரி வசமுள்ள விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு மற்றும் விண்ணப்பப்படிவத்தை பதிவுத்தபாலில் அனுப்பியதனை உறுதிப்படுத்தும் பற்றுச்சீட்டினையும் தயாராக வைத்துக் கொள்ளல் பயனுள்ளதாக அமையும்.

07. **பரீட்சைக்குத் தோற்றுதல்.**

(அ) எல்லா விதத்திலும் முழுமையான விண்ணப்பப்படிவத்தை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டை வழங்கப்படும். தமது அனுமதி அட்டையை சமர்ப்பிக்காத விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சைக்கு தோற்றுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட மாட்டாது.

(ஆ) விண்ணப்பதாரிகள் தங்களுக்கு குறித்துரைக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும். அனைத்து விண்ணப்பதாரிகளும் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொண்டு, உரிய பரீட்சை மண்டபத்திற்குரிய அனுமதி அட்டையினை பரீட்சைக்கு தோற்றும் முதலாம் நாள் பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும். இவ்வர்த்தமானப் பத்திரிகையின் ஆரம்பத்தில் சகல விண்ணப்பதாரிகளும் பின்பற்ற வேண்டிய சட்டதிட்டங்களின் தொகுதியொன்று குறிப்பிடப்பட்டுள்ளது. பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை நடாத்துவதுடன் தொடர்புடையதாக விதிக்கப்படும் விதிகளுக்கு பரீட்சாத்திகள் கட்டுப்படுதல் வேண்டும். அவ்விதிகளை மீறினால் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும்.

**குறிப்பு** – விண்ணப்பதாரி ஒருவருக்கு அனுமதி அட்டை வழங்கப்படுதலானது அவ் விண்ணப்பதாரி பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என ஏற்றுக்கொண்டதாக கருதப்படமாட்டாது.

08. விண்ணப்பதாரிகளின் ஆளடையாளம் :

விண்ணப்பதாரி ஒருவர் தாம் தோன்றும் எல்லா விடயதானங்கள் தொடர்பாகவும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்தியடையும் வகையில் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல் வேண்டும். இதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

அ) தேசிய ஆளடையாள அட்டை;

ஆ) செல்லுப்படியாகும் கடவுச்சீட்டு;

இ) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

09. பொய்யான தகவல்களை சமர்ப்பிப்பதால் வழங்கப்படும் தண்டனை;

விண்ணப்பதாரி ஒருவர் தகைமைகளை கொண்டிருக்கவில்லை என பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் காலத்தில் அல்லது பரீட்சையின் பின்னர் அல்லது ஏதேனும் சந்தர்ப்பத்தில் தெரியவருமாயின் அவருடைய விண்ணப்பம் இரத்துச் செய்யப்படும். விண்ணப்பதாரி ஒருவர் வேண்டுமென்றே பொய்யான தகவல்களை வழங்கியுள்ளமை தெரியவருமாயின், அல்லது ஏதேனும் முக்கியமான விடயமொன்றை வேண்டுமென்றே மறைத்திருப்பின் பகிரங்க சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு வாய்ப்புள்ளது.

10. இவ் ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்படாத விடயங்கள் ஏதுமிருப்பின் அவ்விடயங்கள் தொடர்பாக நீதிச்சேவை ஆணைக்குழு வின் ஆலோசனைக்கு அமைய நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு ஏற்ப நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

11. (அ) பரீட்சை சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் நடைபெறும்.

(ஆ) அரச சேவைக்குள் நுழைவதற்கு தகைமை பெறுவதற்கான பரீட்சையில் / நேர்முகப்பரீட்சையில் சித்தி பெற்ற மொழியில் அல்லது அரச கரும மொழியிலேயே விண்ணப்பதாரி ஒருவர் பரீட்சைக்கு தோற்ற வேண்டும்.

**குறிப்பு :**

i. சகல விண்ணப்பதாரிகளும் அனைத்து வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழியில் விடையளிக்க வேண்டும்.

ii. விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைக்கு தோற்றும் மொழியினை மாற்றுவதற்கு விண்ணப்பதாரிகளுக்கு இடமளிக்கப்படமாட்டாது.

iii. பரீட்சை பெறுபேறுகள் - தபால் மூலமாக அல்லது www.results.exams.gov.lk இணையத்தளம் ஊடாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை பெறுபேறுகள் அறிவிக்கப்படும்.

12. எழுத்துப் பரீட்சைக்கான பாடத்திட்டம் :

**(i) தாபனவிதிக் கோவை மற்றும் நிதிப்பிரமாணங்கள்.**

**தாபனவிதிக் கோவை**

- ஆட்சேர்ப்புத் திட்டங்களும் நியமிப்புக்களும் ( II வது அத்தியாயம்)
- மாதச்சம்பளம், தற்காலிக தகுதிநிலை, நிரந்தர தகுதிநிலை மற்றும் ஓய்வூதிய உரிமை (IV வது அத்தியாயம் )
- விடுவித்தல், முன்னர் வகித்த பதவிக்கு மீள அனுப்புதல் மற்றும் சேவையை முடிவுறுத்தல். (V வது அத்தியாயம்)
- சம்பளங்கள் (VII வது அத்தியாயம் )
- மேலதிக நேரப் படிகள், விடுமுறை நாட்கள் மற்றும் விடுமுறை நாட்களுக்கான சம்பளங்கள் மற்றும் படிகள் (VIII வது அத்தியாயம் )
- விடுமுறை (XII வது அத்தியாயம் )
- புகையிரத ஆணைச்சீட்டுக்கள் (XIII வது அத்தியாயம் )
- சம்பளக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் (XXIV வது அத்தியாயம் )
- உத்தியோகத்தர்களுடைய உடற்றகுதி பற்றிய மருத்துவ பரிசோதனையும் மருத்துவ பராமரிப்பும் (XXVI வது அத்தியாயம் )
- தொடர் பிணைப்பு வழி (XXVII வது அத்தியாயம் )
- அரச உத்தியோகத்தர்கள் தொடர்பாக அரசிற்குள்ள தத்துவங்கள் ( XXX வது அத்தியாயம் )
- சட்ட மதியுரைகளும் சட்ட நடவடிக்கைகளும் (XXXIII வது அத்தியாயம் )
- தாபன விதிக்கோவையின் பகுதி – II (XLVII, XLVIII அத்தியாயங்கள்)

**நிதிப்பிரமாணங்கள்.**

- வருமானங்கள் மற்றும் செலவீனங்கள் பற்றிய மதிப்பீடு (I வது அத்தியாயம் )
- செலவீனங்கள், கை விடல், மீள செலுத்துதல் ஆகியவை தொடர்பிலான அதிகாரம் (II வது அத்தியாயம் )
- நிதிக் கட்டுப்பாடு மற்றும் கணக்கு வைக்க இயலல்.(III வது அத்தியாயம் )
- பெறுவனவுகள் (IV வது அத்தியாயம் )
- கொடுப்பனவுகள் (Payments) (V வது அத்தியாயம் )
- அரச நிதி தொடர்பிலான பொறுப்பு, முற்பண மற்றும் வங்கிக் கணக்கு (VI வது அத்தியாயம் )
- கணக்கு வைத்தல் (VII வது அத்தியாயம் )
- முற்பணக் கணக்கு (VIII வது அத்தியாயம் )
- நீதிமன்றங்களின் கணக்குகள் (X வது அத்தியாயம் )

மற்றும்

- அரச கொள்முதல் நடைமுறைகள் (Government Procurement Process)

தொடர்பான அறிவு எதிர்பார்க்கப்படும்.

**(ii) நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம்**

நிர்வாக மற்றும் முகாமைத்துவ களத்தில் ஏற்படக் கூடிய நிகழ்வுகள்/பிரச்சினைகள் சில முன் வைக்கப்பட்டு அந்நிகழ்வுகளுக்கு / பிரச்சினைகளுக்கு உரிய துலங்கலை வெளிக்காட்டல் மற்றும் அந்நிகழ்வுகளை / பிணக்குகளை தீர்ப்பதற்கு விண்ணப்பதாரிகளிடமுள்ள கோட்பாட்டு மற்றும் நடைமுறை ரீதியான அறிவினை பரீட்சிப்பதனை நோக்கமாகக் கொண்ட வினாக்கள் முன் வைக்கப்படும்.

**(iii) ஆங்கில மொழித் தேர்ச்சி**

இவ்வினாப்பத்திரமானது க.பொ.த. (சா.த.) ஆங்கில வினாப்பத்திரத்திற்கு ஒத்த வகையில் தயாரிக்கப்படும். அதற்கு சமமான அறிவு இதனால் எதிர்பார்க்கப்படுகின்றது.

**(iv) இலங்கையின் பொருண்மை மற்றும் நடவடிக்கைமுறைச் சட்டங்கள்**

- அரசியலமைப்புச் சட்டம்
- நீதியியற் சட்டம்
- 1979 ஆம் ஆண்டு 44 ஆம் இலக்க ஆரம்ப நிலை நீதிமன்ற வழக்குகள் சட்டம்
- தண்டனைச் சட்டக் கோவை
- சான்றுக் கட்டளைச் சட்டம்
- குற்றவியல் நடபடிமுறைக் கோவை
- குடியியல் நடபடிமுறைக் கோவை

தொடர்பான அறிவு இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

**குறிப்பு** :

தெளிவற்ற கையெழுத்தைக் கொண்ட விடைப்பத்திரங்களுக்கான புள்ளிகள் குறைக்கப்படலாம்.

இவ்வினாப்பத்திரங்கள் பல்தேர்வு வினாக்கள், சுருக்க வினாக்கள், கட்டமைப்பு ரீதியான வினாக்கள், கட்டுரை வினாக்களை கொண்டதாகும்.

13. இவ்வறிவித்தலின் சிங்கள, தமிழ், ஆங்கில மொழி வாசகங்களுக்கிடையில் முரண்பாடுகள் காணப்படுமாயின் அச்சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூல அறிவித்தலுக்கு அமைவாகவே செயற்படுதல் வேண்டும்.

நீதிச்சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

எச்.எஸ். சோமரத்ன,
செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம்,
கொழும்பு - 12,
2019, பெப்புருவரி 01.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்றப் பதிவாளர் தரம் III இற்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை (எழுத்து) – 2018 (2019)**

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

01. மொழி
பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலம்:
சிங்களம் - 2
தமிழ் - 3 ☐
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்.)

02. பிரத்தியேக தகவல்கள் :

2.1 முழுப் பெயர் : ..........................................................................................
(ஆங்கில கெபிடல் எழுத்துக்களில்)

2.2 முதலெழுத்துக்களுடன் பெயர் : திரு./ திருமதி/ செல்வி ..........................................................
(முதலெழுத்துக்களை பின்னால் குறிப்பிடுக.)
(ஆங்கில கெபிடல் எழுத்துக்களில்) உதாரணம் : SRIWARDANA, A.P.K.

2.3 முழுப் பெயர் : ..........................................................................................
(சிங்களத்தில் / தமிழில்)

2.4 அலுவலக முகவரி (ஆங்கில கெபிடல் எழுத்துக்களில்) : (அனுமதி அட்டை இம் முகவரிக்கு அஞ்சலிலிடப்படும்.)
..........................................................................................
..........................................................................................

2.5 அலுவலக முகவரி (சிங்களத்தில் / தமிழில்) : ..........................................................
..........................................................................................

2.6 பிரத்தியேக முகவரி (சிங்களத்தில் / தமிழில்) : ..........................................................
..........................................................................................

2.7 வசிக்கும் மாவட்டம் : ..........................................................................................

2.8 பால் நிலை : ஆண் - 0 பெண் - 1 ☐
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்.)

2.9 தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

2.10 விவாக அந்தஸ்த்து : திருமணமானவர் - 1 திருமணமாகாதவர் - 2 ☐
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடுக.)

2.11 பிறந்த திகதி :-
ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

2.12 2019.02.01 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

2.13 தொலைபேசி இலக்கம் :

நிலையானது : ........................ கையடக்கத் தொலைபேசி : ...............

03. (அ) i. நீதிமன்ற முகாமைத்துவ உதவியாளர் சேவைக்கு உள்வாங்கப்பட்ட திகதி : ..........................

- அந்நியமனத்தில் நிரந்தரமாக்கப்பட்ட திகதி :- ...............................................
- அச்சேவைக்காலம் :- .......................................................

ii. நீதிமன்ற அபிவிருத்தி உத்தியோகத்தர் (நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் / கணக்கீட்டு உதவியாளர்) சேவைக்கு உள்வாங்கப்பட்ட திகதி :- .......................................

- அந்நியமனத்தில் நிரந்தரமாக்கப்பட்ட திகதி :- ...............................................
- அச்சேவைக்காலம் :- .......................................................

iii. நீதிமன்ற குடும்ப ஆலோசகர் சேவைக்கு உள்வாங்கப்பட்ட திகதி : ..................................

- அந்நியமனத்தில் நிரந்தரமாக்கப்பட்ட திகதி :- ...............................................
- அச்சேவைக்காலம் :- .......................................................

(ஆ) விண்ணப்பதாரி பட்டதாரி எனின்,

1. பட்டம் : .................................
2. பட்டப்படிப்பினைப் பூர்த்தி செய்த திகதி : .................................
3. பல்கலைக்கழகம் : ...................................

(இ) அதற்கு சமமான கல்வி அல்லது தொழிற் தகைமைகள் :

1. பல்கலைக்கழகம் / நிறுவனம் : ...............................................
2. தகைமைகள் : ......................................................
3. தகைமைகளைப் பூர்த்தி செய்த திகதி : ..............................................

(ஈ) உயர்நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்த திகதி : ..........................

04. வேறு தகைமைகள் : .........................................................................................

05. சேவைக்காலத்தினுள் ஏதேனும் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு ஆளாகியுள்ளீர்களா ? அவ்வாறெனின் அது தொடர்பிலான தகவல்களை சுருக்கமாக குறிப்பிடுக. : ................................................................

..........................................................................................................................................................

06. நீங்கள் எப்போதாவது நீதிமன்றமொன்றினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா ?
(உரிய கூட்டினுள் ( √ ) அடையாளமிடுக.

ஆம் ☐ இல்லை ☐

ஆம் எனின் விபரம் தருக.

.......................................................................................................................................

..........................................................................................................................................

07. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு தொடர்பான விபரங்கள் :-

பரீட்சைக்கட்டணம் செலுத்திய அலுவலகம் : ...................................

பற்றுச்சீட்டு இலக்கம் மற்றும் திகதி : .....................................

செலுத்திய பணம் : ...................................

| |
|---|
| பற்றுச்சீட்டினை அகற்ற முடியாதவாறு இங்கே ஒட்டவும்.<br>(பற்றுச்சீட்டின் பிரதியொன்றினை உங்கள் வசம் வைத்திருப்பது பயன்மிக்கதாய் இருக்கும்.) |

08. விண்ணப்பதாரியின் உறுதியுரை:

(அ) இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்த வகையில் சரியானவையும் உண்மையானவையும் என தெரிவித்துக் கொள்கின்றேன். இதில் யாதேனும் பகுதிகள் நிரப்பப்படாமல் மற்றும் / அல்லது பிழையாக நிரப்பப்படுவதனால் ஏற்படக் கூடிய விளைவுகளை ஏற்றுக்கொள்வதற்கு இணங்குகின்றேன். மேலும் இவ்விண்ணப்பப்படிவத்தின் அனைத்துப் பகுதிகளும் சரியான முறையில் நிரப்பப்பட்டுள்ளன என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(ஆ) என்னால் வழங்கப்பட்ட கூற்று பிழையானது என நிரூபிக்கப்பட்டால், நியமனம் பெறுவதற்கு முன்னர் தகைமையற்றவர் ஆவதற்கும் நியமனம் பெற்ற பின்னர் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதனையும் நன்கறிவேன்.

(இ) மேலும், பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதலுடன் தொடர்புடையதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் விதிகளுக்கு நான் கீழ்ப்படிகின்றேன் என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(ஈ) இதில் குறிப்பிடப்பட்டுள்ள எந்த தகவலையும் பின்னர் மாற்றம் செய்யமாட்டேன்.

.......................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி : .....................

*09.* ***விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்.***

*இவ்விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ............................. என்பவர் இந்நீதிமன்றத்தில் நீதிமன்ற .................................. பதவியில் ..................... தரத்தில் சேவையாற்றுகின்றார் என்பதனையும் 2019.02.01 ஆந் திகதிக்கு முன் அண்மித்த காலப்பகுதியினுள் அவருக்குரிய சம்பளவேற்றங்கள் அனைத்தையும் உழைத்துள்ளார் என்பதனையும் அக்காலப்பகுதியினுள் தவறொன்றுக்காக எவ்வித ஒழுக்காற்று தண்டனைக்கும் உட்படவில்லை என்பதனையும், வர்த்தமான அறிவித்தலின் 4 ஆவது பந்திக்கு அமைவாக சகல தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளார் என்பதனையும் பிரத்தியேக கோவைக்கு அமைவாகவும் உரிய வர்த்தமானப் பத்திரிகைகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கு அமைவாகவும் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகைமைகளை பெற்றுள்ளார் என்பதனையும் உரிய பரீட்சைக்கட்டணத்தை செலுத்தியுள்ளார் என்பதனையும் அப்பற்றுச்சீட்டினை உரிய முறையில் ஒட்டியுள்ளார் என்பதனையும் எனது முன்னிலையில் ........................ ஆந் திகதி அவரது கையொப்பத்தை இட்டார் என்பதனையும் உறுதிப்படுத்துகின்றேன்.*

*திகதி : .............................* ............................................

*உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம்.*
*(நீதிமன்ற பதிவாளரின் கையொப்பம்).*

*உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் முழுப் பெயர் : ............................*
*பதவி : .....................................................*
*முகவரி : .................................................*
*(உத்தியோகப்பூர்வ முத்திரையினால் உறுதிப்படுத்துக.)*

*திணைக்களத் தலைவரின் சான்றுரை*

*இத் திணைக்களத்தில் ........................................... சேவையாற்றும் திரு./திருமதி/செல்வி ................................ ........... நீதிமன்ற ....................... பதவியில் சேவையாற்றுகின்றார் என்பதனையும் 2019.02.01 ஆந் திகதிக்கு முன் அண்மித்த காலப்பகுதியினுள் அவருக்குரிய சம்பளவேற்றங்கள் அனைத்தையும் உழைத்துள்ளார் என்பதனையும் அக்காலப்பகுதியினுள் தவறொன்றுக்காக எவ்வித ஒழுக்காற்று தண்டனைக்கும் (எச்சரிக்கை தவிர) உட்படவில்லை என்பதனையும், வர்த்தமானி அறிவித்தலின் 4ஆவது பந்திக்கு அமைவாக சகல தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளார் என்பதனையும் பிரத்தியேக கோவைக்கு அமைவாகவும் உரிய வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கு அமைவாகவும் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகைமைகளை பெற்றுள்ளார் என்பதனையும் உரிய பரீட்சைக்கட்டணத்தை செலுத்தியுள்ளார் என்பதனையும் அப்பற்றுச்சீட்டினை உரிய முறையில் ஒட்டியுள்ளார் என்பதனையும் எனது முன்னிலையில் ........................ ஆந் திகதி அவரது கையொப்பத்தை இட்டார் என்பதனையும் உறுதிப்படுத்துகின்றேன்.*

.........................
*திணைக்களத் தலைவரின் கையொப்பம்,*
*(உத்தியோகப்பூர்வ) முத்திரை.*

*திகதி :----.*

*2-445*

---

## தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் புள்ளிவிபர உத்தியோகத்தர் தரம் I இற்கான இரண்டாவது *வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை 2013 (2019)*

## SECOND EFFICIENCY BAR EXAMINATION FOR GRADE I STATISTICAL OFFICERS IN THE DEPARTMENT OF CENSUS AND STATISTICS - 2013 (2019)

*01.* *தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் புள்ளி விபர உத்தியோகத்தர் பதவிக்குரிய அலுவலர்கள் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத்திட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் புள்ளிவிபர உத்தியோகத்தர் தரம் I பதவிக்கான இரண்டாவது*

*வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் 2019, மே மாதத்தில் நடாத்தப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகிறது.*

2. (i) *இப்பரீட்சை இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுவதுடன் பரீட்சையை நடாத்துதல், பெறுபேறுகளை வெளியிடுதல் சம்பந்தமாக அவரால் விதிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும். பரீட்சை நடத்துதல் மற்றும் பெறுபேறு வெளியிடல் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.*

(ii) *பரீட்சார்த்திகளுக்கான விதிமுறைகள், வர்த்தமானியில் பிரத்தியேகமாக அச்சிடப்பட்டுள்ளது. இவ்விதிமுறைகளை மீறுமிடத்து, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும்.*

3. ***பரீட்சைக் கட்டணம்:***

*பரீட்சைக்குரிய பாடங்கள் பொருட்டு ஒரே தடவையில் அல்லது வெவ்வேறான இரு தடவைகளில் தோற்ற முடியும். முழுமையாக அல்லது ஒரு பாடத்திற்கு முதல் தடவையாக தோற்றும் பரீட்சார்த்திகளிடமிருந்து பரீட்சைக் கட்டணம் அறவிடப்படமாட்டாது அதன் பின்னர் தோற்றும் ஒவ்வொரு தடவையும் ஒரு பாடத்துக்கு ரூபா 250 உம். மொத்தப் பாடங்கள் பொருட்டு ரூபா 500 உம், பரீட்சைக் கட்டணமாக அறவிடப்படும். இப்பரீட்சைக் கட்டணம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இற்கு வரவு வைக்கும் வகையில் நாட்டின் எந்த ஒரு தபால்/உப தபால் அலுவலகத்திற்கு அல்லது மாவட்டச் செயலகத்திற்கு அல்லது பிரதேசச் செயலகத்திற்கு செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் உரிய பகுதியில் கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும். இந்தப் பரீட்சைக் கட்டணத்துக்கு மேலதிகமாக எவ்வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது. (பற்றுச்சீட்டின் பிரதியை வைத்திருத்தல் பயனுள்ளதாகும்) பரீட்சைக் கட்டணத்தின் பொருட்டு காசுக் கட்டளையோ அல்லது முத்திரையோ ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் செலுத்தப்பட்ட பணம் எந்தவொரு காரணத்திற்காகவும் மீளச் செலுத்தப்படவோ அல்லது வேறு பரீட்சையின் பொருட்டு மாற்றப்படவோ மாட்டாது.*

4. ***விண்ணப்பப்படிவம் அனுப்ப வேண்டிய முறை:***

*விண்ணப்பப்படிவம் இங்கு இணைக்கப்பட்டுள்ள மாதிரிக்கு அமைய தயாரிக்கப்படுதல் வேண்டும். இவ்விண்ணப்பப்படிவம் A4 தாளின் இரு பக்கத்தையும் பயன்படுத்தித் தயாரிக்கப்படுவதுடன் தலைப்பு இல. 01 இலிருந்து 05 வரை முதலாம் பக்கத்திலும் ஏனையவை இரண்டாம் பக்கத்திலும் அமையும் வண்ணம் தயாரிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பம் தயாரிக்கும் போது தலைப்பில் குறிப்பிட்ட பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பதாரிகள் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பதாரிகள் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பப்படிவம் தட்டச்சிடப்பட்டு தயாரிக்கப்பட இயலுமாயினும் அதனை சரியாகவும் தெளிவாகவும் விண்ணப்பதாரியின் கையெழுத்தால் பூரணப்படுத்துதல் வேண்டும். அவ்வாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் விண்ணப்பதாரிகளால் திணைக்கள தலைவர் ஊடாக, 2019, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்குமாறு "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு (நிறுவனம் சார் மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள்) கிளை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் த. பெ. இல. 1503, கொழும்பு" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவம் வைத்தனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். பூரணமற்ற தகவல்களைக் கொண்ட விண்ணப்பங்களும் கையேற்கும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும். மேலும் பூர்த்தி செய்த விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிட்ட மாதிரிப் படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும் விண்ணப்பதாரிகள் சரிபார்த்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பம் நிராகரிக்கப்படும். (பூர்த்தி செய்த விண்ணப்பப்படிவத்தின் பிரதியை வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.)*

5. ***பரீட்சார்த்தியின் ஆளடையாளம் :***

*பரீட்சார்த்திகள் பரீட்சை நிலையத்தில் தோற்றும் பாடத்தின்போதும் பரீட்சை நிலையப் பொறுப்பாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதன் பொருட்டு பின்வரும் ஆவணங்களில் ஒன்று ஏற்றுக் கொள்ளப்படும்.*

I. *தேசிய ஆளடையாள அட்டை;*

II. *செல்லுபடியாகும் கடவுச்சீட்டு;*

III. *செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.*

மேற்குறிப்பிட்ட ஆவணமொன்றை சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி சம்பந்தமான பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

6. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளார்கள் எனும் எடுகோளின் பேரில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட வயதெல்லையினுள், விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் சரியாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை நேர அட்டவணை பிரதியுடன் அனுமதி அட்டையும் வழங்கப்படும். பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டை வழங்கப்பட்டவுடன் அதுபற்றிய அறிவித்தல் செய்தித்தாள்களிலும் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலும் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 02 அல்லது 03 தினங்களின் பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காவிடின் அதுபற்றி அறிவித்தலில் குறிப்பிட்ட தொலைபேசி இலக்கங்கள் மூலம் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். அதன்போது விண்ணப்பதாரரின் முழுப்பெயர், முகவரி, தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் மற்றும் பரீட்சையின் பெயர் என்பவற்றை குறிப்பிடுதல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு விசாரிக்கும் போது விண்ணப்பதாரர் தம் வசம் வைத்திருந்த விண்ணப்பப்படிவத்தின் பிரதியையும், பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதியையும், தபால் கந்தோரில் பதிவு செய்த பற்றுச்சீட்டையும் கைவசம் வைத்திருத்தல் முக்கியமானதாகும். கொழும்புக்கு வெளியேயுள்ள பிரதேசமாயின் அனுமதி அட்டையின் பிரதியொன்றை அனுப்புவதற்காக தொலைநகல் இலக்கத்துடன் மேற்குறிப்பிட்ட தகவல்களையும் குறிப்பிட்டு தங்களின் வேண்டுகோள் கடிதத்தை தொலைநகல் மூலம் பரீட்சைகள் திணைக்களத்துக்கு அனுப்பி விசாரித்தலும் மிகப் பொருத்தமானதாகும்.

6.1 பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்போது காணப்பட்ட விண்ணப்பதாரியின் பதவி, சேவை நிலையம் என்பன பரீட்சை சம்பந்தமான சகல நடவடிக்கைகளுக்கும் ஏற்புடையன என்பதுடன் விண்ணப்பம் அனுப்பப்பட்டதன் பின்னர் அது தொடர்பில் இடம் பெறும் மாற்றங்கள் எதுவும் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

6.2 பரீட்சைக்கான அனுமதி அட்டையில் பரீட்சார்த்தியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். பரீட்சார்த்தி அனுமதி அட்டையில் தமது கையொப்பத்தை நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரைக் கொண்டு உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

6.3 பரீட்சைத் தினத்தன்று தனது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொண்டு அனுமதி அட்டையை பரீட்சை நிலையப் பொறுப்பாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும். அனுமதி அட்டையை சமர்ப்பிக்காத பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள்

7. இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் வழங்கப்பட்ட அனுமதி அட்டையுடன் முதல் முறையாக பரீட்சைக்குத் தோற்றும் உத்தியோகத்தர்களுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஏற்ற வகையில் திணைக்களத் தலைவரினால் கடமை லீவு வழங்கப்படுதல் வேண்டும். பிரயாணக் கட்டணம் வழங்கப்பட மாட்டாது.

8. 8.1 இப்பரீட்சை தமிழ், சிங்களம், ஆங்கில மொழி மூலங்களில் மாத்திரம் நடாத்தப்படும் விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலமாக, போட்டிப் பரீட்சை ஒன்றின் ஊடாக சேவையில் இணைந்தவராயின் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றிய மொழியையும் போட்டிப் பரீட்சையின்றி அரச சேவையில் இணைந்தவராயின் அரச சேவையில் இணைவதற்கு ஏற்புடைய பரீட்சைக்குத் தோற்றிய மொழியையும் மொழி மூலமாகத் தெரிவு செய்தல் வேண்டும். பரீட்சைக்குரிய சகல பாடங்களுக்கும் ஒரே மொழிமூலத்தைப் பயன்படுத்துதல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பித்த மொழிமூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

8.2 பரீட்சையில் சித்தியடையும் பொருட்டு ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் பெற வேண்டிய ஆகக்குறைந்த புள்ளி அளவு 40% ஆகும். பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பதாரிகளின் புள்ளிகள் அடங்கிய ஆவணமொன்று பணிப்பாளர் நாயகம், தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்திற்கு இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் வழங்கப்படும். பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், பெறுபேறுகளை பரீட்சைக்கு தோற்றிய விண்ணப்பதாரிகளுக்கு தனிப்பட்ட ரீதியில் அறிவிக்க மாட்டார். பரீட்சைக்குரிய பாடங்களை ஒரே தடவையில் அல்லது சில தடவைகளில் பூர்த்தி செய்வதற்கு விண்ணப்பதாரிகளுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

9. இப்பரீட்சை கொழும்பில் மாத்திரம் நடைபெறும்.

10. **பரீட்சைப் பாடத்திட்டம்** :

மேற்படி பதவிக்கு உரிய பரீட்சை கீழ் குறிப்பிட்ட பாடங்களை உள்ளடக்கும்.

| பாடம் | நேரம் | புள்ளிகள் | சித்திப் புள்ளிகள் |
|---|---|---|---|
| 1. அலுவலக நிர்வாகமும் தாபன விதிக்கோவையும் | 02 மணி | 100 | 40% |
| 2. நிதி ஒழுங்கு விதிகள் | 02 மணி | 100 | 40% |

| | வினாப்பத்திரம் | பாடத்திட்டம் |
|---|---|---|
| 1. | அலுவலக நிர்வாகமும் தாபன விதிக்கோவையும் | இதன் பொருட்டு தாபன விதிக்கோவையின் XV, XVI, XXIII, XXIV, XXV, XXVII, XXVIII, XXX, XXXIII, XLVII, XLVIII ஆகிய அதிகாரங்களையும் அவ்வதிகாரங்கள் மீதும் திருத்தஞ் செய்யப்பட்ட சுற்றறிக்கைகள் மீதும் கவனம் செலுத்துதல் வேண்டும்.<br><br>வினாப்பத்திரத்தின் கட்டமைப்பு:<br>a) மொத்த வினாக்களின் எண்ணிக்கை 05 ஆகும். 1 அம் வினா கட்டமைக்கப்பட்ட சிறிய 10 வினாக்களைக் கொண்டுள்ளன. ஏனைய 04 வினாக்களும் கட்டுரை வடிவிலான வினாக்களாகும். |
| 3. | நிதி ஒழுங்கு விதிகள் | b) எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.இது நிதி ஒழுங்குவிதிகளின் கீழ் குறிப்பிட்ட அதிகாரங்களை உள்ளடக்கும்.<br><br>➢ VI ஆம் அதிகாரம் - அரசாங்க நிதிப் பொறுப்பு, கட்டுநிதி, வங்கிக் கணகள்கு, அரச நிதிப் பாதுகாப்பு, சுற்றாய்வுச் சபை, மேலதிகப் பற்று, வங்கிக் கணக்குகள் (நி.ஒ.315 - 396 வரை)<br><br>➢ பெறுகை வழிகாட்டல்கள் 2006 - பொருட்கள், வேலைகளின் கீழ் பெறுகைச் செயன்முறை<br><br>வினாப்பத்திரத்தின் கட்டமைப்பு:<br>a) மொத்த வினாக்களின் எண்ணிக்கை 05 ஆகும். 1 ஆம் வினா கட்டமைக்கப்பட்ட சிறிய 10 வினாக்களை கொண்டுள்ளன. ஏனைய 04 வினாக்களும் கட்டுரை வடிவிலான வினாக்களாகும்.<br>b) எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். |

**குறிப்பு**

- ➢ மேற்படி பாடங்களுக்கு தனித்தனியாகவும் தோற்ற முடியும்.
- ➢ குறித்த காலத்தில் பரீட்சையில் சித்தியடையாமை அதன் பின்னரான வேதன ஆண்டேற்றத்தை பிற்போடுவதற்கு ஏதுவாகலாம்.

11. பரீட்சார்த்திக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படுதலானது, அவர் பரீட்சைக்குத் தோற்ற தகைமையுள்ளவர் எனக் கருதப்படுதலாகாது.

12. பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட திட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். குறித்த சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு ஆளாக அவருக்கு நேரிடும்.

13. இவ் வர்த்தமானி அறிவித்தலில் கூறப்பட்ட ஏற்பாடுகள் தவிர்ந்த வேறு ஏதேனும் விடயம் தொடர்பில் தொகை மதிப்பு புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

14. இவ்வறிவித்தலின் சிங்கள, தமிழ், ஆங்கிலப் பதிப்புகளில் ஏதேனும் குறைபாடுகள் இருப்பின் சிங்களப் பதிப்பில் குறிப்பிட்ட விடயங்களே உத்தியோகபூர்வமானவையாகும்.

பணிப்பாளர் நாயகம்,
தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்.

"சங்கியான மந்திரய",
இல. 306/71, பொல்துாவ வீதி,
பத்தரமுல்லை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் புள்ளிவிபர உத்தியோகத்தர் தரம் I இற்கானஇரண்டாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை 2013 (2019)**

**FIRST EFFICIENCY BAR EXAMINATION FOR GRADE I STATISTICAL OFFICERS IN THE DEPARTMENT OF CENSUS AND STATISTICS - 2013 (2019)**

(அலுவலக உபயோகத்திற்காக)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதுக.)

01. 1.1 முழுப் பெயர் : ..................................................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) (உதாரணம்: HERATH MUDIYANSELAGE SAMAN KUMAR A GUNAWARDHANA)

1.2 இறுதிப் பெயரை முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்களை இறுதியிலும் இட்டு பெயர்: .................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) உதாரணம்:GUNAWARDHANAH.M.S.K.
..................................................

1.3 முழுப் பெயர்: ..................................................
(தமிழில் /சிங்களத்தில்)

02. 2.1 அலுவலகத்தின்/திணைக்களத்தின்/நிறுவனத்தின் பெயரும் முகவரியும் : ..................................................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)
(அனுமதி அட்டை இந்த முகவரிக்கு தபாலில் அனுப்பப்படும்.)

2.2 அலுவலகத்தின்/திணைக்களத்தின்/நிறுவனத்தின் பெயரும் முகவரியும்:
(தமிழில் /சிங்களத்தில்) ..................................................

2.3 தனிப்பட்ட முகவரி :
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)..................................................

2.4 தொலைபேசி இலக்கம்:

கையடக்க தொலைபேசி

நிலையான தொலைபேசி

03. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

04. பால் :
பெண்- 1
ஆண் - 0
(உரிய இலக்கத்தை கூட்டில் எழுதுக.)

05. நீங்கள் இம்முறை தோற்றவுள்ள பாடம்/பாடங்கள்:

| தொடரிலக்கம் | பாடம் | பாட இலக்கம் |
|---|---|---|
| 01. | | |
| 02. | | |

06. பிறந்த திகதி :

ஆண்டு | | | | | மாதம் | | | திகதி | | |

07. தற்போது வகிக்கும் பதவி :

7.1 பதவி : ............................................

7.2 நியமனக் கடித இலக்கம் :.......................................

08. 8.1 நீங்கள் பரீட்சைக்கு முதற்தடவையாகவா தோற்றுகிறீர்கள்? :....................

8.2 முதற் தடவையல்லாவிடின் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் :..................

8.3 பற்றுச்சீட்டு இல. : ..................

8.4 திகதி : ..........................

பற்றுச்சீட்டை இங்கு ஒட்டவும். (ஏற்புடையதாயின் மட்டும்.)
(பற்றுச்சீட்டின் பிரதியை வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.)

09. விண்ணப்பதாரரின் வெளிப்படுத்துகை:

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை என்றும் மேற்குறிப்பிட்ட மொழிமூலத்தில் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியுடையவனாவேனென்றும் பரீட்சைக் கட்டணமாக ரூபா ............ செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டு இங்கு ஒட்டப்பட்டுள்ளதென்றும் தெரிவித்துக் கொள்வதுடன் இப் பரீட்சையை நடத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் சம்பந்தமாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு ஏற்ப அமைந்தொழுக உடன்படுகின்றேன் என்றும் வெளிப்படுத்துகின்றேன்.

.....................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :...............................

**குறிப்பு**.-தமது திணைக்களத்தலைவர் அல்லது திணைக்களத்தலைவர் சார்பாக கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் முன்னிலையில் விண்ணப்பதாரி கையொப்பமிடுதல் வேண்டும்.

10. கையொப்பத்தை சான்றுப்படுத்தல்

திரு./திருமதி/செல்வி ...................................... எனது திணைக்களத்தில் சேவையாற்றுகிறார் என்றும் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும் ................................ ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் உறுதிப்படுத்துகிறேன்.

.............................
கையொப்பத்தை உறுதிப்படுத்தும் அலுவலரின் கையொப்பம்.

பெயர் : ---------------------------------------------
பதவி : ---------------------------------------------
முகவரி : ---------------------------------------------
திகதி : ---------------------------------------------

(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தவும்)

11. திணைக்களத் தலைவரின் சான்றுரை:

1. மேலே வழங்கப்பட்ட விபரங்கள் சரிபார்க்கப்பட்டதென்றும்;
2. உத்தியோகத்தர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியுடையவர் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

-------------------------------------
திணைக்களத் தலைவரின் கையொப்பமும் பதவி முத்திரையும்.

பெயர் : --------------------------------
பதவி : --------------------------------
முகவரி : --------------------------------
திகதி : --------------------------------

2-274/2

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
***2014 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது***
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரலலை" என்பதே காசுக் கட்டளைகளுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரைப் பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,600 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2014 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்குமான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு.**- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | **அட்டவணை - 2019** | | | | |
| **பெப்புருவரி** | .. | வெள்ளி | 01.02.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.01.2019 |
| | | வெள்ளி | 08.02.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.01.2019 |
| | | வெள்ளி | 15.02.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.02.2019 |
| | | வெள்ளி | 22.02.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.02.2019 |
| **மாச்சு** | .. | வெள்ளி | 01.03.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.02.2019 |
| | | வெள்ளி | 08.03.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.02.2019 |
| | | வெள்ளி | 15.03.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.03.2019 |
| | | வெள்ளி | 22.03.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.03.2019 |
| | | வெள்ளி | 29.03.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.03.2019 |
| **ஏப்பிறல்** | .. | வெள்ளி | 05.04.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.03.2019 |
| | | வெள்ளி | 12.04.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.03.2019 |
| | | வியாழன் | 18.04.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.04.2019 |
| | | வெள்ளி | 26.04.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.04.2019 |

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.